Koviloor Digital Library

ஆனந்த ஸ்ரீஹரி

KARTHIKA
Acc. No.
12271

ஸ்ரீ வைஷ்ணவ MINI இலக்கியம்

வேம்பத்தூர் கிருஷ்ணன்

Koviloor Digital Library

Koviloor Digital Library 4-2

"பழங் கதைகளில் வாழ்வியல்"

டாக்டர் நல்லி குப்புசாமி செட்டியார்

அனைத்தும் இறைவனால் என்ற நம்பிக்கை மனிதனுக்கு இருக்க வேண்டும். அது, வாழ்க்கையில் ஒருவன் முன்னேறுவதற்கான உந்து சக்தியாக இருக்கும். அதைத் தர்க்கரீதியாகக் கேள்விகள் கேட்டு விவாதித்து முடிவு செய்துவிட முடியாது. நம் அனுபவத்திலிருந்து அதை உணர்ந்து கொள்ள வேண்டும்.

அனுபவம் தரும் பாடம், ஆயுளுக்கும் நிற்கும். அனால் எல்லோரும் தம் சொந்த அனுபவங்களின் வழியாக மட்டுமே பாடம் பெறுவது என்றால், அது இந்த ஆயுளில் நிறைவு பெறாது. பிறரது அனுபவங்களும் நமக்குப் பாடமாக அமைய வேண்டும்.

காற்றைப் பார்க்க முடியாது அதை உணர்ந்து கொள்ள முடியும். அதன் தாக்கத்தைக் காணலாம் என்பது போலவே, கடவுளின் கிருபையும் அமையும். இறையனுபவம் சில சமயங்களில் நமக்கே சித்திக்கும், வேறு சில சமயங்களில் மற்றவர்களுக்கும் வாய்க்கும். அவர்களிடமிருந்தும் நாம் கடவுள் நம்பிக்கை பற்றிய பாடங்களைப் பெற முடியும்.

நாத்திகர்களாக வாழ்க்கையைத் தொடங்கியவர்கள் கூடப் பிற்காலத்தில் ஆத்திகர்கள் ஆகியிருக்கிறார்கள். கடவுள், தோன்றாத் துணையாக அருள்புரிகிறார். இதையேதான் பாரதியாரும்

"மழைக்குக் குடை பசிநேரத்துக்கு உணவு
எங்கள் வாழ்விற்கு எந்தன் கண்ணன்" என்றார்.

Donated By :
NALLI CHINNASAMI CHETTY
SILK CLOTH & PIECE GOODS MERCHANTS
(SINCE- 1928)

"Nalli House,"
9, Nageswara Rao Road,
Opp. Panagal Park,
T.Nagar, Chennai - 600 017.
Ph : 4344115 / 4342775

Koviloor Digital Library

வில்வ மாமரச் செல்வநாயகி

"ஆதித்ய வர்ணே தபஸோதி ஜாதோ வனஸ்பதிஸ்தவ ஸ்தல விருக்ஷோத பில்வ:!" என்கிறது ஸ்ரீ ஸுக்தம்.

ஸ்ரீ மகாலட்சுமிக்கு உகந்த மகத்துவ விருக்ஷம் வில்வமாகும். ஹயக்ரீவத் திருத்தலமான திருவஹீந்திர புரத்திலே தாயாருக்கு வில்வார்ச்சனையே நடைபெறுகிறது.

'சஞ்சீவி விருக்ஷங்கள் நிறைந்த வில்வக் காட்டிலே, ஸ்ரீதேவி தவமிருந்தாள்' என்று காளிகாபுராணம் பேசுகிறது "மகாலெட்சுமியின் திருக்கரத்திலிருந்தே ஆதி வில்வம் தோன்றியது" சொல்வது – வாமனபுராணம். "ஸ்ரீ விருக்ஷம்' என்றே வில்வ மரத்திற்கு ஓர் பேருண்டு

"புஷ்ப பலன்" எனம் நூல் காட்டும் ஓர் பாடல்

"வில்வமே புனிதமாகும் விளம்புவில் வத்தின் மிக்காம்
வில்வமுள் சக்தியாகும் வில்வத்தின் கோடு வேதம்
வில்வவேர் பதினோருகோடி வியனுருத் திரரேயாகும்
வில்வமேத்து நர்க்கே தேவர்மெய்வடி வாகுமென்றே. ."

நமது ஆலயங்களிலுள்ள ஒவ்வொரு தலவிருக்ஷமும், வெட்டிவேர், மருக்கொழுந்து முதலான அனைத்துத் தாவரமலர் வேர்களும். . . எவ்வளவு முக்கியமானவை என்பதைப் பள்ளிப் பாடத்திலேயே பிள்ளைகளுக்குப் போதிக்கப்பட்டால். . . எதிர்காலத்திலே மரங்களும், மழைகளும் குறையாது! மாநுடம் என்றென்றும் அழியாது.

செல்வ நாயகியின் வில்வமரங்களைப் போற்றுவோம்
ஸ்ரீ ஹரியாலே வாழ்வில் ஜெயக்கொடி ஏற்றுவோம்.

Donated By : R. Ravichandran
Nandan Offset
36, AZIZ MULK 2ND STREET,
THOUSAND LIGHTS,
CHENNAI - 600 006.
PH : 8290989

Acc. No. 12271

Koviloor Digital Library

KOVILOOR ANDAVAR LIBRARY. KOVILOOR
A. No. 12271
4 - உ

ஆனந்த ஸ்ரீ ஹரி

ஸ்ரீகிரிதாரி பிரசாதின **கீதைப் பேருரை** நூல் முன்னுரையிலே

'அருட்செல்வர்' **நா. மகாலிங்கம்**

. . . "நம் இந்து தர்மத்தைப் பற்றிக் கூறும் நூல்களில் மிகவும் முக்கியமான நூல்கள். வேதம் உபநிஷதங்கள், இவற்றின் சாரமும் சுருக்கமுமாகிய கீதையும் தான்.

இந்தக் காலத்துப் பள்ளிப்படிப்பையோ, பட்டப்படிப்பையோ பெற்றவர்கள், தம்முடைய இந்து தர்ம நூல்களைப் படிப்பதில்லை. இந்தக் காலத்து அறிவைப் பெற்றவர்கள் தமக்குஉரிய தருமநூல்களைப் படிக்காமல் இருக்கிறார்கள். அதனால்தான் நாட்டில் பலவிதமான தீமைகள் ஏற்படுகின்றன.

மேற்கு நாடுகளில் உள்ளவர்களும் மற்ற சமயங்களைச் சேர்ந்தவர்களும், தங்களது மதநூல்களைப் படிக்காமல் அவற்றைப் புறக்கணிப்பதில்லை. மற்றசமயத்தைச் சேர்ந்தவர்கள் தங்களது தர்மநூல்களைப் படிக்கிறார்கள். படித்து, அவற்றைக் காலத்திற்கு ஏற்ப முறைப் படுத்துகிறார்கள். அப்படி முறைப்படுத்தப்பட்ட அவர்கள் மதங்களின் தரும நூல்கள், படித்த முற்போக்கானவர்களால் கவனமாகக் காப்பாற்றப்பட்டு வருகின்றன.

இந்துதர்மம் சீர்கெட்டுவருவதற்கு ஒரு பெரிய காரணம், நம் தேசத்திலே இருக்கும் மதநூல் கற்ற புலவர்களுக்கும், பட்டப்படிப்பைப் படித்தவர்களுக்கும் இடையில் ஏற்பட்டிருக்கும் பெரிய பிளவுதான்.

நம்முன்னோர்களின் அரிய தரும நூல்களை, இந்தக்காலக் கல்வியில் பட்டப்படிப்புப் பெற்றவர்கள் படித்து அறிய வேண்டும்.

Donated By :

ABT PARCEL SERVICE

10 /14-15 KALINGARAYAN STREET, RAM NAGAR,
COIMBATORE - 641 009 PH : 233566, 67, 68 & 69

Koviloor Digital Library

ராம, கிருஷ்ண துளசிகள்

"துள – சி" எனப்பதம் பிரித்தால் ஒப்பிலாத தாவரம் என்றாகிறது. ஆனந்த ஸ்ரீ ஹரியான திருமாலுக்கு, துளசிமாலை சாலச் சிறந்தது.

"தன் முடிவு ஒன்றும் இலாத – தண்துழாய் மாலையனை. . . ." என்கிறது நம்மாழ்வார் பாசுரம். சைவ, வைணவ அர்ச்சனை மற்றும் ஆராதனைப் பொருள் அனைத்துமே மருத்துவ ரீதியிலே மாந்தர்க்கு மகத்துவம் தருபவை. "பதார்த்த குண சிந்தாமணி" எனும் நூலிலே ஓர் பாடல்.

"ஐயம், வயிறு, உளைச்சல், அஸ்தி, சுரம் தாகமும் போம்
பைய சுரமாந்தம் பறக்கும் காண் – மெய்யா
வாயின் ரோசகம் போம் வன்சுர நஞ்சூடுள்ள
தூய துளசிதனைக் கொள்"

கிருஷ்ணதுளசி, ராமதுளசி, செந்துளசி, கருந்துளசி, கற்பூரதுளசி, சிவ துளசி. . . இப்படியாக. . . இருநூறுக்கும் மேற்பட்ட துளசி வகை உண்டு. கருந்துளசியானது, பெருமாளுக்கு வெகு விசேஷம். துளசி மாடம் உள்ள வீட்டின் சுற்றுப்புறம் நிரந்தரத் தூய்மை பெறும். துளசித் தீர்த்தம் இதயபலம். துளசித் தளங்களை தினசரி கண்களில் ஒற்றிக் கொண்டால், கண்நோய்களைக் காணமாட்டோம். துளசி மணிமாலையை அணிவதால் சருமநோய்கள் சாம்பலாகும்.

பெண்மக்கள் தத்தம் வீடுகளிலே (பிளாட்டு களிலும்) துளசிமாடம் வைத்து, மகாலட்சுமியை வழிபடுவது போல அன்றாடம் சுற்றி வந்து கும்பிட்டு சுபீட்சம் பெறலாம்.

"பச்சைப் பசுமையுள்ள துளசி போற்றி
பரிமளிக்கும் மூலக் கொழுந்தே போற்றி"

Donated By : **Dr. S.V. RAMANAN** (Managing Director)
JAISHREE PICTURES PRIVATE LIMITED
243/2, T.T.K. ROAD, ALWARPET, CHENNAI - 600 018.
PH : 4991434, 4991577, RES : 4937224

Koviloor Digital Library

4-2

சாளக்ராம (ம்) மூலவர்கள்.

நேபாளதேசத்தலைநகர் "காட்மாண்டு" விலிருந்து நூறாவது மைலிலே ஓடும் "கண்டகி" நதிப்பிரவாகத்திலே பிறக்கின்றன சாளக்ராமங்கள். விஷ்ணு அம்ச மலைப்பாறைகளின் "பிஞ்சு"களை, "வஜ்ரகீடம்" எனும் நீர்வாழ் உயிரினம். . . தழுவித் தொளைப்பதால். .. விஷ்ணுவின் பல்வேறு வடிவங்கள் கற்களிலே ஏற்படுகின்றன. சிவலிங்க உருக் கொண்ட சாளக்ராமங்களும் உண்டு.

கல்லையும் மண்ணையும் கும்பிடும் விஞ்ஞான மெய்ஞ்ஞானி யர்நாம். ஆம், கல்லுக்குள் தீ – அது திருவண்ணாமலை, மண்ணுக்குள் கரும்பு, வேம்பு முதலான பல்லாயிரம் மாறுபட்ட சுவைப்பொருட்களை, மண்ணை ஆராதித்து (உழைத்து) பெறுகிறோமே! ஒரே மண்ணுக்குள் இனிப்பு, புளிப்பு, கசப்பு, துவர்ப்பு. .. அப்பப்பா! இதை விட நமது கடவுளருக்கு ஏன் விளக்கம். ஸ்ரீதரம், தாமோதரம், நரசிம்மம் ஹயக்ரீவம். .. முதலான பலவேறு திருமால் அம்ச (வடிவ) சாளக் ராமங்கள் உண்டு. எந்த இடத்திலே 'ஒரிஜினல்' சாளக்ராமம் முறையாகப் பூஜிக்கப்படுகிறதோ, பெருமாளின் பேரருள் அங்கே பூரணமாகிறது.

சாளக்ராமத்திற்கு பசும் பால் அபிஷேகம் செய்து, அந்தப் பாலைப் பிரசாதமாகப் பருகினால், திடமனமும் தேகாரோக்கியமும் நிரந்தரம்.சான்னித்யமான, சாளக்ராம பூஜை, சகல சம்பத்துக்களையும் தரவல்லது ஆனால், உடையாததும், பூஜையிலே நமது... மனம் நிலையாகவும் இருக்க வேண்டியது மிக முக்கியம். அர்ச்சாவதார மூர்த்திகளுக்கும் மூலவராக வணங்கப்பெறுபவை, வைஷ்ணவத்திலே சாளக்ராமங்கள்.

Donated By :

DELHI GANESH

Koviloor Digital Library

பெருமாள் திருவடிச் சடாரி

ஸ்ரீ வைஷ்ணவ அனைத்து ஆலய. . எல்லாச் சன்னிதிகளிலும் சடாரி இடம் பெற்றிருக்கும், துளசி தீர்த்தத்தை அடுத்து சேவார்த்திகளுக்குச் சடாரி சாதிப்பது. வைணவ சம்ரதாயம். சடாரி என்பது, முக்கால் கிரீடம் போன்ற அமைப்பின்மேல் இருபாதச் சுவடுடன் கூடியது.

ஜடமாகக் கிடந்து திருமாலின் நேரடித் தூதரால் அருள்பெற்று, "சடம்" எனும் வாயுவை அடக்கியாண்டதால், நம்மாழ்வாருக்கு 'சடகோபன்' என்ற பெயர் வந்தது. பெருமாளும் பிராட்டியுமே "இவர் நமது ஆழ்வார்" என்றதால் சடகோபர் நமக்கெல்லாம் நம்மாழ்வார். நேரிலே பெருமாளின் திருவருள் பெற்றதோடு, 108 – திவ்ய தேச அர்ச்சா மூர்த்திகளையும் ஒரு சேரேக்கண்ட புனிதரானதால் இவரையே சடாரியாக, வைணவர் போற்றுவர். பெருமாளின் திருவடி கண்ட நம்மாழ்வாரின் (சடகோபர்) திருவடிச் சடாரியானது, நம்தலை மேல் பட்டால், பெருமாளின் திருவடி ஸ்பரிசமே பெற்ற புனிதராகிறோம்.

ஆஞ்சநேயர், கருடாழ்வார், ராமாநுஜர், மஹாதேசிகன்.. . முதலான பெருமாளின் நிழல்களாக விளங்குவோர் சன்னிதிகளிலே சாதிக்கப்படும் சடாரித்திருவடிகளானது, அவரவர்தம் திருவருளையும் சேர்த்து நமக்குத் தருவதாகும்.

"பொற்பாதம் என் தலைமேல் பூ"
எனத் தொண்டர் புகழ்பாடும் வைணவ மரபுப்படி
சடாரியானது, சாட்சாத் பெருமாளின்
திருவடிகளேயாகும்.

Donated By :

A. SUPPIAH

MAARS TRAAVEL

33/33, WALLERS ROAD, MOUNT ROAD,
CHENNAI - 600 002. 853 53 58 / 854 78 41 RESI : 827 7506

Koviloor Digital Library

மாலுக்குகந்த மணியோசை

மேளதாள, நாதஸ்வர இசையுடன் "கண்டாமணி" ஒசையும் கலந்து ஒலித்தால். .. குடமுழுக்கு, தேரோட்டம், தெப்போத்ஸ்வம், பெருமாள் தாயார் திருவீதி எழுந்தருளல் காட்சிகள் நமது மனக் கண்ணிலே தோன்றிவிடும். எல்லா உயிர்கள், அனைத்து தாவரங்கள் இவையாவையும் படைத்த, சொல்லால் அடங்காத தெய்வச் சுடர்ஒளிக்கு. . மாநுடம் முழக்கும் மணியோசை பேரானந்தம் தருவதாகும். அபிஷேக, நைவேத்திய, ஆராதனைக் காலங்களிலே அரக்கர்களை –தீய எண்ணங்களை – விரட்டுதற்கும், தேவர்களை – திவ்ய அன்பு பக்தர்களை – வரவேற்பதற்கும் ஆலயம் தோறும் மிகப்பெறும் கண்டாமணிகளை முழக்குவது தொன்று தொட்டமரபு. தேவர்களுக்கு உரிய 18 வகை வாத்தியங்களின் திருமுடியாக விளங்குவது இந்த மணி. துவஜங்களிலே (கொடி) கருட ஆஞ்சநேயர்கள் இருப்பது போல, பெருமாள்கோயில் மணிகளிலே. . "சிறிய, பெரிய திருவடிகள்" இடம் பெறுவர். அந்த நாளிலே மிகப்பெரும் மணிகளை, காணிக்கையாக ஆலயங்களுக்கு வழங்குவர். பூஜா காலங்களிலே அந்த மணியோசையின் பூர்த்தியில் தான் பக்தர்கள் உணவு கொள்வர். ஊர் முழுதும் ஆறுகால பூஜைகளின் எதிரொலியாக சீரும் சிறப்புமாக முழங்கியவை நமது ஆலயமணிகள். திருமணியின் அம்சமாகத் தோன்றிய மகான்களும் வைணவ வரலாற்றிலே உண்டு.

பிணிகளைத் தீர்ப்பது மாமணியோசை
பேரின்பம் சேர்ப்பது யோகியர் தீட்சை.

Donated By : DR. SIRKALI G. SIVA CHIDAMBARAM M.D.
CHAIRMAN
BOARD OF TRUSTEES, ARULMIGU KARPAGAMBAL UDANAYA
KAPALEESWARAR TEMPLE, MYLAPORE, CHENNAI - 600 004.

Koviloor Digital Library

திருமண் ஸ்ரீ சூர்ணப் பெருமை

"நெற்றியுள் நின்றென்னை ஆளும்
நிறை மலர்ப் பாதங்கள் சூடி. . ."

எனமுழங்குவது திருவாய் மொழிப்பாசுரம்.

திருமண் – பெருமாளின் திருவடிகள் ஸ்ரீ சூர்ணம் பிராட்டியின் அம்சம். வைணவ ஆகம நியதிப்படி புண்ட்ரங்கள் (12 – நாமம்) அணிவதால் பாவங்கள் தீருவதோடு, தேக பலத்துடன் திவ்விய சௌபாக்யமும் வருவதாகும்.

எம்பெருமானையும் தாயாரையும் நமது சரீரமாகிய ஆலயத்துள் அன்றாடம் எழுந்தருளச் செய்கின்ற வைணவரின் பெருமையே பெருமை.

திருமண்ணையும், விபூதியையும் அன்றாடம் கையிலே குழைக்கும் போது, ஆதியும் அந்தமும் நமக்கு மண்தான் என்பதை அகம் உணர்கின்ற ஞானத்தால், இகவாழ்விலே நிறைவும், எல்லோர்மேல் பரிவும், பாசமும் ஏற்படுகின்றது.

எண்வகைத் தோல்களும், ஒன்பது துவாரமும் கொண்ட இந்த எண்சாண் உடம்பிற்கு, சிரசேபிரதானம். அகத்தின் அழகு முகத்திலே ஒளிர, ஒவ்வொரு வைணவரும் – ஒவ்வொரு சைவரும் – தத்தம் சமயச் சின்னங்களை. . . நெற்றியிலே அணிந்தே தீர வேண்டும். **'நீறில்லா நெற்றி பாழ்"** ஆன்ம பலத்திற்கும் தேகசுகத்திற்கும் திருமண், ஸ்ரீ சூர்ணம், விபூதி, குங்குமங்கள் உகந்தது என்பது, இன்றய நவீன விஞ்ஞானபூர்வ ஆய்வின் உண்மையுமாகும். நாம் நாமாக இருப்பதற்கு வெட்கப்படுவதானது, நம்மை நாமே ஏமாற்றிக் கொள்வதாகும்.

Donated By : N. HARIHARA SUBRAMANIYAN

MAYURA'S INDUSTRIAL SERVICES

AKSHAYA 21 / 2, CRESCENT ROAD,
WEST SHENOY NAGAR,
CHENNAI - 600 030.
PH : 6260346 / 6281181

Koviloor Digital Library

ஆனந்த ஸ்ரீஹரி



சுடர்மணிக் கவிஞர்

ஆன்மிகரத்னா & சேவாரத்னா

வேம்பத்தூர் கிருஷ்ணன்

சுடரமணி
பதிப்பகம்

9– பஜனைக் கோயில் தெரு, சூளைமேடு,
சென்னை – 600 094.

Koviloor Digital Library

சுடர்மணி பதிப்பக 52–வது வெளியீடு "ஆனந்த ஸ்ரீ ஹரி"

1970 – காஞ்சி, கொல்லாசத்திரத்திலே "*சுடர்மணிமாலை*" முதல்நூலை வெளியிட்டு, "தொடர்ந்து வெளியிடவேண்டும்" என வாழ்த்தி அருளினார், ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சுவாமிகள் (1894 – 1994)

"சின்ன புஸ்தகமானாலும் முத்துக் கோர்த்தாப் போல இருந்தாதானே அழகு; பத்துப் புஸ்தகம் படிச்ச திருப்தி ஒத்தப்புஸ்தகம் தந்தா, அது ரொம்ப ஒசத்தி தானே! '**சுடர்மணிமாலை**' ன்னு ஒரு புஸ்தகம் வருஷா வருஷம் வர்றது; வேம்பத்தூர் கிருஷ்ணன்னு ஒருத்தர் நன்னா செய்யறார்! இப்படியெல்லாம் பண்றவாளுக்கு எல்லாரும் ரொம்ப ஒத்தாசையா இருக்கணும்." – **ஸ்ரீ மஹாபெரியவர்**

ANANTHASRIHARI

Writer	:	**Vembattur Krishnan**
Artist	:	**S. Ganeshan,** Chennai - 600 004
Layout Artist	:	**R. Anparasan,** Chennai - 600 094.
Wrapper Desining	:	**Kumar Laser Print** Chennai - 600 026 Ph : 472 5069
D.T.P. Work	:	**New Graphics** Chennai - 600 024, Ph : 483 4960
Printing	:	**Nandan Offset** Chennai - 600 006. Ph : 829 0989

"தெய்வத் திருவருளால் **வேம்பத்தூர்கிருஷ்ணன்** தொடர்ந்து **ஞானதானத்திருப்பணி** புரிந்து வருகின்றார். இந்த நல்ல பணிக்கு எல்லோரும் அள்ளித்தர வேண்டும். தாராள சிந்தையுடைய அன்பர்கள் முடிந்த அளவு பணம் அனுப்பி உதவினால் பயனுள்ள இப்புனிதப் பணி, மேலும் சிறப்படையும்".

–"*திருமுருக வாரியார்*" (1906 – 1993)

விக்ரம ஸு, சித்திரை ஏப்ரல் – 2000 **ஆனந்தஸ்ரீஹரி** விலை ரூ 15/-

Koviloor Digital Library



சிறியதிருவடி

அநுமன்

"அநுமன் சிவாம்சம்" சொன்னவர், அகத்தியர், ஸ்ரீருத்ர அம்சம் ஆஞ்சநேயர்" சொல்வது கந்த புராணம். வானரகுலத்து அஞ்சனைக்கு, வாயுபகவான் தந்த வரபலத்தால் பிறந்தவன் "சுந்தரன்" சூரியனைப் பழம் என நினைத்து, வானில் தாவிய சுந்தரனை, இந்திரனின் வஜ்ராயுதம் தாக்கியதால் "அனு" – தாடை – வீங்கி, "அநுமன்" ஆனான். வானிலிருந்து அடிபட்டு விழுந்த அருமை மகனை வாயுதேவன் தாங்கிப் பிடித்து, ஓர் குகையுள் சென்று பதுங்கிவிடுகிறார். காற்று இல்லாத நிலையிலே, அனைத்து தேவர்களும் குகைக்குவந்து தத்தம் சக்திகளையெல்லாம் வரங்களாக அநுமனுக்குத் தந்ததால், நிகரிலாப் பிறவியானான். வல்லமையனைத்தையும் தந்த கடவுளர், அநுமன் பொல்லா தவனாகிவிடக் கூடாதே என்பதற்காக, அவனது பலம் அவனுக்கே தெரியாத படி ரிஷிகளால் சாபத்தையும் கொடுக்கவைத்து, நல்லோர்க்கு மட்டுமே அநுமனைத் துணை கொள்ள வைத்தனர்.

சூரியனிடம் சகலகலா வேத சாஸ்திரங்களை எல்லாம் கற்றதும், குருகாணிக்கையாக, அவனது மகன் சுக்ரீவனுக்குத்துணையாக இருந்த இணையிலாத ஞானி அநுமன். சுக்ரீவனால் ராமலட்சுமணர்களை சந்தித்தது, சீதாராம சேவையால், சிரஞ்சீவி ஆனது. கடலைத்தாண்டியது! ராவணன் தர்பாரிலே சரியாசனம் கண்டது. லங்காதகனம்; போரிலே ராமலட்சுமணரின் வாகனமானது, சஞ்சீவி மலையைக் கொண்டுவந்து அயோத்தியின் வம்சாவளியைக் காத்தது, ராமநாமத்தால் கோட்டை கட்டி, அந்த ஸ்ரீ ராமனையே எதிர்த்து வெற்றிகண்ட அநுமன், உள்ளத்தால் சேவகன், அறிவால் பரமஞானி, ஆற்றலிலே மாமேரு, செயலால் பஞ்ச பூதன், சிந்தனையால் ராமதாசன். புத்தி பலம், புகழ்நலம், பக்தி சேவை, பண்புதியாகம், கல்விசெல்வம், கடவுளரிடம் கூடக்காண முடியாத முழு பிரம்மச்சர்யம் எல்லாம் கொண்ட **அநுமனைப் பணிவோம்! ஆனந்தம் பெறுவோம்.**

Koviloor Digital Library

பெரிய திருவடி **கருடன்**

தட்சப் பிரஜாபதியின் மகள் விநதை, கச்யபரின் இரண்டாம் மனைவி, முதல் மனைவி கத்ரு வும் விநதையும் அழகிலே ''நீயாநானா'' போட்டி. பாம்புகள் இனத்தைக் கத்ருவும், பட்சிராஜனை (கருடனை) விநதையும் பெற்றனர் விநதையை வம்புக்கிழுத்த கத்ரு, ''இந்திரன் குதிரைக்கு வால்மட்டும கறுப்பு'' என்பது. ''இல்லவே இல்லை முழுவெள்ளைக் குதிரை அது என்கிறாள்.'' விநதை. போட்டிக்கு முன்பாக தனதுமகன் கார்கோடகப்பாம்பை குதிரையின் வாலைச் சுற்றச் செய்து வெற்றி பெற்ற கத்ரு, வினதையை அடிமை கொண்டு, ''அமிர்தம் கொடுத்தால் உன்தாய் விடுதலை. என்றாள் கருடனிடம்''.

தாயின் தளை நீங்க, தேவலோகம் செல்கிறான். எதிர்த்த தேவர்களையும், இந்திரனையும் ஜெயித்த கருடனோடு, திருமாலே மோதுகிறார். கருடனின் மாத்ருபக்தியைக் கண்டு மகிழ்ந்த பகவான் ''வீரனே! நீ வென்றாய், என்ன வேண்டும் கேள்?' என்றார் ''நீ கேள் உமக்கு வரம் நான் தருகிறேன்'' என்றான் கருடன்'' அப்படியா... கருடனே! எப்போதும் நீ என் வாகனமாகவேண்டும்'' என்று கூறி, அந்தச் ''சண்டியரை'' தனது சாஸ்வதத் தொண்டனாக்கிக் கொண்டான் ஸ்ரீ புண்டரிகாக்ஷன். ருத்ரா, சுகீர்த்தி ஆகிய இருமனைவியரோடு வைகுந்த வாசியாகிவிட்ட கருடன், இந்திரன் குதிரை முழுவதும் வெண்மைதான் என்பதை அறிந்து, கார்கோடகனின் – பாம்பு – வம்சத்தையே துவம்சமாக்கப் புறப்படுகிறான். அனைத்து லகச் சிகரமாகிய பிரம்மலோகம் முதல், அதல பாதாளம் வரை கருடனின் – அவனது சிறகுகளின் – பராக்ரமத்திற்கு அடிபணிந்து கைகளைக் கூப்புகின்றன. அஷ்டநாகங்கள், எண்திசைக் காவலர்கள், தேவ... அசுர, மாநுடர் யாவருமே தாய்பக்தி கொண்ட கருடனின் வெற்றியைப் போற்றிப் பணிகின்றனர்.

ஜன்மப் பகையான நாகங்களை ஆபரணமாக்கிக் கொண்ட கருடன், பெருமாளின் அனைத்துமாகவும், பேரருளின் பிரவாகமாகவும் இருந்து மாத்ருபக்தர்களை, மனிதருள் புனிதர்களை காத்தருள் புரிகிறார்.

கருடனைப் பணிவோம் – திருமாலின் கருணையைப் பெறுவோம்

Koviloor Digital Library

திருமால் பெருமை

"பரவாசுதேவன், திருமால், மகா விஷ்ணு, ஸ்ரீஹரி" என ஆயிரமாயிரம் திரு நாமங்களைக் கொண்ட ஸ்ரீ மந் நாராய ணனின் அவதாரங்கள் எண்ணற்றவை.

திருமாலின் அவதாரங்களிலே **"தசாவதாரம்"** எனப்படும் பத்து அவதாரங் களுமே சத்தியமானவை, சாஸ்வதமானவை.

"புல் ஆகிப் பூடாய் புழுவாய் மரமாகிப்
பல்விருகம் ஆகிப் பறவையாய் பாம்பாய்
கல்லாய் மனிதராய் பேயாய் கணங்களாய்
வல்அசுரர் ஆகி.. முனிவராய் தேவராய்...."

எனும் சைவ மணிவாசகரின் திருவாசகத்திற் கேற்ப; இயற்கையின் பரிணாம வளர்ச்சியே பகவானின் அவதாரங்களாயின. "அவதாரம்" என வரும் போது, காலக்கணக்கு அறியப்பட வேண்டியதாகிறது. இந்தியர்களை நிரந்தர அடிமைகளாக வைத்துக் கொள்ள வேண்டும் என்ற வெள்ளைக்கார மதியூகி மெக்காலே யின் "பிரைன் வாஷ் எஜிகேஷ" னால் – கி.மு. கி.பி. எனும் "பல்லவி"யும், "கற்காலம், இரும்புக்காலம்" எனும்அனுபல்லவியுமே இந்தியர்களின் வயிற்றுப்பாட்டாகிவிட்டது!

சிந்துவெளி திராவிட நாகரீகம் ஐயாயிரம் ஆண்டு, திருமூலர் முதலான சித்தர்கள் காலம் பத்தாயிரம் ஆண்டுகள், முத்தமிழ்ச் சங்கம் 15 – ஆயிரம் ஆண்டு , பல நாடுகளில் கிடைத்துள்ள நமது சிவலிங்கச் சின்னங்களோ 20 – ஆயிர ஆண்டுகளுக்கும் முற்பட்டவை. பாரதிய மூதாதையரின் லெமூரியா கண்டத்தின் வயது இருபத்துஐந்து ஆயிரம் ஆண்டுகள். இப்படியெல்லாம் பல்லாயிரத்தாண்டுகளைக் கொண்டிருந்த நமது தொன்மை வரலாறுகள் என்ன ஆயின? எங்கு போயின? இவை மட்டுமா?

Koviloor Digital Library

கிருதயுகம் – 1728000 **திரேதாயுகம் – 1296000**

துவாபரயுகம் – 864000 **கலியுகம் – 432000**

(இந்த கி.பி. 2000–மாவது ஆண்டு, கலியுகத்தின் 5101 – வது ஆண்டாகும்) மேற்படி நான்கு யுகங்களும் ஆயிரம் முறை திரும்பினால், பிரம்மாவுக்கு ஒரு பகல், இரண்டாயிரம் சதுர்யுகங்கள், பிரம்மனின் ஒரு நாள், ஒரு பிரம்மனின் ஆயுட்காலம், மேற்படி கணக்குப் படியாக நூறு ஆண்டுகள். இப்படியாகப் பல நூறு பிரம்மாக்கள் பிறந்து, முடிந்து. . . கல்பகோடி காலங்கள் கடந்து, இப்போது நடந்து கொண்டிருப்பது சுவேத வராக கல்பமாகும்.

இன்றய மேலை நாட்டினர், காட்டுவாசிகளாகத் திரிந்த அந்த நாளிலேயே, நமது மூதாதையர், மேட்டுக்குடி மக்களாக, அங்க, வங்க, கலிங்க, காஷ்மீர,கோசல, மாளவ, குந்தள, அவந்தி, சேர சோழ பாண்டிய நாடு முதலான ஐம்பத்தாறு தேச சக்கரவர்த்திகளாக. . . உலக நாகரிகத்தின் முன்னோடிகளாக, வானூர்தி, மா நகரம் அரண்மனை, கோட்டை அகழி, பல்லக்கு ரதம் என தேவர்களுக்கு நிகராக வாழ்ந்தவர்கள்! அந்த நாளைக்கும் முந்தய சதுர்யுகத்திலேதான் ஆழிமாயனின் தசாவதாரம் நிகழ்ந்தது.

நடிப்புக்குக் கூட பல்கலைக் கழகம் படைக்கும் இன்றய நாம், சமயப் படிப்புக்கு, சன்மார்க்கபோதனைக்கு, உண்மையான வரலாறுகளுக்கு – சட்டபூர்வ – ஓர் ஆரம்பபப்பள்ளியைக் கூடக் கட்டாதது சரிதானா? பாடல் பெற்ற திருத்தலங்களும், பாசுரம் கண்ட திவ்விய தேசங்களும் இருப்பதால் தான் உலகுக்கே ஞானதான தியாகபூமியாகத் திகழ்கிறது. நமது பாரதம்.

மஹாபாரதமும், இராமாயணமும், சிவரகசியமும், பாகவதமும் பொய்யென்றால், நமது வாழ்வே பொய்யாகிவிடும்! மெய்யான ஸ்ரீ ஹரியின் பத்து அவதாரங்களைச் சுருக்கமாக அறிவோமா!

Koviloor Digital Library

1. மச்ச அவதாரம்

கடந்து போன நான்கு யுக முடிவிலே நியதிப்படியான மகா பிரளயம் ஏற்படுகிறது. யுகப் பிரம்மாவின் முகத்திலிருந்து வெளிப்பட்டு படைப்புகளுக்கு ஆதாரமான வேதங்கள் அண்டவெளியிலே உலவிக் கொண்டிருந்தன.

சோமுகாசுரன் எனும் அரக்கன் வேதங் களைத் தனது தபோபலத்தால் அபகரித்துக் கொண்டு,.பிரளயப் பெரு வெள்ளத்திலே சென்று மறைந்து விடுகிறான். சர்வலோக, சர்வஜீவ ஆதார சுருதிகளான வேதாகமங்கள் மறைந்ததால், தேவர்கள் கூடி ஸ்ரீ மந் நாராயணனிடம் முறையிடுகின்றனர்.

மகாவிஷ்ணுவான ஸ்ரீமந்நாராயணன் மாபெரும் மச்சமாக (மீனாக) உருவெடுத்து. பிரளயப்பெருவெள்ளத்துள் புகுந்து, சோமுகா அசுரனை அழித்து, வேதங்களை மீண்டும் அந்த யுக பிரம்மனிடம் தந்து சிருஷ்டியை தொடரச் செய்கிறார்..

அனைத்து உலகங்களின் ஜீவாதார வித்துக்களை – வேதங்களை – மீனாக அவதரித்துக் காத்து "காக்கும் கடவுளா" க விளங்குகிறார் ஸ்ரீ மந் நாராயணன்.

("பகவத்கதாம்ருதம்" தரும் குறிப்பின்படி....) ஒரு பிரம்ம கல்பத்தின் முடிவிலே... படைப்புக்குப் பிரதானமான நான்கு வேதங்களையும், "ஹயக்ரீவன்" எனும் அசுரன் அபகரித்து மறைந்துவிட்டான்! தேவர்கள் முறையிட, திருமால் மிகச்சிறிய மீன்வடிவாகி, பூலோகத்தில் கிருதமாலா நதியிலே ஜபம் செய்து கொண்டிருந்த சத்யவிரத மகரிஷியின் கமண்டலத்துள் மீனாக வந்து சேர்ந்தார்.

ராஜரிஷிக்குப் பேரருள் புரிந்து, படிப்படியாக வளர்ந்து நூறுயோசனை தூர நீளமுள்ள மாபெரும் மத்ஸ (மீன்) ஆனார். அனைத்து உலகங்களையும் பிரளயம் விழுங்கும்போது, தனது முதுகிலே சர்வலோக, சர்வஜீவ வித்துக்களையும், துளசிமுதலான மருத்துவ மகத்துவ மூலிகைகளோடு. சத்யவிரதர் உள்ளிட்ட ஸப்த – ஏழு – ரிஷிகளையும் வைத்துக் காத்து, சிருஷ்டிகர்த்தாவான புதுயுக பிரம்மாவிடம் ஒப்படைத்தார், **மச்சாவதார** ஸ்ரீமந் நாராயணன்.

Koviloor Digital Library

2. கூர்ம அவதாரம்

மகாமுனிவரான துர்வாசருக்கு வாடாத மலர் மாலையொன்று கிடைக்கிறது; தேவராஜாவாகிய இந்திரனுக்கு அதைப் பரிசளிக்கிறார் துர்வாச முனிவர். இந்திரனின் அலட்சியத்தால் அந்தமாலையை, அவனது ஐராவதயானை, மண்ணிலே போட்டு மிதித்து விடுகிறது. ஆவேச துர்வாசர், "தேவர்களின் எல்லா நலன்களும் கடலுக்குள் மூழ்கக்கடவது" என்று சாபமிடுகிறார்.

பரிதாப நிலைக்கு ஆளான தேவர்கள், ஸ்ரீ மந்நாராயணனிடம் ஓடிச்சென்று சரணடைகின்றனர்.

மந்திரகிரியை மத்தாகவும், மகா நாஹமாகிய வாஸுகியைக் கயிறாகவும் கொண்டு, தேவ, அசுர இரு சாரரும் பாற்கடலைக் கலக்குகின்றனர். ஆமையாக (கூர்மம்) உருவெடுத்துக் கடலுக்கு அடியிலே சென்று, மாமலையின் சுழற்சி வேகத்தைத் தனது முதுகிலே தாங்கிக்கொள்ளுகிறார் ஸ்ரீஹரி.

பாற்கடல் மோர்ப்பானையாகிறது! திரண்டு வரும் அமுதத்தின் அழுக்காக.. முதலிலே ஆலகாலவிஷம் உருண்டு வருகிறது. ஆலகால விஷ ஜுவாலையால் தேவாசுரர்கள் வாடிக் கருகும் நேரத்திலே.. சிவ நீலகண்டரின் திருவிளையாடலுக்குப் பிறகு, அமுத கலசத்தோடு ஸ்ரீ மஹாலக்ஷ்மியும், சகல செல்வங்களையும் பாற்கடலானது திரும்பத்தருகிறது.

அமுதத்தை உண்டபின், அசுரர்க்கு இறவாமையும் ஏற்பட்டு விட்டால், அதர்ம மல்லவா நிரந்தரமாக உலகாள நேரிடும்! விடுவானாபகவான்! மோஹினி உருவெடுத்து அசுரரிடம் சாகஸம் செய்து... சத்தியத்தைக் காத்த உத்தமச் செயலோடு நிறைவு பெறு கிறது ஸ்ரீமந்நாராயணனின் **கூர்மாவதாரம்.**

Koviloor Digital Library

3. வராக அவதாரம்

ஜெய, விஜயர் என இரு புனிதர்கள் ஸ்ரீஹரியின் வைகுந்த வாசலைக் காவல் புரியும் துவார பாலர்கள்.

சனந்தர் முதலான மகரிஷிகள் பகவானைக் காணவந்த வேளையில், தடுத்ததால், பூமியில் பிறக்கும்படியான சாபத்தை அடைகின்றனர்.

சாபநிவர்த்தியாக; மகாவிஷ்ணுவின் பகைவர்களாக வாழ்ந்தால் மூன்றுபிறவிகள், அன்பால் பூஜித்தால் ஏழுபிறவிகள்! எது வேண்டு மெனக் கேட்க, பகைவர்களாக, இருந்து வெகுசீக்கிரம் வைகுந்தம் திரும்புவதையே விரும்புகின்றனர்.

பூமியில் காசிப முனிவரின் புத்திரர்களாகப் பிறந்து, **இரண்ய கசிபு, இரண்யாட்சன்** என்ற பெயர்களோடு வாழ்ந்து, தவத்தாலும், உடற்பலத்தாலும் உயர்ந்ததும், தானெனும் ஆணவத்தால் மாநுட, தேவ, மற்றும் மகரிஷிகளைக் கொடுமைப்படுத்துகின்றனர்.

பூமியை மீட்க ஸ்ரீஹரி வராகமாகிறார். கடலுக்குள்ளே அவதாரக் கடவுளுக்கும், அசுர பக்தனுக்கும் பலத்த போராட்டம். இரண்யாட்சனுடன் "விளையாடி" முடித்த பகவான், அவனது ஆயுளை முடித்துப் பூமியைப் புனிதமாக்கித் தனது ஒற்றைக் கொம்பிலே தாங்கியபடி ஜலப்பிரவாகத்தினின்றும் வெளிவந்து, **வராக அவதார** மகத்துவத்தை யாவர்க்கும் உணர்த்தித் திருவருள் புரிகிறார். (பகவானின் வராக அவதார ஸ்பரிஸத்தால், பூமாதேவிக்கு நரஹாசுரன் பிறந்ததும், தருமம் வாழ, மகனையே அழித்ததும், அதனால் ஏற்பட்ட "தீபாவளி" வரலாறும் இதன் தொடர்களேயாகும்.)

Koviloor Digital Library

4. நரசிம்ம அவதாரம்

வராக அவதாரத்திலே, பகவானால் அழிக்கப்பட்ட ஹிரண்யாட்சனின் சகோதரன்தான் இரண்யகசிபு.

சகோதரனைப்போல அழிந்து விடக்கூடாது என்பதற்காக பற்பல கோரமான தவங்களைச் செய்து, பிரம்மாவிடம் ஏராளமான நூதன வரங்களைப் பெற்றுக்கொண்டான் இரண்ய கசிபு.

மூவுலக மாந்தர் மற்றுந் தேவர்களெல்லாம் "ஹிரண்யாய நமஹ" என தன்னைத் துதிக்கும்போது, தனது மகன் பிரகலாதன் மட்டும் **"ஓம் நமோ நாராயணா"** என்று முழங்குவதைத் தடுத்துவிட, "அடேய் பிரகலாதா! நீ வணங்கும் அந்த நாராயணன் எங்கிருக்கிறான்...? உன்னால் அவனை இப்போது இங்கே காட்ட முடியுமா?" என்று கர்ஜிக்கிறான்.

"இதோ இந்தத் தூணிலும் இருக்கிறான் சர்வலோக நாயகானான ஸ்ரீஹரி துரும்பிலும் இருக்கிறான்" எனக் கூறிச்சிரிக்கிறான் பக்தப் பிரகலாதன். தூணை எட்டி உதைக்கிறான். இரண்யன். தூண் இரண்டாகப் பிளந்தது.. சிம்மத்தின் முகமும், மாநுட உடலுமாக எம்பெருமானின் **நரஸிம்ம அவதாரம்** நிகழ்ந்தது.

யாராலும், எந்தப் பொருளாலும், இரவிலும், பகலிலும், எந்த இடத்திலும் தனக்கு மரணம் ஏற்படக் கூடாது என வரம் பெற்றிருந்த இரண்யாட்சனை, யாராகவும் இல்லாமல், எந்தப்பொருளாலும் கொல்லாமல், இரவுபகல் இல்லாத அந்திவேளையில் "இடம்" என்று கூற முடியாத படி, தனது தொடையிலேயே வீழ்த்தி... நகத்தால் ஹிரண்யனின் இதயத்தைக் கீறிப்பிளந்து நீதியைக் காக்கின்றது ஸ்ரீநரஸிம்ம அவதாரம்.

ஸ்ரீமந் நாராயண நரசிம்மத்தின் புகழைப்பாடியபடியே ... தந்தை இரண் யனுக்குப் பிறகு தைத்ய சாம்ராஜ்யத்தின் சக்கரவர்த்தியாகிறான் **பக்தப்பிரகலாதன்.**

Koviloor Digital Library

5. வாமனர் அவதாரம்

பிரகலாதசக்கரவர்த்தி வயோதிக மடைந்ததும், பேரனான மகாபலியிடம் ராஜ்யத்தை ஒப்படைத்து விட்டுத் தவம் செய்யக் காட்டுக்குப் போய்விடுகிறார்.

மாபலி மன்னனின் பூர்வஜன்ம கர்மத் தால், பேராசைத் தீ மனதிலே மூண்டெழுந்தது. "விசுவஜித்து" என்ற மாபெரும் வேள்வியினை நடத்தி முடித்து.. இந்திரனை எதிர்த்துத் தேவலோகத்தின்மேல் படையெடுக்கிறான் மாபலி மன்னன். வேள்விப்பலனும், வீராவேசமும், அவனுக்கு வெற்றி மேல் வெற்றியைத்தருகின்றன.

அவலத்திற்கு ஆளான தேவர்கள், ஸ்ரீ ஹரியைச் சரணடை கிறார்கள். காசிபர், அதிதி ஆகிய இருவருக்கும் மகனாகப்பிறந்து "வாமனர்" என்றபெயரோடு காலத்தை எதிர்நோக்கிக் காத்திருக்கிறார் ஸ்ரீ மந் நாராயணன்.

சர்வ சக்திகளும் தனக்கே உரித்தாக வேண்டும் என்ற முடியாத முடி வோடு–மாபலி, நர்மதா நதிக்கரையில் ஸ்ரீ வைஷ்ணவ மகாயாகத்தைத் துவக்கி... யாகதர்மப்படி கேட்டவர்க்குக் கேட்டதையெல்லாம் கொடுத்து வரும் வேளையிலே, அங்கு வந்து சேருகிறார் வாமனர்! பரம விலக்ஷணமான திருக்கோல (குள்ளம்) வாமன அவதார ஸ்ரீ ஹரி. "என்ன வேண்டும் கேட்டுப் பெறுக" என்றான் மாபலி மன்னன்.

"எனது காலடியால் மூன்றடி மண்வேண்டும்" என்ற வாமனரிடம் "இவ்வளவுதானா, இதோ" என்றபடி குலகுருவின் எச்சரிக்கையையும் மீறி... மூவடி மண்ணுக்குத் தாரைவார்த்துவிடுகிறான் மாபலி.

வாமனர், "திரிவிக்கிரம" னாகி.. ஓரடியால் மண்ணையும், அடுத்த அடியால் விண்ணையும் அளந்து விட்டு.. "மூன்றாவது அடிக்கு எங்கே இடம்?"என்று கேட்கிறார். தயக்கமே இல்லாமல் தலையைக்குனிந்த மாபலி., மூன்றாவது அடியைத் தனது சிரசிலே வைத்தருள வேண்டுகிறான்.

ஓங்கி உலகளந்த உத்தமனின் திருப்பாத ஸ்பரிசம் பெற்ற மாபலிமன்னன், பாதாள லோகத்திற்கு மாமன்னனாகி, ஸ்ரீமந் நாராயண வாமனரின் பூரணப் பேரருளுக்குப் பாத்திரமாகிறான்.

Koviloor Digital Library

6. பரசுராம அவதாரம்

ஜமதக்னி முனிவருக்கும் அவரது பத்தினியான ரேணுகைக்கும் பிறந்த நான்கு மைந்தர்களில் கடைசியாகப் பிறந்தவன் ராமன், அமைதியும் பொறுமையும் உள்ள பரமசாது.

க்ஷத்திரிய மன்னர்களில் பலர், ஆணவத்தால் தலைகால் தெரியாமல் ஆடிவந்தனர். இராவணனையே நடுநடுங்கவைத்த காத்தவீர்யாஜுனன். என்கிற அரசன், வேட்டைக்கு வந்து, ஜமதக்னி முனிவரின் ஆஸ்மத்திலே இருந்த காமதேனுவைத் தனக்குத்தரும்படி கேட்கிறான், முனிவர் மறுக்க, அவரைக்கொன்று, பசுவைக் கவர்ந்து சென்று விடுகிறான்.

ஆசிரமம் பிணகளமாகிறது; குற்றுயிராய்க்கிடந்த ரேணுகை, சாந்தமேவடிவமான தனது மகன், ராமனிடம் நடந்த விபரங்களைக் கூறியதும் மாண்டு விடுகிறாள்.

காலத்தை எதிர்நோக்கிக் காத்திருந்த ஸ்ரீமந் நாராயணனின் ஆவேசஅம்சம், பாமரராமனுள் இணைகிறது. சிவனருள் தந்த பரசு எனும் கோடறியால், காத்தவீர்யார்ஜுனன் தொடங்கி, இருபத்தோறு அநீதி மன்னர்களின் தலைமுறைகளை நிர்மூலம் செய்கிறது பரசுராமனின் கோடறி! சத்தியத்தை அவமதித்த மன்னர்களின் ரத்த மடுவிலே நின்றபடி பெற்றோருக்கு நீர்க்கடன்முடிக்கிறான் ஆவேசப் பரசுராமன்.

அநீதியான க்ஷத்ரிய அரசர்களை அழிப்பதற்கென்றே பரசுராமனுள் ஐக்கியமாகியிருந்த ஸ்ரீ மந்நாராயணசக்தி, சீதாராமனைப் பரசுராமன் சந்தித்ததும், அதனுள் இணைந்துவிடவே, சர்வசக்திப்பரசு ராமன் சாதாரண மாநுடனாகிறான்.

கச்யப முனிவருக்குத் தந்த வாக்குப்படி, தனிநாடுவிடுத்து, மகேந்திர மலைச்சாரலிலே இன்றும் சிரஞ்சீவியாக வாழ்ந்து வருகின்றார் ஸ்ரீ பரசுராமர்.

Koviloor Digital Library

7. ராமாவதாரம்

தர்மம் தழைத்தோங்கிய திரேதாயுகம். அயோத்தி மாமன்னர் தசரதச் சக்ரவர்த்தி செய்த புத்திரகாமேஷ்டியாகப் பலனாக ஸ்ரீ மந் நராயணன், கௌசல்யா தேவியின் கர்ப்பத் திலே பிரவேசிக்கிறார். ஆதிசேஷன் சுமித் திரையிடமும், சுதர்சன, பாஞ்சசந்நிய அம்சங் கள் கைகேயியின் கர்பத்திலும் பிரவேசித்து. ஸ்ரீராம, லெட்சுமண, பரத, சத்ருக்கணர்களாகப் பிறக்கின்றனர்.

பிரம்மரிஷி விஸ்வாமித்திரரின் வருகையால் இராமலெட் சுமணர்கள் கானகம் சென்று, முனிவர்களின் யாகத்தைக் காத்து, அகலிகைக்கு விமோசனம் தந்து, மிதிலாபுரியிலே சிவதனுசை முறித்து, சீதாராமனாகிறான். ஸ்ரீராமனுக்குப் பட்டாபிஷேகம் செய்ய முடிவெடுத்திருந்த தசரதரிடம், கைகேயி, சம்பாசுர யுத்தத்தில் கணவர் தனக்களித்த இருவரங்களைக் கேட்டுப்பெறுகிறாள். "பரதன் அரசாளவும், இராமன் காட்டுக்குச் செல்லவும்வேண்டும்" என்றதுமே தசரத மாமன்னர் மூர்ச்சித்து விழுந்துவிடுகிறார்.

சித்திரக் கூடத்தில் ஸ்ரீராம, பரத சந்திப்பு நிகழ்கிறது. தந்தையின் முடிவு தெரிந்து நீர்க்கடன் தீர்க்கிறார் ஸ்ரீராமர். ராமரின் பாதுகைகளைப் பெற்றுப் புறப்படுகிறான் பரதன்,. பஞ்சவடியை அடைந்த ஸ்ரீ ராமரை இச்சித்த சூர்ப்பனகை, லட்சுமணரால் மூக்கறுபட்டுத் தனது அண்ணனான இராவணனிடம் சென்று அலறுகிறாள். மாமனான மாரீசனை பொன் மானுருவிலே அனுப்பி, சீதையைச் சிறையெடுத்து, வான்வழியே திரும்பிய ராவணனை ஜடாயு எதிர்த்துப் போர் புரிந்து, ஸ்ரீராமனால் மோட்சமடைகிறது

இலங்கையில் தேவியைக்கண்டு இராவணனின் சபையில் அநுமன் நீதியைக் கூற... அரக்கர்கள் அவன் வாலிலே தீயை வைக்க... அதையே விதையாக வைத்து... இலங்கைக்குச் வீராஞ்சநேயன், எச்சரிக்கையாக "சூடு"போட்டுத் திரும்புகிறான்.

இராம ராவணப் போர் முடிந்து, சீதையோடு அயோத்தி திரும்பி பட்டாபிஷேகம் பெறுகிறார் ஸ்ரீ ராமச்சந்திர மூர்த்தி.

Koviloor Digital Library

8. பலராம அவதாரம்

இராமாவதார காலத்தில் தம்பியாகப் பிறந்து இமைமூடாது நிழலாக இருந்துவந்த தம்பி லட்சுமணனுக்கு, தானே தம்பியாகித் தொண்டு செய்யத் திருவுள்ளம் கொண்டார் ஸ்ரீமந் நாராயணன்.

வடமதுரையில் வசு தேவரின் இரண்டாவது மனைவியான தேவகியின் கருவிலே உருவாகிறார் ஸ்ரீஹரி. முதல் மனைவி ரோகிணியின் மகனாகப்பிறக்கிறார் பலராமர். கண்ணன் வருமுன்பே அவனைக் காப்பற்றும் அண்ணன் பலராமன் வந்துவிடுகிறார்.

குழந்தைக்கிருஷ்ணன் கோவிந்தராஜனாகி, கீதோபதேசப் பார்த்தசாரதி ஆகும்வரை உடனிருந்த பலராமர், பாரதப்போரின் துவக்கத்திலே பாண்டவரின் பாசறைக்கு வருகிறார்; தாயாதியர் ஒருவரோடொருவர் எதிரிகளாக நிற்பது கண்டு.. "ஆசையும் கோபமும் கொண்ட பரதவம்சம் தன்னைத்தானே அழித்துக் கொள்ளப்போகும் இந்தக் குருக்ஷேத்திரப் போர் எமக்குப் பிடிக்கவில்லை' என்று வெறுப்புடன் கூறிவிட்டு தீர்த்தயாத்திரை போய்விடுகிறார். குருக்ஷேத்திரத்திலே பலராமரின் வீரப்பிரதாப நியாயங்கள் பயன்படாதுபோனது, ஸ்ரீ கிருஷ்ண ரகஸ்யம்.

போரின்முடிவிலே துரியோதனனை பீமன், தகாத முறையிலே கொல்வதைக் கண்டு அதிர்ந்துபோகிறார்! விஸ்வாமித்திரர், கண்வர் முதலான மகரிஷிகளின் சாபத்தால் யாதவர்குலம் கோறைப்புல் உலக்கையால் தன்னைத்தானே அழித்துக் கொள்ளும் இறுதிவேளையிலே... பலராமர் ஓர் மரத்தடியில் சாய்கிறார். அவதாரகால அந்திமவேளை... அவரது திருமுகத்திருந்து பேரொளி வீசியபடி ஒரு மகாநாகமொன்று வெளியேறிக் கடலில் மூழ்கிக் கரைந்து விடுகிறது. ஹாலாயுத **பலராமர்** அவதாரம் இப்படியாக நிறைவைப் பெறுகிறது.

Koviloor Digital Library

9. கிருஷ்ணாவதாரம்

துவாபரயுகத்தின் கடைசிக் கட்டம்; நல்லோர் குறைந்து, தீயோர் தொகைஅதிக மானதால் பூபாரம் மிகுதியாகிறது. "கம்சன், சிசுபாலன் முதலான பாவாத்மாக்களின் தொகைப் பெருக்கத்தை இனியும் என்னால் தாங்க முடியாது" என்று பூமாதேவியானவள் வைகுந்த நாயகனிடம் ஓடிவந்து முறையிடுகிறாள்.

"வருணபகவானின் சாபத்தால் கச்யபரும் அவரது மனைவியான அதிதியும், வசுதேவர், தேவகியராகிப் பூமியில் பிறந்துள்ளார்கள்; நாம் கொடுத்த வாக்குப்படி அவர்களுக்கு மகனாகப் பிறந்து பூபாரம் தீர்ப்போம்" என்று பகவான் ஸ்ரீஹரி அருள்பாலிக்கிறார்.

மதுரா நகரை ஆண்டுவந்த உக்ரசேனனின் மகன் கம்சன், உத்தமரான தந்தையைச் சிறையில் அடைத்துவிட்டு, தானேசர்வாதிகார மன்னனாகிச் சத்தியத்தைத் துவம்சம் செய்கிறான். கம்சன் தனது தங்கையான தேவகியை வசுதேவருக்கு மணமுடித்து சீர்சிறப்புடன் தேரிலே அழைத்துப் போகும் போது, "கம்சனே! தேவகியின் மைந்தனால்தான் உனக்குமரணம்" என்று அசரீரி.. ஒலிக்கிறது. உடனே வசுதேவர், தேவகியைச் சிறையிலடைத்து. அவர்களுக்குப் பிறக்கும் சிசுக்களையெல்லாம் நசுக்கி அழித்து வருகிறான் கம்சன்.

எட்டாவது குழந்தையாக ரோஹிணி நட்சத்திர, ரிஷப லக்னத்தில் தேவகியின் மைந்தனாக - கிருஷ்ணனாக - அவதரிக்கிறார் ஸ்ரீமகாவிஷ்ணு. தேவகியின் மகனாகச் சிறையிலே பிறந்து, யசோதையின் பிள்ளையாகக் கோகுலத்திலே வளர்ந்த ஸ்ரீகிருஷ்ணனின் லீலாவினோதங்களும், பகையசுரர்வதங்களும், காளிங்கநர்த்தன, கோவர்தனகிரிப் பாகவதப் பெருமைகளும் ஏராளமாகும்.

கிருஷ்ணனையும், பலராமனையும் அழிக்க நினைத்த கம்சன், தநுர்யாகம் காண இருவரையும் அழைத்துவரும்படி அக்குரூரரை கோகுலத்துக்கு அனுப்பிவைக்கிறான்.

Koviloor Digital Library

மதுராபுரிக்கு வந்த ஸ்ரீகிருஷ்ணன், தாய்மாமனோடு "விளையாடி" விட்டு, சபைநடுவிலேயே அநீதியின் முழுவடிவமான கம்சனை சம்ஹரித்து, உக்ரசேனரை மீண்டும் மன்னனாக்கினார்.

ருக்மிணியை மணந்தது, தர்மத்தின் பொருட்டு, மகனான நரகாசுரனை தானே அழித்தது, பாணாசுர, பவுண்டரர்க்கர்களை சம்ஹாரம் செய்தது, சிசுபாலனை வதைத்தது, பாண்டவர்க்குத் தூதனாகி.. கௌரவர் சபையிலே விஸ்வரூப மகத்துவம் நிகழ்த்தியது, குருக்ஷேத்திரப் போர்க்களத்திலே கலங்கிய விஜயனிடம் கீதையைச் சொல்வதுபோல உலக மகாதத்துவத்தைச் சொன்னது.

கீதாச்சாரம்

"அர்ச்சுனா!

எதற்காக நீ அழுகிறாய்? எது நடந்ததோ, அது நன்றாகவே நடந்தது, எது நடக்கிறதோ அது நன்றாகவே நடக்கிறது, எது நடக்க இருக்கிறதோ, அதுவும் நன்றாகவே நடக்கும், உன்னுடையது எதை நீ இழந்தாய்?, எதை நீ கொண்டு வந்தாய், அதை நீ இழப்பதற்கு?, எதை நீ படைத்திருந்தாய் அது பாழாவதற்கு?, எதை நீ கொடுத்தாயோ, அது இங்கேயே உனக்குக் கொடுக்கப்பட்டது, எது இன்று உன்னுடையதோ, அது நாளை மற்றொருவருடையதாகிறது, மற்றொருநாள், அது வேறொருவருடையதாகும், இந்த மாற்றம் உலகின் சாஸ்வத நியதியாகும்"! "எடு வில்லை! விடுபாணம்!"

போர்க்களத்திலே கொல்பவனாகவும், கொல்லப்படுபவனாகவும், இருந்து பூபாரம் தீர்த்த ஸ்ரீகிருஷ்ணன், போர் முடிந்து துவாரகாபுரி மன்னரானார்.

கலியுக முடிவிலே ஒரு வேடன் விடுத்த பாணத்தைக் காரணமாகக் கொண்டு, ஞான மோஹனப் புன்னகை தவழ, காலில் பட்ட காயத்தின் வழியாகவே அவதார ஜீவாத்மாவுக்கு விடுதலைதந்து, ஸ்ரீகிருஷ்ணாவதாரத்தைப் பூர்த்திசெய்து கொள்ளுகிறார் ஸ்ரீஹரி.

Koviloor Digital Library

10. "கல்கி" அவதாரம்

"ஆன்மஞானம் சிதைந்து சீரழியும்! போலிச்சந்யாசிகள் பெருகுவர்! அந்தணர்கள் ஆசார ஹீனர்களாவார்கள்! வேதங்கள் பரிகசிக்கப்படும்! பிள்ளைகள் பெற்றோரை மதிக்கமாட்டார்கள்! மாணவர்கள் குருவையே கேலிசெய்வார்கள்! இனக் கவர்ச்சி நூல்கள் இலக்கியங்களாகும்! சோரம் போவதை மாதர்கள் பெருமையாகக் கருதுவர்! பணமுள்ளவன் அரசனாவான்! (தலைவன்) ஏராளவரிகளைப் போட்டு, ஆட்சியாளர்கள் மக்களை வதைப்பர்! கலப்படக் காரர்கள் கொடிகட்டி வாழ்வர்! கோயில் சொத்துக்களுக்காக பலரும் பேயாய் அலைவர்!..."

கலியுக முடிவில்தான் மேற்படி கொடுமைகள் நடக்குமென்று மகரிஷிகள் எழுதியிருந்தார்கள்!... ஆனால்....! நாலு லட்சத்து முப்பத்து ரெண்டாயிர ஆண்டுகளைக் கொண்ட இந்த (கலி) யுகத்திலே, 5101 வருடங்கள் முடிவதற்குள்ளாகவே. ஞானியர் சொன்ன கலியுக அதர்மப் பட்டியல், பாதிக்குமேல் செயலாகத்தொடங்கி விட்டது!

வடதேசத்திலுள்ள"சம்பள" கிராமத்தில் **"விஷ்ணுயசஸ், சுமதி"** தம்பதியருக்கு மகனாக அவதரித்து... சிரஞ்சீவிகளான வியாசரால் **"கல்கி"** எனப் பெயரிடப்பட்டு, பரசுராமரால் கல்வி, போர் முறைகள் பயிற்று விக்கப்பட்டு.. யாகாதி விஷயமாக குதிரைமீதேறி திக்விஜயம் புறப்படுவார் கல்கி.வீராவேச "கல்கி" எனும் விளக்கிலே, பேயாவேச ஆட்சி புரியும் விட்டில்கள் தானே எதிர்த்துத் தடுமாறி விழுந்து அழிவர்.

பஞ்சமா பாதகம் புரியும் அதர்மக் கூட்டங்களை.. வாளால் அழித்து.. தர்மத்தை ரட்சித்த பின்... பெற்றோர்க்கு முக்தி கொடுத்ததும், முற்றும் துறந்த நிலையிலே, பத்திரிகாச்ரமம் சென்று... தபோநிலையை மேற்கொண்டு, சங்குசக்ரதாரியாக அநந்த கருட விஷ்வக்ஸேநாதி நித்ய சூரிகள் திருவடி தொழ, வைகுந்தத்திலே ஸ்ரீமந் நாராயணப் பேரொளியோடு இரண்டறக் கலந்து விடப்போகும், அதர்ம சம்ஹார கற்கியை மனக்கண்ணால் கண்டு வணங்கி, தருமத்தைக் காப்போமாக.

Koviloor Digital Library

ஆனந்த வைணவம்

"ஆன்ந்தமே ஸ்ரீஹரி" எனும் வைணவமும், 'அன்பேசிவம்' ஆன சைவமும் நமது தாய்த்திரு நாட்டின் விழிகளாகும். இருசமயங்களுமே தொன்மையானவை, ஞானியர்கண்ட உண்மையானவை.

ஜாதி மத இனமொழி வேறுபாடுகளைக் கடந்து, ஆதிமுதல்வனைச் சரணடைகின்ற யாவருமே வைணவரே. உயிர்நிலைக்க உடல் எப்படிக் காக்கப்படுகிறதோ, அதுபோலவே உண்மைச் சமயங்கள் செழிக்க சம்ப்ரதாயக்கோட்பாடுகளைக் நிச்சயம் கடைப்பிடிக்கவேண்டுமென ஸ்ரீவைஷ்ணவம், தீர்க்கமாகவே சொல்கிறது.

'வடகலை, தென்கலை' என்பதும் தமிழ், சமஸ்கிருத மொழிப்பிரச்சினைகளும் இடையிலே வந்தவை, வாழ்வாங்கு வாழ்வதற்கும், பக்திவழியிலே சமுதாயத்தை ஆள்வதற்கும் அவற்றால் தடையில்லை என்பதே இன்றய நடைமுறை உண்மையாகும்!

எழுபத்தி இரண்டுக்கும் மேற்பட்ட முரட்டுத்தன, பயங்கரவாத மதக் குப்பைகளால் நமது பாரதநாடும், பழம்பெரும்சமுதாயமும் சீரழிந்து சிதைந்து கிடந்த காலகட்டத்திலே, ஆழ்வார்களும், நாயன்மார்களும் அவதரித்து "குப்பை"களை அகற்றிச் சுயஞ்ஜோதிச் சுடர்மணிகளான சைவ, வைணவங்களைத் தத்தெடுத்துச் சீராட்டிப் பாராட்டி வளர்த்தனர்.

வைணவத்தின் பெருமை, கடல் போன்றது, கடலின் அடிமடியிலே சிப்பிக்குள் ஒளிரும் முத்துக்களைப் போன்ற அன்பாளர்கள் ஸ்ரீவைஷ்ணவர்கள். கடலின் ஆழத்தையும், முத்துக்களின் முழுமையானஒளியையும் தீர்க்கமாக மதிப்பிடும் பேராற்றல் அடியேனுக்கு (வேம்பத்தூர் கிருஷ்ணனுக்கு) இல்லை! வைணவத்திலே அடியேன் கண்ட, கேட்ட, கற்றறிந்தவற்றைச் சுருக்கமாக அறிவிக்கிறேன்.

Koviloor Digital Library

ஸ்ரீ வைஷ்ணவம்

"ஒன்றேகுலம்" அதுவே பரவாசுதேவ இறையருள் மிக்க வைணவத்தொண்டர் குலம் **"ஒருவனேதேவன்"** அனைத்திலும் அனைத்துமாக விளங்கும் அவன்தான் ஸ்ரீமந் நாராயணன். நன்றான சக்திகள் மூன்று... 1. நல்லற ஞானமும் நால்வகைச் செல்வமும் தருகிற **மஹாலக்ஷ்மி,** 2. தவறுசெய்யும் மாநுடக் குழந்தைகளைக் இதமாகத் திருத்தும் **பூமாதேவி,** 3. திருந்தாத மூடரையும் தனதருள் விருந்தால் பெருமாளின் சீடராக்கிவிடு **நீளாதேவி.**

"நால் வேதங்களான" இருக், யஜூர், சாம அதர்வண நெறிகளும், வேதாந்தங்களான உபநிஷத்துக்கள், மற்றும் இராமாயண, மஹாபாரத, பகவத்கீதை, விஷ்ணு புராணம், நாலாயிர திவ்யப்பிரபந்தம், முதலானவை ஸ்ரீவைஷ்ணவத்தின் ஆதார இலக்கண இலக்கியங்களாகும்.

பெருமாளை ஆதிமுதல் தெய்வமாகவும், பெற்றோரை – திருமால், பிராட்டியாரின் அம்சமாகவும், ஆசிரியரை – ஆசார்யரை – அனைத்துமாகவும் நினைத்துச் சிரத்தாபக்தியோடு செயல்படவேண்டியது வைணவச் சட்டமாகும்.

ஐந்து அங்கங்களை –கடமைகளை – செய்பவரே ஐயங்கார்– ஷைஐந்து கடமைகளையும் பக்தி சிரத்தையுடன் எந்தக் குலத்தவர் மேற்கொண்டாலும் அவர்களும் அஃதே.

தாபம் : தோள்களிலே சங்கு சக்கர முத்திரைப்பதித்துக் கொள்வது.

புண்ட்ரம் : பன்னிரு திருமண் காப்பு நாமங்களை அணிந்துகொள்வது.

நாமம் : பெயரோடு, "தாஸ்ய நாமம்" ஒன்றைச் சூடிக்கொள்வது

மந்திரம் : சமயதீட்சை மந்திரங்களை நாள்தோறும் ஜபம் செய்வது.

யாகம் : "ஆராதனை" என்கிற நாராயணபூஜையை, தவறாமல் செய்வது.

"வைகானசம், பாஞ்சராத்திரம்" –ஆகிய இரு ஆகமங்களைக் கடைப்பிடிக்கும் பெருமாள் கோயில்களிலே, சர்வபாபவிநாச, சர்வாரோக்ய துளஸித்தீர்த்தமும் "சடாரி" யு மே பிரதானமானவை.

Koviloor Digital Library

108- திவ்விய தேசங்களைப் பாடிய ஆழ்வார்களையும், அறநெறிகளைப் பேணி வளர்த்த ஆசார்யர்களையும், ஸ்ரீவைஷ்ணவம் கீழ்கண்டபடி வரிசைப்படுத்தியுள்ளது.

ஸ்ரீ பரம பதநாதன் (மகாவிஷ்ணு) பெரியபிராட்டி (மகாலக்ஷ்மி) விஸ்வக்ஷேனர் என்கிற சேனைமுதலி, நம்மாழ்வார், நாத முனிகள், உய்யக் கொண்டார், மணக்கால்நம்பி, ஆளவந்தார், பெரியநம்பி, ராமாநுஜர், எம்பார், பராசரபட்டர், நஞ்சீயர், நம்பிள்ளை, வடக்கு திருவீதிப் பிள்ளை, பிள்ளைலோகாசார்யர், திருவாய் மொழிப்பிள்ளை, மணவாள மாமுனிகள், பிள்ளான், கிடாம்பிஆச்சான், எங்களாழ்வான், நடாதூரம்மாள், அப்புள்ளார், நிகமாந்த மஹாதேசிகன், நயனாசார்யர்.. முதலானவர்...

திருக்கோவலூரிலே முதல் ஆழ்வார் மூவருடன் - இருளிலே - பெருமாளும் ஒருசேர வந்து நின்ற ஸ்பரிஸ தீட்சையால், ஆழ்வார்களும், பெருமாளுக்குச் சமமாகிறார்கள்.

பிற்காலத்திலே ஸ்ரீராமாநுஜர், "**திருக் குலத்தார்**" என்று தீண்டாமையை அன்றே ஒழித்தவர்; அட்டமா சித்திகளைப் பெற்றிருந்தும் அடியவர் சேவைக்கே தன்னை முழுவதுமாக அர்ப்பணித்துக் கொண்ட **நாதமுனி**களும்.... பிற்கால.... தற்கால வைணவப் பெரியோர்களின் சிரத்தா பக்தியுமே வாழும் வைணவத்தின் தனிச்சிறப்புகளாகும்.

கோபியர் வடிவிலே மகரிஷிகள் கண்ணனைக் காதலித்தது- அன்புகொண்டது - இன்றும் "அரையர்சேவை" யாகத் தொடர்கிறது ஸ்ரீ ரங்கம், ஸ்ரீவில்லிபுத்தூர், ஆழ்வார்திருநகரி முதலானதிவ்யதேசங்களிளின் (கோயில்களின்) திருவிழாக்களிலே.

தலைமை நாற்காலிக்குப் போட்டியிடாமல், தொண்டருக்குத் தொண்டராக வாழத்துடிக்கும் தூய எளிய பண்பாடும், தாய்மையின் பரிவும், தந்தையின் கண்டிப்பும், குருவின் கட்டளையும், பெருமாளின் கருணையுமே வைணவத்தின் மணி மகுடங்கள்.வைணவ , வைணவர் பெருமைகளைப் சுடர்மணிக் கவிதையாக. "சாம்பிள்" தருகிறேன்.

Koviloor Digital Library

கடவுளைச் சரணடையும்
தத்துவமே வைணவம்
காண்பதெல் லாம்ஹரி
என்பதே வைணவம்
இடர்தீர்த்து பிறர்க்குதவும்
எளிமையே வைணவம்.
ஏழைபணக் காரபேதம்
இல்லாதது வைணவம்.

மறந்தும் புறந்தொழா மனந்தரும் வைணவம்
“மாலுக்கு அடிமைசெய்” சொல்வது வைணவம்
நிறைகுடம் போல்வாழச் செய்வது வைணவம்
நேர்மையால் வைகுந்த நிலைதரும் வைணவம்

பரமாத்ம ஜீவாத்ம சங்கமம் வைணவம்
பாரதம் முழுவதும் ஸ்ரீராம வைணவம்
பெருவாழ்வு தருகின்ற கோட்பாடு வைணவம்
பேரின்பப் பாலாழிப் பெருமாளே வைணவம்.

வேதவே தாந்தத்தை அறிந்தவர் வைணவர்
விஜயனாய் கண்ணன்வழி செல்பவர் வைணவர்
கோதைத் தமிழ்பாடும் குலத்தவர் வைணவர்
குருவையும் ஹரியையும் கும்பிடுவோர் வைணவர்.

எல்லோ ரையும்வாழ்த்தும் இனியவர் வைணவர்
ஏணியாய் நின்றுதவும் இறையவர் வைணவர்
நல்லோர்கள் என்பதன் இலக்கணம் வைணவர்
நால்வேத சாட்சியாய் வாழ்பவர் வைணவர்.

பொய்வஞ்ச லஞ்சங்கள் புரியாதார் வைணவர்
பூமிஉயிர் அனைத்தையும் போற்றுவோர் வைணவர்
நெய்பால் வெண்ணெய்என ருசிப்பவர் வைணவர்
நினைவெலாம் ஆழ்வாராய் இருப்பவர் வைணவர்.

Koviloor Digital Library

காலத்தை வென்ற ஆழ்வார்கள்

ஸ்ரீ ஹரியின் பரிவார அம்சங்களான வைகுந்தவாசிக;ள், நாமும், நாம் வாழும் உலகமும் உய்யும் பொருட்டு, பூமியிலே வந்து பிற்ந்து திருமாலின் பக்தியிலே ஆழ்ந்து கனிந்து பைந்தமிழால் நாலாயிர திவ்யபப் பிரபந்தங்களைப் பாடியவர்கள் ஆழ்வார்கள்.

ஆழ்வார்களின் காலத்தை யுக யுகாந்திரக் கணக்கிலே, "காலத்தை வென்றோர்" என்று கொண்டாடியதெல்லாம் அந்தக் காலம்! பிரம்ம தேவனுக்குக் கூட "ஹேப்பிபர்த்டே" கூறி கேக் வெட்டத்துடிக்கும் பகுத்தறிவு பெருகிவிட்ட காலத்தின் கோலத்தால், பேரறிஞர்கள் பலர் ஆராய்ந்து... கி.பி. 5–ஆம் நூற்றாண்டு முதல், 9 –க்குள்தான் வைணவ ஆழ்வார்களும், சைவநாயன்மார்களும், அவதரித்தனர் என தீர்ப்பளித்துவிட்டனர்.

இருண்டு கிடந்த நமது தாயகத்தை ஒளிபெறச் செய்த நாயன்மார்களையும், ஆழ்வார்களையும் ஸ்ரீ ஹரி ஹரர்கள் மட்டும் பூமிக்கு அனுப்பி இராவிட்டால், நமது சநாதனதர்மமெல்லாம் முழுச்சமாதியாகிப்புல்முளைத்திருக்கும்! அனைத்துப் புராணங்களிலும் "பெரியபுராணம்" எது தெரியுமா? சைவ நாயன் மார் அறுபத்து மூவரது வரலாறுதான்! அதுபோலவே, நாலாயிர திவ்யப் பிரபந்தம் தந்த ஆழ்வார்கள் வரலாறுதான், வைணவத்தின் கலங்கரை விளக்கமாகும். தலம், தீர்த்தம், மூர்த்திகளின் தத்துவம், நாட்டுவளம், மாமன்னர் பரம்பரை, மக்களின் வாழ்வுமுறைகளைக் கூறும், பாரதத்தின் பொற்காலச் சாசனமாக விளங்குவது, பன்னிரு ஆழ்வார்களின் வரலாறும், திவ்யப் பிரபந்தங்களும்.

"பொய்கை பூதன் பேயார் பொன் மகிழைக்
கோன் மாறன்
செய்ய மதுரகவி சேரர்பிரான் –
வையகமென்
பட்டர்பிரான் கோதை தொண்டர்
பாதப்பொடி
கட்டவிழ்த்தார் வாட் கலியன்"

Koviloor Digital Library

1. பொய்கை ஆழ்வார்

ஸ்ரீ கேசவனின் பாஞ்சசன்ய (சங்கு) அம்சமாக காஞ்சி – திருவெஃகா, சொன்ன வண்ணம் செய்த பெருமாள் ஆலய வளாகத் திருக்குளத்திலே – (பொய்கை) சித்தாத்ரி – ஐப்பசி – செவ்வாய் – அட்டமி – திருவோண நட்சத்திரத்திலே அவதரித்தார் பொய்கையாழ்வார்.

"ஹரியும் சிவமும் ஒன்றான தெய்வங்களே, யார் யார் எதையெதை வழிபடுகிறார்களோ, அதனதன் மூலமாக ஞான, சௌபாக்கிய வைபோகங்களை அடையமுடியும்" என உறுதியாகச் சொன்னவர்.

"அடுத்தவரைப் பழிப்பதானது, தன்னைத்தானே அழித்துக் கொள்வதாகும்; ஜீவாத்மாவானது பரமாத்மாவுடன் இணைவதே மாநுடப் பேரின்பமாகும்" என்றெல்லாம் உபதேசித்து மக்களை நல்வழிப்படுத்தி சமுதாயத்திற்கு உண்மைகளையும், சன்மார்க்கத்திற்கு நன்மைகளையும் செய்தபடி நெடுங்காலம் வாழ்ந்து திருநாடு கண்டவர் பொய்கையார்.

முதல் திருவந்தாதி நூறு பாசுரம் தந்தவர், ஏழு திவ்யதேசங்களை மங்களாசாசனம் செய்தவர்.

"வானாகித் தீயாய் மறிகடலாய் மாருதமாய்த்
தேனாகிப் பாலம் திருமாலே ஆனாய்ச்சி
வெண்ணெய் விழுங்க நிறையுமே, முன்னொருநாள்
மண்ணை உமிழ்ந்த வயிறு.

வையம் தகளியா வார்கடலே நெய்யாக
வெய்ய கதிரோன் விளக்காக – செய்ய
சுடராழி யானடிக்கே சூட்டினேன் சொன்மாலை
இடராழி நீங்குகவே என்று.

– பொய்கையாழவார்

Koviloor Digital Library

2. பூதத்தாழ்வார்

ஸ்ரீமந் நாராயணனின் "கௌமோதகி" எனப்படும் கதாயுத அம்சமாக – சித்தாத்ரி – ஐப்பசி – புதன் – நவமி – அவிட்ட நட்சத்திரத்திலே, சென்னையை அடுத்த மாமல்லை (மகாபலிபுரம்) நந்தவனத்திலே குறுக்கத்திமலரிலே அவதரித்தவர் பூதத்தாழ்வார்.

பிள்ளைப்பருவமுதல், பிறவிப் பயன்தீர்த்து பரமபதம் ஏகும்வரை, கடல் மல்லைப் பெருமாளில் தொடங்கி, 13– திவ்யதேசங்களை மங்களா சாசனம் செய்தவர். "ஞானத்தமிழ்புரிந்த நான்" என்று தெய்வத் தமிழைத் திருமாலுக்குகந்த தேவாமிர்த மொழியாக்கியவர்.

திருமறைகளின் அரும்பொருள் கண்டவர், பொய்கையார் கண்ட பரபக்தித்தத்துவத்தின் பூர்ணத்வம் உணர்ந்த புனிதர். பஞ்சபூத தத்துவங்களைப் பாமரரும் புரிந்திட உபதேசித்ததால் "பூதத்தார்" என வணங்கப் பெற்றார். இவர்பாடிய இரண்டாம் திருவந்தாதியின் 100– பாடல்களிலே ஏழுமலை வாசனாகிய ஸ்ரீனிவாச வேங்கடவனை மட்டும் ஒன்பது பாசுரங்களில் போற்றியுள்ளார்.

"சிறந்தார்க் கெழுதுணையாம் செங்கண்மால் நாமம்
மறந்தாரை மானிடமா வையேன் –
அறந்தாங்கும்
மாதவனே என்னும் மனம்படைத்து
மற்றவன்பேர்
ஓதுவதே நாவிலா லுள்ளு"

அன்பே தகளியாய் ஆர்வமே
நெய்யாக
இன்புருகு சிந்தை இடுதிரியா –
நன்புருகி
ஞானச் சுடர்விளக்கு ஏற்றினேன்
நாரணர்க்கு
ஞானத் தமிழ் புரிந்த நான்.

– பூதத்தாழ்வார்

Koviloor Digital Library

3. பேயாழ்வார்

ஸ்ரீ மாதவனின் வாளின் அம்சமாக உலகப்பொது மறை தந்த திருவள்ளுவர் அவதரித்த சென்னை மயிலாப்பூரிலே, சித்தாத்ரி – ஐப்பசி – வியாழன் – தசமி – சதயநட்சத்திரத்திலே, ஸ்ரீ ஆதிகேசவப் பெருமாளின் கோயில் கிணற்றருகே செவ்வல்லி மலர்ப்புதரிலே அவதரித்தவர் பேயாழ்வார்.

கருவிலேயே திருநிறைந்து வந்து, வளர்ந்ததும், பெருமாளின் திருஅருள் நிறைந்தவராய், கேசவப்பெருமாள் கோயிலையே தனது பல்கலைக்கழகமாக்கிக் கொண்டவர். வேத இதிகாச புராண உபநிஷத் அனைத்தும் தானே கைவரப்பெற்றார். பாட்டும் படிப்புமாக சர்வசதா காலமும் நாட்டை, சமுதாயத்தை சுற்றுச் சூழலை மறந்திருந்ததால், **"பேய்பிடித்ததோ"** எனச் சிலரது பிதற்றலே அவரது பெயராக மாறியது.

காலத்தால் முந்திய பொய்கையார், பூதத்தார், இவர் ஆகிய மூவரும் **முதலாழ்வார்கள்.** திரிவிக்ரமப்பெருமாளை நேரிலேயே தரிசனம் பெற்றதோடு, ஸ்ரீ ஹரியின் திருமேனி ஸ்பரிசமும் பெற்ற அருளாளர்கள்.

பேயாழ்வார்பாடிய மூன்றாம் திருவந்தாதியில் 100 – பாசுரம். 15 திவ்யதேசங்கள் சென்று மங்களாசாசனம் செய்தவர் பேயாழ்வார் .

"தாள்சடையும் நீள்முடியும் ஒண்மழுவும் சக்கரமும்
சூழ்அரவும் பொன் நாணும் தோன்றுமால் – சூழும்
திரண்டருவி பாயும்
திருமலைமேல் எந்தைக்கு
இரண்டுருவும் ஒன்றாய் இசைந்து".

– பேயாழ்வார்.

Koviloor Digital Library

4. திருமழிசை ஆழ்வார்

ஸ்ரீ கோவிந்த ராஜனின் சக்கரத்து அம்சமாக, சென்னையை அடுத்த திருமிழிசையிலே... சித்தாத்ரி – தை – ஞாயிறு – பிரதமை – மக நட்சத்திரத்திலே கைகாலற்ற முண்டமாகப் முனிவருக்குப் பிறந்து, வேடன், மற்றும் வேளாளர்களின் பிரார்த்தனைகளால், முழுக்குழந்தையாகி வளர்ந்து, பலசமய வரலாறுகளைப் படித்தும் தெளிவில்லாமல், பேயாழ்வாரிடம் உபதேசம் பெற்றுத் தெளிந்து சித்தர்நிலை கண்டவர் திருமழிசையாழ்வார். மண்ணைப் பொன்னாக்கவும் கிழவியை குமரியாக்கவும் செய்த அவரை, தன்னைப் பாடச் சொன்னான் நாடாண்ட ஒரு மன்னன். "மாநிடரைப் பாடோம்" என அவரது சீடரான கணிகண்ணன் பதில்கொடுத்தார்.

குருவையும் சீடரையும் நாடு கடத்தினான் ராஜா, பெருமாளையும் தன்னோடு வரக் கட்டளையிட்டார் குரு. பெருமாளும் 'பாய்" சுருட்டிப் புறப்பட்டுவிடுகிறார். சித்தரிடம் மன்னன் சரணாகதியானான்.

மந்திர, யாக, யக்ஞங்களால் பாமரமக்களை ஏமாற்றிய பண்டிதர் களைத் திருத்தி, சமுதாய உயர்வுக்கு மட்டுமே இறையருட் சக்திகளைப் பயன்படுத்த வேண்டும் என்னும் படிப்பினையைத் தீர்க்கமாகத் தந்து 17– திவ்யதேசம் சென்று, நான்முகன் திருவந் தாதி, திருச்சந்த விருத்தம் ஆகிய 216 பாடல் களைப் பாடியுள்ளார் திருமழிசை ஆழ்வார்.

ஒன்றிரண்டு மூர்த்தியாய்
உறக்கமோடு உணர்ச்சியாய்
ஒன்றிரண்டு காலமாகி
வேலைஞால மாயினாய்
ஒன்றிரண்டு தீயுமாகி
ஆயனாய மாயனே
ஒன்றிரண்டு கண்ணினானும்
உன்னையேத்த வல்லனே"

– திருமழிசை ஆழ்வார்

Koviloor Digital Library

5. நம்மாழ்வார்

ஸ்ரீ மகாவிஷ்ணுவின் காவலதிகாரி விஷ்வக்ஸேனர் அம்சமாக, நெல்லை மாவட்ட திருக்குருகூரிலே காரியார் – நங்கை தம்பதி மகனாக... பிரமாதி – வைகாசி – வெள்ளி – கடகம் – விசாக நட்சத்திரத்திலே பிறந்தவர் இவர், பெற்றோர் இட்ட பெயர் மாறன்.

பிறந்தகுழந்தை "ஜடமாக"க் கிடந்தது! திடீரெனத் தோன்றிய புளியமர (ஆதிசேஷ) நிழலிலே பிள்ளையைப் போட்டுக் காத்தனர் பெற்றோர். உருமாறி வந்த ஸேனை முதலியாரின் மந்ரோபதேசத்தால் ஞானம் பெற்று, குழந்தைப்பருவத்திலேயே தியானத்திலே மூழ்கி, பதினாறு – ஆண்டுகள் அப்படியே இருந்துவளர்ந்தார்.

ஆதர்ஸ குருவாக நாடெல்லாம் இவரைத் தேடி அலைந்த மதுரகவியைக் கண்டதுமே, குருவும் சீடரும் ஒன்றாகப் பெருமாளின் திருவருளைப் பெற்றனர். மண்ணுலகிலே திருமாலின் வைகுந்த "தர்பார்" மகத்துவம் கண்ட ஒரே மாநுடர் நம்மாழ்வார்.

நால்வேத சாரங்களாக திருவிருத்தம், திருவாசிரியம், பெரியதிருவந்தாதி, திருவாய்மொழி... இப்படியாக 1296 – பாசுரங்களை அருளி, 36 திவ்ய தேசங்கள் சென்று சாசனம் செய்தவர் இவர். அருள்மாறன், சடகோபன் முதலான பத்துக்கும் மேற்பட்ட சிறப்புப் பெயர்களைக் கொண்ட "**வைணவ உலகின் ஞானசூரியன்**" நம்மாழ்வார்.

"பயிலும் சுடரொளி மூர்த்தியைப்
பங்கயக் கண்ணனை
பயில இனியநம் பார்க்கடல் சேர்ந்த பரமனை
பயிலும் திருவுடை யார்யவ ரேலும் அவர் கண்டீர்
பயிலும் பிறப்பிடை தோறெம்மை
ஆளும் பரமரே" **– நம்மாழ்வார்**

Koviloor Digital Library

6. மதுரகவி ஆழ்வார்

ஸ்ரீ மதுஸூதனனின் பரிவார "குமுதர்" அம்சமாக... பாண்டிநாடு திருக்கோளூரிலே அந்தணர் குலத்திலே... ஈஸ்வர – சித்திரை – வெள்ளி – சதுர்த்தி – சித்திரை நட்சத்திரத்திலே... பிறந்து குலாச்சாரப் புனிதம் குறையாமல் வளர்ந்தவர் மதுரகவி.

பள்ளிப் பருவத்திலேயே வேத ஆகம புராண மற்றும் இறையருட் பாசுரங்களிலே முழு ஈடுபாடு கொண்டு... மதுர கீதங்களிலே மெய்மறந்துவிடுபவர் ஆதலால் "**மதுரகவி**" ஆனார். இசை வழியிலே பகவானைக் காண காஞ்சி, அயோத்தி யென வலம் வந்தபோது, திருவருள் பெற, முதலிலே குருவருள் தேவை என்பதை உணர்ந்து, ஞானநிலையிலே, – மனத்திரையிலே – குருகூரிலே மோனத்தவத்திலிருந்த நம்மாழ்வாரின் தரிசனம் பெற்றார். உடனே புறப்பட்டார். திருப்புளி மரத்து நிழலிலே மதுரகவி, குருதரிசனம் பெற்றதும். மௌனமாகவே இருந்த குரு நம்மாழ்வார், மளமள வென்று பாடத் தொடங்கினார்.

கடவுளுக்கு துரோகம் செய்தாலும் குருவருளால் மீள முடியும், குருத்துரோகத்திற்கு விமோசனமே இல்லை என்பதை உணர்த்துவதற்கே காலமெல்லாம்" தேவுமற்றறியேன்' என குருநாதரான நம்மாழ்வாரை மட்டுமே பாடியவர். மதுரகவி.

இவர் அருளிய "கண்ணினுண் சிறுதாம்பு' 11. பசுரங்களை திவ்யபிரபந்த முதலாயிரத்திலே இணைத்த பெருமை, ஸ்ரீ நாதமுனிகளையே சாரும். ஆசார்ய பக்திக்கு இலக்கணம், **மதுரகவிஆழ்வார்.**

**"அருள் கொண்டாடும்
அடியவர் இன்புற
அருளினான் அவ்வரு
மறையின் பொருள்
அருள்கொண்டு ஆயிர
மின்றமிழ் பாடினான்
அருள் கண்டீர்
இவ்வுலகினில் மிக்கதே"**

– மதுரகவியாழ்வார்.

Koviloor Digital Library

7– குலசேகர ஆழ்வார்

ஸ்ரீ திரிவிக்ரமனின் "கௌஸ்துப" மாலையின் அம்சமாக இன்றய கேரள மாநில, திருவஞ்சைக் களத்திலே சேரமன்னர் **"திடவிரதன்"** மகனாக... பாராபவ – மாசி – வெள்ளி – துவாதசி – புனர் பூசத்தில் அவதரித்தவர் குலசேகரர்.

பாலப்பருவம் கடந்து, ஆயகலை களைக்கற்று முடித்து, இல்லற மனைவியின் பேரன்பைக் கண்டு, நல்லறப்பிள்ளைகளையும் பெற்று, குலசேகரர் இருந்த போது தந்தையாகிய மாமன்னர் காலம் ஆகிறார்.

குலசேகரர் மன்னராகி மாவீர சாதனைகளோடு, இடைவிடா ராமபக்தனாகவும் விளங்கி, அடிக்கடி பரவசத்தால் தனைமறப்பார். இந்நிலையை மாற்றுதற்காக.. "அரண்மனை பூஜாமூர்த்தியை அர்ச்சகர்திருடினார்" என்பது. அதை நம்பாதமன்னர். குடத்துள் நாகத்தை வைத்து மூடி, "அர்ச்சகர் எடுத்திருந்தால் நீ என்னைத் தீண்டுக" என்றபடி குடத்தினுள் கையை விடுவது. நாகம் தீண்டாமல் ஒடி மறைவது. நடந்ததைக் கூறி அமைச்சர் பிரதானியர் குலசேகரரிடம் மன்னிப்பு கேட்கின்றனர். அடுத்தும் இதுபோன்ற ஓர் ராமாயண சம்பவத்திலே ஆவேசம் கொண்டு சுயநினைவு பெற்ற மன்னர், தன் மகனிடம் ராஜ்யபாரத்தை ஒப்படைத்து" குலசேரப் பெருமாள்" ஆகி, "பெருமாள் திருமொழி" யாக 105 – பாசுரங்களைப் பாடி, ஏழு திவ்விய தேச தரிசனம் கண்டு திருமாலின் நிழலாகிறார் **குலசேகராழ்வார்.**

"மலையதனால் அணைகட்டி மதிளிலங்கை அழித்தவனே
அலைகடலைக் கடைந்து அமரர்க்கமுது அளித்தவனே
கலைவலவர் தாம் வாழும் கணபுரத்தெம் கருமணியே
சிலைவளவா சேவகனே ஸ்ரீராமா! தாலேலோ."

– குலசேகராழ்வார்

Koviloor Digital Library

8. பெரியாழ்வார்

ஸ்ரீ வாமனாவதாரனின் ஊர்தியாய், கொடியாய் விளங்கும் கருடனின் அம்சமாக... குரோதன – ஆனி – ஞாயிறு – ஏகாதசி – சுவாதி – நட்சத்திரத்திலே ஸ்ரீ வில்லிபுத்தூர் **முகுந்தபட்டர் – பதுமவல்லி** மகனாகப் பிறந்தவர் இளமை முதலே பாசுரப் புலமை பெற்ற இவர், "வடபெருங்கோயிலா" னுக்கு மாலை கட்டும் பணியைத் தனது வாழ்வின் பிரதான லட்சியமாகக் கொண்டார். பூமாலை கட்டித்தருகிற இவருக்குப் பெருமாள், புகழ்மாலை சூட்ட விரும்பினான்.

"முடிவிலா மெய்ப்பொருள் எது?" எனும் சந்தேகம் கொண்ட மதுரைப் பாண்டியன், விடை தருவோருக்குப் பொற்கிழி அறிவிக்கிறான். பெரியாழ்வாரின் கனவிலே வந்து திருமால் சொன்னபடி, மதுரை சென்று அவனருளால், "இது தான் மெய்ப்பொருள்' என உணர்த்தி, பொற்கிழியைப் பெறுகிறார் **விஷ்ணுசித்தர்.** அலங்காரயானைமேல் பெரியாழ்வாரை திருவீதி உலாவரச் செய்கிறான் மன்னன். வானவர் அணியோடு கருடவாகனத்திலே ஸ்ரீ மந்நாராயணன் வந்து, அந்தக் கோலாகலத்தைக் கண்டு மகிழ்கிறான். தேஜோமயமான திருமாலை, வானவீதியிலே கண்ட பெரியாழ்வார், ஊரார் கண்பட்டிருக்குமே என்று பதறியபடி, ஆவேச ஆர்வத்திலே **"பல்லாண்டு"** பாடுகிறார் படைத்தவனுக்கே.

"பட்டர்பிரான்" ஆகி உலகப் புகழ் பெற்ற பெரியாழ்வார், திருப்பல்லாண்டுடன், 473 பாசுரமும் 19 திவ்யதேச தரிசனமும் பெற்று ஆண்டாளைப் பெருமாளிடம் கொடுத்தவுடன் அரங்கனைச் சேர்ந்தார்.

"பல்லாண்டு பல்லாண்டு
பல்லாயிரத் தாண்டு
பலகோடி நூறாயிரம்
மல்லாண்ட திண்தோள்
மணிவண்ணா! – உன்
சேவடி செவ்வி திருக்காப்பு."

– பெரியாழ்வார்

Koviloor Digital Library

9. ஆண்டாள்

ஸ்ரீ தரனின் தேவியர் அம்சமாக வில்லிபுத்தூர் பெரியாழ்வாரின் துளசிப்பு தரிலே... நள – ஆடி – செவ்வாய் – பூரநட்சத் திரத்திலே குழந்தை யாகத்தவழ்ந்தவள் "கோதை" யாகிய ஸ்ரீஆண்டாள்.

வாரிசில்லாத விஷ்ணுசித்தர், வந்த பெண்மகவைக் கண்மணி போல் காத்தார். பிராட்டியாரின் அம்சமான கோதை நாச்சியார், பூமாலை கட்டும் போதே, ஸ்ரீ கிருஷ்ணருக்குப் 'திருப்பாவைப்" பாமாலையும் படைத்தாள். பெருமாள் பற்றிய பாசுரங்களை வீட்டில் தந்தை பாடிப்பழகி அனுபவிப்பது போல, அவனுக்கான பூமாலைகளை நான் அணிந்து பார்த்து அனுப்பினால் என்ன? என நினைத்தாள். நாளும் அதையே தொடர்ந்தாள். ஒர்நாள் இதைக் கண்டுவிட்ட பெரியாழ்வார் "அபசாரம்" என புதுமாலையோடு ஆலயம் சென்றார் "கோதைசூடிய மாலையே நமக்கு உகந்தது" எனும் பெருமாள் அசரீரி! அதிர்ந்துபோன ஆழ்வார் பெண்ணுக்கு வரன் தேடினார். "அரங்கனே தன் மணவாளன்" என்றாள் ஆண்டாள். "பல்லாண்டு பாடிய சித்தரே! உமது மகளோடு திருவரங்கம் ஆலயத்துள் வருக" எனக் கனவிலே ஸ்ரீ ரங்கநாதனின் கட்டளை வந்தது விஷ்ணு சித்தருக்கு.

பூலோக வைகுந்த மூலவர் முன்பாக, மணக்கோலத்திலே ஆண்டாள்; சிரத்தாபக்தியால் மானுடமும் தேவநிலையைக் காணமுடியும் எனும் மகத்துவம் நிகழ்ந்தது! ஸ்ரீ ரங்கநாதரெனும் பெருஞ்ஜோதியிலே, சூடிக்கொடுத்த சுடர்க்கொடியான திருப்பாவை ஆண்டாள் சுடரானாள். திருப்பாவை– 30, நாச்சியார் திருமொழி – 143. ஆக ஆண்டாள்பாட்டு 173. சாசனம் செய்த திவ்ய தேசங்கள் பதினொன்று.

"ஆழிபோல் மின்னி வலம்புரிபோல் நின்ற திர்ந்து
தாழாதே சார்ங்க முதைத்த சரமழைபோல்
வாழ உலகினில் பெய்திடாய் நாங்களும்
மார்கழி நீ ராட மகிழ்ந்தேலோ ரெம்பாவாய். – ஆண்டாள்

Koviloor Digital Library

10. தொண்டரடிப்பொடி ஆழ்வார்

ஸ்ரீ ஹ்ருஷிகேசனின் "வைஜயந்தி" எனும் வனமாலை அம்சமாக குடந்தையை அடுத்த -திருமண்டங்குடியிலே - பிரபவ - மார்கழி - செவ்வாய் - சதுர்த்தசி - கேட்டை நட்சத்திரத்திலே சோழியர் குல குடும்பத்து ஒரே வாரிசாகப் பிறந்து **"விப்ரநாராயணர்"** என்ப் பெயரிடப்பெற்றவர்.

ஆரம்ப அவசியக் கல்வியை அடுத்து, திருவரங்கத்தானுக்கு மலர்த்தொண்டு செய்வதையே முதல் தொழிலாகக் கொண்டார். இந்திரனின் காவளம் போன்ற அவரது பூவனத்தை, தேவதாசியரான சுந்தரியர் இருவர் கண்டு வியந்து நின்றனர். இளையவளான **தேவதேவி,** விப்ரநாராயணரை விரும்புகிறாள், "அவர் மகான் நீதாஸி" என மூத்தவள் எச்சரிக்கிறாள்! "பார் எனது வெற்றியை" என்ற தேவதேவி, தனது பேரழகால் அதைச் செயலாக்கிவிடுகிறாள். செல்வம் அனைத்தையும் இழந்த அவர் விரட்டப்படுகிறார். சிற்றின்ப வெறியால் துடிக்கும் பக்தனைக் காக்க, பெருமாளே பொன் வட்டிலை வீட்டுக்கு அனுப்புகிறான். கோயிலில் திருடிய குற்றத்திற்காக பக்தன் சிறை கண்டதும், அரங்கனே மீட்கிறார்.

இல்லறமில்லாச் சிற்றின்ப வெறியால் சிறைகண்ட விப்ர நாராயணர், **தொண்டரடிப்பொடி**யாகி, காலமெல்லாம் நல்லறமிக்க ஸ்ரீமந் நாராயணனின் புகழ்பாடி, பூலோக வைகுந்த மாகிய ஸ்ரீரங்கப் பேராலயத்தின் நிழலிலேயே ஒளியாகி விளங்குகிறார். அவர் பாடிய திருமாலை - 45, திருப்பள்ளி எழுச்சி - 10, மொத்தம் 55- பாசுரங்கள்

"பச்சைமா மலைபோல் மேனி
பவளவாய் கமலச்செங்கண்
அச்சுதா அமரர் ஏறே "ஆயர்தம்
கொழுந்தே" என்னும்
இச்சுவை தவிரயான்போய்
இந்திர லோகம் ஆளும்
அச்சுவை பெரினும் வேண்டேன்
அரங்கமா நகருளானே"

- தொண்டரடிப்பொடிஆழ்வார்

Koviloor Digital Library

11. திருப்பாணாழ்வார்

ஸ்ரீ பத்மநாபனின் இடதுதோள் மச்சத்தின் அம்சமாக திருச்சியை அடுத்த உறையூரிலே, பஞ்சமர் – ஹரிஜன் – வீட்டிலே.. துன்மதி – கார்த்திகை – புதன் – துவிதிதை – ரோகிணி நட்சத்திரத்திலே அவதரித்து "**பாணர்**" எனப் பெயரிடப் பெற்றார்.

"சிதம்பரம் போகாமல் இருப்பேனோ?" என்ற நந்தனாரைப் போல, ஸ்ரீரங்கம் காணாமல் உண்பனோ!" எனும் கொள்கையிலே அன்றாடம் காவிரியில் நின்று, ஸ்ரீரங்க கோபுரத்தைக் கண்டு, யாழை மீட்டிப் பரமனைப் போற்றியபின்பே, குடிசை திரும்பிக் கூழ் குடிப்பார் இவர். (அந்த நாளிலே ஹரிஜன ஆலயப்பிரவேச உரிமை இல்லை)

மார்கழிப் பனியிலே மெய்மறந்து பெருமாள் நினைவிலே காவிரி நடுவிலே நின்றார் பாணர். ஸ்ரீரங்கபூஜா உரிமைப் பட்டாசார்யர் சாரங்கமுனிவர். பாணரை விலகும்படி சைகைசெய்தார், குரல் தொடுத்தார் பாணரின் தவம் கலையவில்லை. கல்லால் அடித்து தீர்த்தக் குடத்துடன் ஒதுங்கிப் போனார் முனிவர். ஆலயத்துள் மூலவர் நெற்றியிலே ரத்தம் வழிந்ததைக் கண்டு முனிவர் அலறினார். "பாணரைச் சுமந்து வருக" எனும் பெருமாள் கட்டளைப்படி பாணர் "**முனிவாகனர்**" ஆனார்.

பெருமாளை நேரில் கண்டதும் பரவசம் கொண்ட பாணர், "என்னமுதினைக் கண்ட கண்கள் மற்றொன்றைக் காணவே" எனப்பாடியபடியே பரமாத்மனின் நிழலானார், அவரது "அமலாதிபிரான்" பத்துத் பாசுரங்கள். சாசனம் செய்த கோயில்கள் மூன்று.

"பாரமாய பழவினைப் பற்றறுத்து என்னைத்தன்
வாரமாக்கி வைத்தான் வைத்தற்றி யென்னுள் புகுந்தான்
கோரமாதவம் செய்தனன் கோலறியேன் அரங்கத்தம்மான் திரு
வாரமார் பதன்றே அடியேனை ஆட்கொண்டதே."

– திருப்பாணாழ்வார்

Koviloor Digital Library

12. திருமங்கையாழ்வார்

ஸ்ரீ தாமோதரனின் வில்லின் அம்ச மாக... திருக்குறையலூர் மாவீர மறவர்குலத் திலே... நள – கார்த்திகை – வியாழன் – பௌர்ணமி – கிருத்திகை நட்சத்திரத்திலே வீரசைவ **ஆலிநாடுடையர்** மகனாகப் பிறந்த வர், இயற்பெயர் **நீலன்**.குலத்திற்கேற்ற வீரத் தால் பலபோர்களிலே வெற்றி கண்டு, தளபதி யாகி... "திருமங்கை"யெனும் பேரெழில் மிக்கஓர் நாட்டையே ஆளும் மாமன்னராகிறார்.

தேவமங்கையான சுமங்கலை! ஒரு சாபத்தால் பூமிக்குவந்து, குமுதவல்லியாக வாழ்கிறாள். குமுதவல்லியை திருமங்கை மன்னன் விரும்புகிறான். "என்னை மணப்பவர் வீரவைணவராகவேண்டும். தினசரி 1008 – அன்பர்களுக்கு உணவிடவேண்டும்" என்கிறாள் அனைத்தையும் ஏற்று மணமுடித்து, அன்னதானத்திற்காக... கப்பம் செலுத்தாமல் போனதால் பேரரசால் சிறையில் அடைக்கப்படுகிறார் திருமங்கை மன்னர்.

முரட்டுபக்தனை மீட்பதற்காக ஸ்ரீ ஹரி, காஞ்சிப்புதையலைத் தருகிறார். அதுவும்தீர்ந்து, திருமங்கைமன்னன் திருடனாகி வழிப்பறிக் கொள்ளைக்காரனாகிறான். பிராட்டியுடன் பெருமாளே சோதிக்கவருகிறார். மணமக்களாக வந்த பெருமாள் பிராட்டியார் இருவரது பாதஸ்பரிசத்தால், முழுஞானியாகி, **திருமங்கை ஆழ்வார்** ஆகிறார். இவர்தான் மிக அதிகமாக 40–க்கும் மேற்பட்ட திவ்ய தேசங்களைத் தரிசனம் செய்தவர். பெரிய திருமொழி, திருக்குறு,நெடுந்தாண்டகம், திருவெழுகூற்றிருக்கை, திருமடல்கள், இப்படியாக 1361 – பாசுரங்களைப்பாடி, பூமிவாழ்வின் பூர்த்தியாக திருக்குறுங் குடிப் பெருமாளின் ஆலய நிழலிலே ஒளியானார்.

குலந்தருஞ் செல்வம் தந்திடும் அடியார் படுதுயராயின வெல்லாம் நிலந்தரஞ் செய்யும் நீள்விசும் பருளும் அருளோடு பெரு நிலமளிக்கும் வலந்தரும் மற்றும் தந்திடும் பெற்ற தாயினும் ஆயினசெய்யும் நலந்தருஞ் சொல்லை நான்கண்டு கொண்டேன் "நாராயணா" எனும் நாமம்

– திருமங்கையாழ்வார்

Koviloor Digital Library

"வாரண மாயிரம்"

அல்லல்தீர,வல்வினைமாற, நல்லறச்செல்வம் நாளும் சேர, ஒவ்வொருவரும் சிரத்தாபக்தியுடன் பாராயணம் செய்யவேண்டியது, "வாரணமாயிர" ப்பாசுரங்கள். பூமியிலே தவழ்ந்து தேவாம்சம் பெற்ற கோதையின் "நாச்சியார் திருமொழி" யை நாளும் சொல்வோம், நலமுடன் வாழ்வோம்.

1. வாரண மாயிரம் சூழவலஞ் செய்து
நாரணநம்பி நடக்கின்றா னென்றெதிர்
பூரண பொற்குடம் வைத்துப் புறமெங்கும்
தோரணம் நாட்டக் கனாக்கண்டேன் தோழி! நான்"

2. "நாளை வதுவை மணமென்று நாளிட்டு
பாளைகமுகு பரிசுடைப் பந்தற்கீழ்
கோளரி மாதவன் கோவிந்தன் என்பான், ஓர்
காளைபுகுதக் கனாக்கண்டேன் தோழி! நான்"

3. "இந்திரன் உள்ளிட்ட தேவர் குழாமெல்லாம்
வந்திருந்து என்னை மகள்பேசி மந்திரித்து
மந்திரக் கோடி உடுத்தி மணமாலை
அந்தரிசூட்டக் கனாக்கண்டேன் தோழி! நான்"

4. நாற்றிசைத் தீர்த்தங் கொணர்ந்து நனிநல்கிப்
பார்ப்பனச் சிட்டர்கள் பல்லார் எடுத்தேத்திப்
பூப்புனை கண்ணிப் புனிதனோடு என்தன்னைக்
காப்பு நாண்கட்டக் கனாக்கண்டேன் தோழி! நான்."

5. "கதிரொளி தீபம் கலசமுடன் ஏந்திச்
சதிர் இளமங்கையர் தாம்வந் தெதிர்கொள்ள
மதுரையார் மன்னன் அடிநிலை தொட்டெங்கும்
அதிரப் புகுதக் கனாக்கண்டேன் தோழி! நான்".

KOVILOOR ANDAVAR LIBRARY
A. No. 12271

Koviloor Digital Library

6. “மத்தளம் கொட்ட வரிசங்கம் நின்று ஊத
முத்துடைத்தாமம் நிரைதாழ்ந்த பந்தல்கீழ்
மைத்துனன் நம்பி மதுசூதன் வந்து என்னைக்
கைத்தலம் பற்றக் கனாக்கண்டேன் தோழீ! நான்”

7. “வாய்நல்லார் நல்லமறைஓதி மந்திரத்தால்
பாசிலை நாணல் படுத்துப் பரிதி வைத்துக்
காய்சின மாகளிறு அன்னான் என்கைப்பற்றித்
தீவலம் செய்யக் கனாக்கண்டேன் தோழீ! நான்.”

8. “இம்மைக்கும் ஏழேழ் பிறவிக்கும் பற்றாவான்
நம்மையுடையவன் நாராயணன் நம்பி
செம்மையுடைய திருக்கையால் தாள்பற்றி
அம்மி மிதிக்கக் கனாக்கண்டேன் தோழீ! நான்”

9. “வரிசிலை வாண்முகத்து என் ஐமார்தாம் வந்திட்டு
எரிமுகம் பாரித்து என்னை முன்னே நிறுத்தி
அரிமுகன் அச்சுதன் கைம்மேல் என் கைவைத்துப்
பொரிமுகந்து அட்டக் கனாக் கண்டேன் தோழீ! நான்”

10. குங்குமம் அப்பிக் குளிர்சாந்தம் மட்டித்து
மங்கல வீதி வலஞ் செய்து மண நீர்
அங்கு அவனோடும் உடன்சென்றங்கு ஆனைமேல்
மஞ்சனம் ஆட்டக் கனாக் கண்டேன் தோழீ! நான்”

11. “ஆயனுக்காகத் தான்கண்ட
கனாவினை
வேயர்புகழ் வில்லிபுத்தூர்க்
கோன் கோதை சொல்
தூய தமிழ்மாலை ஈரைந்தும்
வல்லவர்
வாயும் நன்மக்களைப் பெற்று
மகிழ்வரே”. – ஆண்டாள் (கோதை)

Koviloor Digital Library

வாரணமாயிரம் – பொதுக்கருத்து

1. பூரண கும்பம், மங்கலஇசையுடன், ஆயிரயானைகள் ஊர்வலமாம்
புண்ணிய ஸ்ரீமந் நாரணன் வருகிற பூரணம் கண்டேன் தோழிநான்
2. நாளை எனக்குத் திருமண நன்நாள் ஊரெங்கும் பந்தல் தோரணங்கள்
நரசிம்ம மாதவ கோவிந்த ஸ்ரீஹரி வரும் பேரழகை நான் கண்டேன்
3. தேவர்கள் இந்திரர் எல்லாம் வந்தனர் திருமணத்திருநாள் ஏற்பாடு
நாத்தனார் துர்கை கோடிகொடுத்து நறுமண மாலைதரக்கண்டேன்
4. புனித தீர்த்தமுடன் வாழ்த்துகளோடு அந்தண உத்தமர் வந்தனரே
பூவிழிக்கண்ணனை என்னொடுவைத்து புனிதகங்கணம்தந்தனரே
5. மாதரின் பேரணி வரிசை தீபங்கள் பேரொளிவெள்ள அலைகளிலே
மதுரை மாமன்னன் மின்னி வருவது கண்கொள்ளாத காட்சியடி!
6 இனிய வலம்புரிச்சங்கமுடன் மேளம் எல்லா வாத்யம் முழங்கிடவே
என்னிதயவாசன் ஸ்ரீகிருஷ்ண தேவன் என்கரம்சேர்த்து நின்றானே
7. மந்திரத்தீயை நாங்கள் இருவரும் ஒன்றாய்ச்சேர்ந்து வலம்வந்தோம்
சுந்தர மாமத யானைபோலவன் ஜொலித்தான் கேளடி என்தோழி.
8. எத்தனைபிறவிகள் நானெடுத்தாலும் என்றும் துணையே அவன்தானே.
அம்மி மிதித்து அருந்ததிபார்த்தான் ஆனந்தமய ஸ்ரீ ஹரியே
9. கூடப்பிறந்தவர் தாரைவார்த்தெனைக்
கொடுத்தார் அவருக்கே
கோலாகலமாய் எங்கள் திருமணம்
நடப்பதை நான் கண்டேன்
10. சந்தனம் குங்குமம் ஒளி வீசிடவே
ஊர்வலமாய் வந்தோம்
சாதி சனமெல்லாம் தோழியர் சூழ
திருமஞ்சனம் கண்டேன்.
11. பெரியாழ்வார் கண்டெடுத்த துளசிமகள்
கோதைசொன்ன
பாசுரங்கள் ஈரைந்தும் பலன் கோடி
கோடி தரும்.

ஸ்ரீ ஆண்டாள் திருவடிகள் சரணம்

Koviloor Digital Library

"தெய்வத் தமிழ்" சொன்ன ஸ்ரீ ராமாநுஜர்

"நாச்சியார்திருமொழி, திருப்பாவை" முதலான ஆண்டாளின் பாசுரங்களை "**தெய்வத் தமிழ்**" எனப் பிரகடன் செய்து "திருப்பாவை ஜீயர்" ஆக விளங்கிய ஸ்ரீ ராமாநுஜர், கி.பி. 1017 – ஸ்ரீ பெரும்பூதூர் – **கேசவசோமையாஜீ** – **காந்திமதி** மகனாக அவதரித்தவர் – சைவ சமய குருவான யாதவப் பிரகாசரிடம் வேதபாடம் கேட்டவர். குருவைமிஞ்சிய பேரறிவால் பல துயர்களைக் கண்டு, பெருமாளின் திருவருளால் வென்றவர். **தஞ்சம்மா** எனும் நங்கையை மணந்தவர், இல்லற ஒவ்வாமையால் துறவறம் கண்டவர்.

திருக்கோஷ்டியூர் நம்பியிடமிருந்து அரிதாகக் கிடைத்த திருஹரிமந்திரத்தை மக்கள் அனைவர்க்குமாக்கி, தனிமனித மோட்சத்தை வெறுத்தவர். அனைத்தும் திருமாலே, நாம் அனைவரும் அவனது அடியார்களே. சேவைசெய்வதேவாழ்வின் லட்சியம், பிறப்பால் வேற்றுமைகாண்பது பெரும் பாவம். இப்படியாக '**விசிஷ்டாத் வைதம்**' வளர்த்தார். அந்தணரல்லாத திருக்கச்சி நம்பியை ஆசார்யராகவும், மாறநேரியைச் சீடராகவும் கொண்டு,தீண்டாமைக்கு அன்றே தீயிட்டவர் ஸ்ரீ ராமாநுஜர். திருவரங்க ஞானமுனிவர், ஸ்ரீ ஆளவந்தாரின் மானஸிக அழைப்பால் ஸ்ரீரங்கம் கண்டது. அங்கே ஆசாரியர் ஆனது.

ஒரு சோழ மன்னரின் அறியாமையினால், முதுமையிலே கர்நாடக தேசம் – மைசூர் சீமை – கண்டு, டெல்லியிலே "செல்லப்பிள்ளை" (கண்ணன் விக்ரஹம்) யைமீட்டு, மேல்கோட்டையில் திருநாராயணப் பெருமாளுக்கு ஆலயம்செய்து, சேரிமக்களை "திருக்குலத்தார்" ஆக்கி, மக்களுக்காக தொண்டனூர் ஏரியை உருவாக்கியவர். மக்களின் அழைப்பால் மீண்டும் தமிழகம் கண்டு திருப்பதித் திருமலையை முழுகோயிலாக்கி, ஸ்ரீரங்கத்திலே எழுபத்திநாலு பிரதம சீடர்களோடு, மாமுனிவர் ஞானச்சக்ரவர்த்தியாக வாழ்ந்திருந்து 1137–ல் பரமபதம் கண்டார். ஸ்ரீராமாநுஜர். அவரது தானான திருமேனி ஸ்ரீரங்கத்தில் காணலாம்.

ஸ்ரீபாஷ்யம், வேதாந்ததீபம், வேதாந்தசாரம், வேதாந்தசங்க்ரஹம், கீதா பாஷ்யம், சரணாகதிகத்யம், ஸ்ரீரங்ககத்யம், வைகுண்டகத்யம், நித்யம் முதலான அற்புத இலக்கியங்களை ஆன்மிக உலகுக்குத் தந்தவர் ஸ்ரீராமானுஜர்.

"காரோய் கருணை இராமாநுசா! இக்கட லிடத்தில்
ஆரே அறிபவர் நின் அருளின் தன்மை? – அமுதனார்."

நலந்தரும் நாராயணன்

வைணவத்தின் அனைத்துமாக விளங்கும் ஸ்ரீமந் நாராயணன் ஐந்து நிலைகளிலே விளங்கி நமக்குப் பேரருள் புரிகிறார்.

1. **பரம்**

வைகுந்த லோக பரமபதப் பேரானந்தச் சூழலிலே. தேவியர் மூவர் அருகிருக்க. பகவானை என்றும் பிரியாத கருடன், சிரஞ்சீவித்வம் பெற்ற, விஷ்வக்ஷேனர், சேனை முதலிகள் போன்ற நித்யசூரிகளின் தேவாமிர்த தியான கானத்திலே திளைக்கும் பரவாசுதேவனின் திவ்யானந்தநிலை.

2. **வியூகம்.**

"க்ஷீராப்தி" எனப்படும் பாற்கடலிலே, ஸ்ரீபரந்தாமன் **"சென்றால் குடையாம் இருந்தால்சிங் காதனமாம் நின்றால் மரவடியாம் நீள் கடலுள் – என்றும் புணையாம் மணிவிளக்காம் பூம்பட்டாம் புல்கும் அணையாம் திருமாற்கு அரவு.."** எனும் பாசுரத்திற்கேற்ப

ஆதிஷேசமஞ்சத்திலே. ஸ்ரீதேவி பூதேவியர் இருவரும் ஸ்ரீஹரியின் திருவடிகளை இதமாக வருடிவிட, ஸ்ரீமந் நாராயணனின் அறி துயில்–தூங்காமல் தூங்கும்– கொள்ளுகின்ற ஆனந்தநிலையாம். (தேவர்கள் வந்து தமது குறைகளைக்கூறி நிவர்த்திபெறும் திருச்சபையும் இதுவேயாகும்)

3. **விபவம்**

"விபவம்"எனும் சொல்லுக்கு "இறங்கிவருதல்" எனப்பொருள். சத்தியம், சிதைக்கப்பட்டு உத்தமர்கள் பூமியிலே தடுமாறும் போதெல்லாம் வந்தருள் புரிவான் ஸ்ரீவைகுந்தவாசன். ஸ்ரீராமனாக, ஸ்ரீகிருஷ்ணனாக வந்தது "விபவம்" ஆகும்.

Koviloor Digital Library

4. அந்தர்யாமித்வம்

அனைத்து உயிர்களது உள்ளிருக்கும் உணர்வாக –எள்ளிலே எண்ணெயாக, பாலிலே நெய்போல அனைத்துலக சேதன அசேதனங்களிலே இரண்டறக் கலந்திருக்கின்ற பரந்தாமனின் அருவ நிலையானது, ஞானியர்க்கு மட்டுமே புலப்படும் தெய்விகத் திரு உருவ நிலையாகும்.

5. அருச்சை

பாற்கடல், வைகுந்தங்கள் ஸ்ரீதிருமாலுக்கான பட்டப்படிப் பென்றால், "அர்ச்சை" என்பது "அ". னா, "ஆ"வன்னா.. பால பாடமாகும். அருஉருவ இறைவன்.. கல்லிலும், செம்பிலும் தனது திருவுருவைப் பரமகருணையோடு, பாமரருக்குக் காட்டிப் பேரருள் புரிவதே "அர்ச்சை" ஆகும்.

அருச்சை விக்ரஹ வடிவங்களைக் கொண்ட ஆலயங்கள் பாரதத்திலே ஏராளம். அவற்றுள் '**மங்களாசாசனம்**' பெற்ற நூற்றெட்டு திவ்வியதேசங்களை, திவ்யப் பிரபந்தப் பாசுரங்களால் நமக்கு அளித்தவர்கள், ஆழ்வார் பெருமக்கள். பன்னிரண்டு ஆழ்வார் பெருமக்களுமே ஸ்ரீமந்நாராயணனின் பல வேறு அம்சங்களாகவே மண்ணுலகில் அவதரித்தவர்கள் என்பதே மேலான வைணவக் கோட்பாடு. ஸ்ரீமந்நாராயணனே பூமியில் தமக்குகந்த 108. திவ்விய தேசங்களைத் தேர்வு செய்துகொண்டான் என்பதில் தவறில்லை. நாலாயிர திவ்யப்பிரபந்தப் பாசுரம் பெற்ற நூற்றெட்டு ஆலயங்களின் பட்டியல் காட்டும் பாடல்.

"ஈரிருபதாம் சோழம், ஈரொன்பதாம் பாண்டி
ஓர்பதின் மூன்றாம் மலைநாடு, ஓரிரண்டாம்
ஆரோ டிரெட்டு தொண்டை, அவ்வட சீர் நடுநாடு
நாடிரண்டு, கூறும் திருநாடு ஒன்றாக் கொள்."

Koviloor Digital Library

நூற்றியெட்டு
திவ்விய தேசங்கள்

(சோழநாட்டுத் திருத்தலங்கள் 1– 40)

1. திருவரங்கம் ஸ்ரீ ரங்கநாதர் – ரெங்கநாச்சியார்

ஸ்ரீரங்கம், பூமியிலே ஆதி முதல் திவ்ய தேசம் பிரம்மன் பூஜித்து, அயோத்திவந்த இந்த மூலவர், காவிரித் தீவில் கோயில் கொண்ட வரலாற்றுக் கதையின் நாயகன், விபீஷணனாம் பதினோறு – ஆழ்வார்களின் 247 பாசுரங்கள் பெற்ற அரையர் சேவை புகழ்'' பூலோக வைகுந்தம்'' எனும் ஸ்ரீ ரங்கம் திருச்சியிலிருந்து ஒரே மைல்

2. உறையூர் அழகிய மணவாளன் – கமலவல்லி

அந்தநாள் சோழர்தலைநகர் இந்த ''கோழி'' எனும் உறையூர் நந்தசோழனின்மகளாக அவதரித்து இங்குவந்தாள்மகாலக்ஷ்மி பங்குனி உத்திரம், பெருமாள் தாயார் திருக்கல்யாண மகோத்ஸவம் உறையூர் எனும் திவ்யதேசம், திருச்சியிலிருந்து மூன்று கி.மீ.

3. தஞ்சை தஞ்சைமாமணி – செங்கமலவல்லி

''ஆழிநகர்; மணிக்குன்ற, தஞ்சை மணி'' மூன்று மூலவர் கோயில் யாளிநகர் நரசிம்மர் – தஞ்சை நாயகி. மணிக்குன்ற பெருமாள் – அம்புஜம் தஞ்சகன், தண்டகன், கஜமுகர்களை வென்று நீதிகாத்த திருமால் தலம் நகருள் இருந்த மூன்று தலமும், நாயக்கமன்னரால் 4 கி.மீ. தொலைவில் இப்போது,

4. அன்பில் அழகிய நம்பி - வல்லி நாச்சியார்,

பிரம்மா, துர்வாசர், மண்டுகரிஷிகளுக்கு பெருமாள் பிரத்யக்ஷம் வால்மிகி மகரிஷி இங்கு பிறந்ததாக கல்வெட்டுகள் உண்டாம் போரிலே வெற்றி பெற்ற சுந்தரச் சோழன் கோயிலுக்கு நிலதானம் திருச்சியை அடுத்த லால்குடியிலிருந்து 8 – வது கி.மீ. இந்த அன்பில்.

5. கரம்பனூர் புருஷோத்தமன் – பூர்ணவல்லி

சர்வதெய்வ வழிபாடு உள்ள வைணவ ''கதம்ப'' க்ஷேத்திரம் சிவனது பிரம்ம (கபால) ஹத்தி தோஷம், இத்தலத்திலே தீர்ந்தது பிரம்மதேவனுக்குச் தனிச்சன்னிதியுள்ள மஹாவிஷ்ணு ஆலயம் ஸ்ரீரங்க வடக்கே 4 கி.மீ. உள்ளது கரம்பனூர், எனுமிந்த உத்தமர்கோயில்.

Koviloor Digital Library

6. வெள்ளறை புண்டரிகாக்ஷன் – பங்கயச் செல்வி

நூறடி உயரவெள்ளை நிறத்துப்பாறைமேல் உள்ள பேராலயம்
மூலவரை தரிசிக்க ஆறாறு மாதங்களுக்கு ஒரோர் வாசல்கள்
3500 – வைணவர்களை குடிவைத்து கோயிலை கட்டியது சிபிச்சக்கரவர்த்தி
கரம்பனூரிலிருந்து 12 கி.மீ.தொலைவிலே இந்தத் திருவெள்ளறை.

7. புள்ளம்பூதங்குடி வல்விலிராமன்– பொற்றாமரையாள்

பஞ்சபூதத்துள் ஒன்றான பூமியும் நானே என விளக்கிய மூலவர்
சூர்யபுத்திரன் ஜடாயுவுக்கு நீர்க்கடன்செய்த ஸ்ரீராமர்க்ஷேத்ரம்
சங்கு சக்கர ராமனாக திருமங்கை யாழ்வாருக்கு இங்கே தரிசனம்
கும்பகோணத்தை அடுத்த சுவாமி மலையிலிருந்து 5.கி.மீ. தொலைவில்.

8. திருப்பேர்நகர் கோயிலடி அப்பக்குடத்தான் – கமலவல்லி

உபமன்யுவிற்கு பாற்கடலை சிவனும், அப்பத்தை இவனும் கொடுத்தனர்
பூலோகவாழ்வை நம்மாழ்வார் பூர்த்திசெய்து கொண்ட திருத்தலம்
மேற்குத் திருமுகமண்டலம், கிடந்தகோலப்பெருமாள் தரிசனம்
திருச்சியருகே உள்ள கல்லணையிலிருந்து 6 கி.மீ. திருப்பேர் நகர்.

9. ஆதனூர் ஆண்டளக்கும்ஐயன் – ஸ்ரீரங்கநாயகி

காமதேனுவாகிய "ஆ" – பசு – ஐயன் அருள் பெற்றதால் ஆதனூர்
ஏடு எழுத்தாணியோடு மாநுடத்தை ஆண்டு அளப்பவன் இவன்
சூர்ய புஷ்கரணி, புஜங்கசயனம், கிழக்குபார்க்கும் திருமுகம்
கும்பகோணத்திலிருந்து 8 கி.மீ. தொலைவிலுள்ளது ஆதனூர்.

10. திருவழுந்தூர் ஆமருவியப்பன் – கமலவல்லி

"தேவராஜன்" எனப்போற்றப்படும் இவர்
கருடனுக்கும் அகத்தியர்க்கும் பிரத்யக்ஷம்
கம்பன் பிறந்தவூர், காவிரி தங்குமூர்,
கும்பமுனிசாபம் குலைந்தஊர். இந்தஊர்.
பதினோறு – சன்னிதி உள்ள இத் தலத்தை
ஆழ்வார்களுடன் மணவாள மாமுனிகளும்
மங்களா சாசனம் செய்துள்ளார்
மாயூர(மயிலாடுதுறை)த்திலிருந்து 10. கி.மீ.
திருவழுந்தூர் எனும் இந்தத்"தேரழுந்தூர்"

Koviloor Digital Library

11. சிறுபுலியூர் அருள்மாகடல் – தயா நாயகி

சிவயோகியான வியாக்ரபாதர், பெருமாளை நேரில் தரிசித்த கோயிலிது. "நீயா நானா" என ஆதிசேஷ கருடர்கள் மோதித்திருந்திய ஊர். நாகதோஷ நிவர்த்தியும், புத்திர சந்தான மும் இத்தலவிசேஷமாகும். மாயூரம் காரைக்குடி ரயில் தடம், மங்கைநல்லூர் TO 5 கி.மீ. புலியூர்.

12. திருச்சேறை ஸாரநாதன் – ஸாரநாயகி

காவிரிநதியின் மாதவத்தால் சாரநாதனே குழந்தையான க்ஷேத்ரம் "கங்கையில் புனிதமாய காவிரி" எனப்படுவது இதனால் தான் திவ்ய தேசங்களிலேயே, இங்குதான் ஐந்து தேவியருடன் மூலவர், கும்பகோணம் திருவாரூர் சாலை 12 – வது கி.மீ. திருச்சேறை.

13. தலைச்சங்காடு நாண்மதியப்பெருமாள் – சங்கநாச்சியார்

தேய்ந்து மறைந்த சந்திரனுக்கு, பெருமாள் திருவருள் வழங்கிய தலம் "ஆதிப்பிரான் நிலாஜோதிப்பிரான்" எனப்படும் திவ்விய தேசம் பூம்புகார்ச் சங்குகளின் இனிய புனித ஒலி அதிரும் பகுதியிது. சீர்காழியிலிருந்து தரங்கம்பாடி சாலை 16–வது கி.மீ. தொலைவில்.

14. குடந்தை சார்ங்கபாணி – கோமளவல்லி

பாற்கடல் அமிர்த பங்கீட்டு "மோஹினி"அவதார தொடர்புத்தலம் "ஆரா அமுதன்" என ஆழ்வார் கொண்டாடும் பேராளன் இவன் ஹேமரிஷியின் திருமகளாக ஸ்ரீ மஹாலட்சுமி அவதரித்த க்ஷேத்ரம் 'குடந்தை' எனப்படும் கும்பகோணமாநகர்நடுவிலேயே இக்கோயில்.

15. கண்டியூர் அரன் சாபம் தீர்த்தான் – கமலவல்லி

தாணு, மால், அயன் மூவர் சன்னிதிகளால் இது "திருமூர்த்தி" தலம் சக்கரத்தாழ்வார், வேதாந்த தேசிகர்க்கும் இங்கே சன்னிதிகளுண்டு. கிழக்கு நோக்கி நின்றதிருக்கோல வரப்பிரசாதப் பெருமாள். தஞ்சாவூரிலிருந்து ஆறு கி.மீ. தொலைவிலே திருக்கண்டியூர்

Koviloor Digital Library

16. விண்ணகர் ஒப்பிலியப்பன் – பூமாதேவி

பிள்ளைவரம் வேண்டுவோர்க்கு பெருமாளின் திருத்துளசித்தீர்த்தம் மார்கண்டேய மகரிஷிக்கு பெருமாள், மருமகனான க்ஷேத்ரம் சிரவணதீபப் பெருமாளின் அருள்வாக்கு இங்கே தொன்மையானது குடந்தையிலிருந்து 5–வது கி.மீ. இந்த "உப்பிலியப்பன் கோயில்".

17. கண்ணபுரம் சௌரிராஜன் – கண்ணபுர நாயகி

ராஜதண்டனையிலிருந்து பட்டரைக் காக்க, குடுமி கொண்ட ராஜன் மீனவர்குல பத்மாவதி எனும் நங்கைக்குப் பேரருள்தந்த பெருமாள் தமிழகத்திலுள்ள ஐந்து கண்ணபுரங்களிலே பிரதானமானது இது. நன்னிலம் TO நாகை வழி, திருப்புகலூரிலிருந்து 2 கி.மீ. தொலைவில்,

18. திருவாலி திருநகரி அழகிய சிங்கர் – பூர்ணவல்லி

ஆலி – நகரிகளின் இடைவெளி 4 கி.மீ. ஒரே மங்களா சாசனம் நாலுகவிப்பெருமாள் "ஆன திருமங்கை மன்னன் ஆண்ட பகுதி திருநகரியின் மணவாளன் சன்னிதி, பெருவாழ்வு தருவதாகும்: சீர்காழியிலிருந்து 9 கி.மீ. தொலைவில் திரு ஆலி – திருநகரி.

19. நாகப்பட்டினம் நீலமேகன் – சௌந்தரவல்லி

நாகம் தவமிருந்து "ஆதிசேஷன்" ஆனதால், நாகப்பட்டினம் காலத்தால் அழியாத ஆழியோரத்து வைணவ புராதனத் திருத்தலம் நின்ற அமர்ந்த கிடந்த மூவகையிலும் காட்சி தருகிறார் ஸ்ரீ ஹரி, இதிகாச காலம் முதல் கடற்கரைப்பட்டினம், இன்றும் மா –நகரம்.

20. நாச்சியார் கோவில் நறையூர்நம்பி – வஞ்சுளவல்லி

மதுரையிலே மீனாட்சிபோல, இங்கே வஞ்சுளவல்லியே "முதல்வர்". கருங்கல் கருடன் வியர்ப்பதும், கனம் கூடிக் குறைவதும் இன்றும்.! ஐந்து அதிதிகளாக வந்து வஞ்சுளவல்லியை ஆட்கொண்ட பெருமாள். கும்பகோணத்திருந்து 9 – கி.மீ. தொலைவிலே இந்தத் திரு "நறையூர்".

Koviloor Digital Library

21. நந்திபுரவிண்ணகர்

ஜெகந்நாதன்–செண்பகவல்லி

பெரியபிராட்டியை இதயத்திலே ஏற்றருளிய 'நாதன்கோயில்' இது. நந்திதேவருக்கும் சிபிச்சக்ரவர்த்திக்கும் பிரத்யக்ஷப்பெருமாள். ஐப்பசி வெள்ளியிலே இங்கு தாயார் தரிசனம் மஹாபாக்யமாகும். கும்பகோணத்திலிருந்து 4 – கி.மீ. நந்திபுர விண்ணகர நாதன் கோயில்

22. இந்தளூர் — பரிமளரங்கன் – புண்டரிகவல்லி

கங்கைகொண்ட சிவனைப் போல, காவிரி கொண்டரங்கன் இங்கே திருமங்கையாழ்வாரின் "நிந்தாஸ்துதி" யால் பரவசத் திருமால் சந்திரனுக்கு சாபவிமோசனம் அருளிய ஸ்ரீஹரியின் திவ்வியதேசம் மயிலாடுதுறை ரயிலடியிலிருந்து 5 கி.மீ. தொலைவிலே திரு இந்தளூர்

23. திருச்சித்ரகூடம் — கோவிந்தராஜன் – புண்டரிகவல்லி

ஆதியில் இருந்து, அநீதியால் கடல்கண்டு, நீதியால் மீண்ட மூலவர் நடராஜதாண்டவத்தை கோவிந்தராஜர் கண்டு மகிழ்ந்த திருத்தலம் அன்பே சிவம் அதுவே ஹரி, சைவ வைணவ சமரசத்திருத்தலம். கோவிந்தராஜாவை ஸ்ரீ ராமனாகவே கண்டவர் குலசேகரஆழ்வார்

24. சீர்காழி — திரிவிக்ரமன் – லோகநாயகி

ஓங்கிஉலகளந்த பெருமாளின் "காழிச் சீராம விண்ணகரம்" இது ரிஷியின் கேசத்துடன் பிரம்மாக்களின் ஆயுளை இணைத்த தேசம் திருமங்கையாழ்வாரும் ஞானசம்பந்தரும் ஒருங்கே இணைந்த தலம் சங்குசக்கரதீர்த்த, புஷ்கலாவிமான "தாடாளன்" கோயிலிது.

25. கூடலூர் — ஜகத்ரக்ஷகன் – பத்மாஸனி

மகரிஷிகளோடு தேவர்களும் கூடி தரிசித்ததால் இது கூடலூர் 'வையம் காத்தவர்" பெயருக்கேற்ப, செங்கோல் பிடித்த மூலவர் வெள்ளத்தால் சிதைந்த இத் தலம், ராணி மங்கம்மாவால் மீண்டது "ஆடுதுறை" எனவழங்கும் இவ்வூர், தஞ்சையிலிருந்து 8 கி.மீ.

Koviloor Digital Library

26. கண்ணங்குடி லோகநாதன் – லோகநாயகி

வெண்ணெயால் கண்ணனைச்செய்து வஸிஷ்டர் பூசித்ததலம் "கிருஷ்ணாரண்ய" ரிஷிகளின் அன்பிலே கட்டுண்ட கண்ணன் பெருமாள் "நீறணிவிழா" இக்கோயிலின் – அருமைகளில் ஒன்று திருவாரூருக்கு கிழக்கே 13 கி.மீ. தொலைவில் திருக்கண்ணங்குடி.

27. **கண்ணமங்கை பக்தவச்ஸலன் – அபிஷேகவல்லி**

பாற்கடல் நாதனை மகாலட்சுமி, தவமிருந்து அடைந்த திருத்தலம் ஆலயம் சூடியமாலைபோல, காவிரி கோயிலை வலம் வரும் தலம் இறுதியிலே பரமபதம் வேண்டுவோர் ஓர் நாள் இங்கே தங்கலாம். அழியாத தேன்கூடு உள்ள கண்ணமங்கை, திருவாரூர் To 13 கி.மீ.

28. **கபிஸ்தலம் கஜேந்திரவரதர் – ரமாமணிவல்லி**

"கபி' யான குரங்கின அநுமன் அருள்பெற்றதால், இது "கபித்தலம்" கஜேந்திரயானைக்கு பெருமாள் சாயுஜ்யம் தந்த திவ்யதேசம் இது கபில, கஜேந்திர புஷ்கரணிகள், புஜங்கசயனப் பெருமாள் கோலம் கும்பகோணத்திலிருந்து 15 கி.மீ. தொலைவிலே இத்திருத்தலம்.

29. **வெள்ளியங்குடி கோலவில்லிராமன் – மரகதவல்லி**

பிருகுவின் மகன் பார்கவன், ஸ்ரீ ஹரியால் சுக்ராச்சாரி ஆனதலம் வேதாகமப்பெருமாள்இவர், விஸ்வகர்மாவுக்கு பிரத்யக்ஷமானவர் மண்டோதரியின் தந்தை மயன்தான் தேவசிற்பி விஸ்வகர்மா. திருவிடைமருதூரிலிருந்து 9– கி.மீ. தொலைவில் "பார்கவபுரி"

30. **மணிமாடக்கோயில்**

நாராயணன் – புண்டரிகவல்லி

ஸ்ரீமந் நாரயணின் 11 அம்ச மூர்த்திகளையும் சிவபெருமான் கண்டதலம். இந்த "மாடக்கோயில்" அருகே 11 திவ்யதேசங்கள், அதிலே முதலாவது இது. தை அமாவாசை களில் இங்கே 11 கருடசேவைகள் ஏககாலத் திலே நடைபெறும் அற்புதம். சீர்காழிக்கு கிழக்கே 8 கி.மீ. திருநாங்கூர் திவ்வியதேசம்.

Koviloor Digital Library

31. வைகுந்தவிண்ணகர்

வைகுந்தநாதன் – வைகுந்தவல்லி

தேவியருடனாய பெருமாளின் பரமபத சேவையை இங்குபெறலாம். சர்வமத ஒருமைப்பாடுகாட்டும் அனந்த சத்ய வர்த்தக விமானம். "தாமரைக்கண்ணன்" எனும் பெயரும் இந்த வைகுந்த நாதனுக்கே. சிவருத்ரம் பதினொன்றும் ஒன்றாகி, அன்பே சிவமாக நின்றதலம்.

32. அரிமேயவிண்ணகர் குடமாடுகூத்தர் – அம்ருதகடவல்லி

சுதைவடிவ மூலவரின் திருவுருவம் பேரழகின் பிரதி பிம்பமாகும் உதங்கரிஷிக்கும் அவர் மனைவிக்கும் பேரருள் தந்த கூத்தரிவர் கோவர்ந்தன கிரியை குடையாய் பிடித்தவனே இந்த குடமாடு கூத்தன் கோடி, அமிர்ததீர்த்தங்கள், உச்சருங்க விமானம், அமர்ந்தகோலம்

33. தேவனார் தொகை மாதவபெருமாள் – கடல்மகள்

பெருமாளும் தயாரும் மணமக்களாகக் காட்சிதரும் மங்கலத்தலம் தேவர்கள் கூடித் திருமணம் கண்டதால் இது 'தேவனார் தொகை' தசரத குரு வசிட்டருக்கு மீண்டும் மணக்கோலம் அருளிய மாதவன் தேவசபாபுஷ்கரணி தீர்த்த, சோபனவிமான நின்ற கோல நாயகன்.

34. வண்புருடோத்தமம் புருஷோத்தமன் – உத்தமநாயகி

தில்லை தீட்சிதர் "மூவாயிரம்", திருநாங்கூர் வைணவர்' நாலாயிரம் காக்கும் பணியைக் கடனாகக் கொண்டதால் இவன் புருஷோத்தமன் அயோத்திராமனே இத்தலத்து மூலவர் என்பது வைணவ ஐதிகம் சஞ்சீவி விமான பாற்கடல் தீர்த்தம், கிழக்குமுக நின்ற திருக்கோலம்.

35. செம்பொன்செய் கோயில் பொன்ரங்கர் – பூங்கமலவல்லி

ராவணனை ஆட்கொண்டு திரும்புவழி, ஸ்ரீ ராமர் இங்கு தங்கினார் நேத்ரரிஷி சொன்னபடி "பிரம்மஹத்தி" நீங்க ராமரின் கோ "தானம்" ஸ்ரீ ராமர் தந்த காணிக்கைப்பசும் பொன்னால் உருவானகோயிலிது கனகவிமான, கனகதீர்த்த பொன் அரங்கர் நின்ற திருக்கோலம்

Koviloor Digital Library

36. தெற்றியம்பலம் செங்கண்மால் – செங்கமலவல்லி
'பள்ளி கொண்டபெருமாள் சன்னிதி" என்பது பாமரர் வழக்கம் அரசியல்வாதிகளின் நேர்வழிப் பிராத்தனை. உடனே கைகூடும் ஆலயத்துமூலவரான எம்பெருமான், பாம்பணைப்பள்ளியான் வேதவிமான, சூர்ய புஷ்கரணி கீர்த்தித்திருமால் இவர்.

37. மணிக்கூடம் மணிக்கூட நாயகன் – திருமாமகள்
சந்திரனுக்கும் கருடனுக்கும் நாயகனின் சரஸ்வதத் திருவருள் நம்மாழ்வார் வரலாற்றுப் புளிமரத்தோப்பிலே இத்திருக்கோயில் காஞ்சி வரதரைப்போல வரங்களைத் தருவதிலே வள்ளல் இவர் கனகவிமான, சந்திரபுஷ்கரணி. நின்ற திருக்கோலப் பெருமாள்.

38. காவளம்பாடி கோபாலகிருஷ்ணன் – மடவரல்மங்கை
நித்யசூரியருள் பிரதான, சேனை முதல்வரின் வரலாற்றுத்தலம் பாமாருக்மிணிக்காக, கண்ணனின் பாரிஜாத மலர் திருவிளையாடல். இந்திரன் தோட்டம் (காவளம்) போன்ற பூம்பொழில் சூழ் மூலவர். சுயம்பு விமானத்தின்கீழ், பாமாருக்மிணியுடன் கோபால கிருஷ்ணன்.

39. வெள்ளக்குளம் ஸ்ரீநிவாசன் – அலர்மேல் மங்கை
வில்வமும் துளசியும் ஒருங்கே மணக்கும் ஹரிஹர அம்ச ஆலயம் மார்க்கண்டேயனைப்போல் ஸ்வேதனுக்கு சிரஞ்சீவி தந்த மூர்த்தி திருவேங்கடப் பிரார்த்தனையை இங்கே செலுத்துவதும் உண்டு. "அண்ணன் பெருமாள்" என்று கண்ணனும் ராமனுமாய் திருமால்.

40. பார்த்தன்பள்ளி பார்த்தசாரதி – தாமரைநாயகி
கண்ணன் பெருமையால் அர்ஜுனன் கங்கையை கொணர்ந்த தலம். வருணனின் பிரம்மஹத்தி நீங்க விஜயனோடு தோன்றிய மகாவிஷ்ணு. "சங்கர சரஸ்" எனும் கங்காதீர்த்த ஸ்ரீ ஹரியின் பேராலயம் இது. திருநாங்கூர்ஆலயவரிசை, (30–40) இந்தப் "பார்த்தன்பள்ளியுடன்" பூர்த்தியாகிறது. ஷெ 11 திவ்விய தேசங்களும் அருகருகே.



Koviloor Digital Library



பாண்டியநாட்டு திவ்விய தேசம் (41 - 58)

41. திருமாலிருஞ்சோலை அழகர் (மாலலங்காரர்)–சுந்தரவல்லி.

ஐந்து ஆழ்வார்களின் 108 பாசுரங்களைப் பெற்ற திவ்விய தேசமிது. ஆண்டாளுக்கும், மலையத்துவஜ பாண்டியனுக்கும் ஸ்ரீகள்ளழகர் பிரத்யக்ஷம். ஆயிர அடி உயர, பத்து மைல் நீளமுள்ள பழமுதிர்சோலைமலையின் தீர்த்தம் நூபுரகங்கை. மதுரையிலிருந்து 19– வது கிமீ "அழகர் கோயில்" எனப்படும் திருமாலிருஞ்சோலை.

42. திருக்கோஷ்டியூர் சௌம்யநாராயணன் – திருமாமகள்

நரசிம்ம அவதாரத்தை ரிஷிகள் கூடி வேண்டியதால், திருக்கோஷ்டியூர் அஷ்டாக்ஷரமந்திரத்தைப் பொதுவாக்கிய ராமாநுஜரால் புகழ்பெற்றது. மூன்று திருக் கோலமும், ஆடும் கண்ணனுமாக நான்மாடக்கோயில் காரைக்குடியிலிருந்து 28 கி.மீ. அஷ்டாங்கவிமானம் சீர்காழி 6 கி.மீ.

43. திருமெய்யம் சத்யகிரிநாதன் - உய்யவந்தாள்

மதுகைடபர்களை ஆட்கொண்ட சேஷ சயனப்பெருமாள், ஆதிசேஷன் காவலினால் இங்கு தரிசித்தோருக்கு விஷபயம் இல்லை. கல் ரதங்களாக வரலாறுபடைத்த பல்லவர் திருப்பணிக் கோயிலிது பரமாத்மத் தத்துவத் திருமெய்யம், புதுக்கோட்டையிலிருந்து 20 கி.மீ.

44. திருப்புல்லாணி ஜகந்நாதன் – கல்யாணவல்லி

ராவணனை எதிர்க்குமுன் ஸ்ரீராமன் தர்பைமேல் தவம் செய்ததலம் புல்லணையிருந்து ஸ்ரீ ராமனே பூஜித்த மகத்துவ மிக்க ஆதிமூலவர் கல்யாணவிமானம், சக்கரதீர்த்தம், தலவிருக்ஷம் அரச மரம். இராமநாத புரத்திலிருந்து 9–வது கி.மீ தொலைவில் திருப்புல்லாணி.

Koviloor Digital Library

45. **திருத்தங்கல் தண்காலப்பன் – அமிர்தநாயகி**
ஸ்ரீதேவி பூதேவி நீளாதேவியருள் யார் பெரியவர்? பதில்தரும் தலம்
இளையாழ்வார்மகன் பிழைசெய்து, திருப்புளியாகி நலம் பெற்ற தலம்
ஆலமரத்துக்கும் அருள் செய்த நீலமேக சியாமள வண்ணன்
சிவகாசி ரயிலடியிலிருந்து 3 கி.மீ. தொலைவிலே திருத்தண்கால்.

46. **திருமோகூர் காளமேகன் – மேகவல்லி**
பாற்கடல் அமிர்தம், திருமால் மோஹினி தொடர்புத் திருத்தலம்
கருமேகமாய் தேடிவருவோர்க்கு அருள் பொழியும் பெருமாள்
சிவகெங்கைச்சீமை மருதுசகோதரர்களின் திருப்பணி கண்ட கோயில்
மதுரை – மேலூர் சாலையிலே 11 – வது கி.மீ. திருமோகூர்.

47. **கூடல் மாமதுரை கூடலழகர் – மதுரவல்லி**
பெரியாழ்வாரின் தமிழுக்குப் பொற்கிழி வழங்கிய புராதனப் பெருமாள்
அஷ்டாங்கவிமான மாடிக்கோயில் மூவகைக்கோல மூர்த்திகள்
பெருமாள் ஆலயவளாகத்திலே ஆபூர்வமான நவகிரஹ சன்னிதி
பலயுகம் கண்ட முத்தமிழ்ச் சங்க பாண்டிய மண்டல ஆலயம் இது.

48. **ஸ்ரீவில்லி புத்தூர்** வடபத்ரசாயி – **கோதை நாச்சியார்**
ஆதிவராகராக பெருமாள் இரண்யாட்சனை ஆட்கொண்ட க்ஷேத்ரம்
சிரத்தாபக்தியால் மாநுடமும் தேவாம்சம் பெற்ற மகத்துவத்தலம்
பெரியாழ்வார், ஆண்டாள், பாரதம்பாடிய வில்லிபுத்தூரர் பிறந்த ஊர்
விருதுநகர் தென்காசி ரயில் தடத்திலே இந்தத் "திருவில்லிபுத்தூர்"

49. **குறுகூர் :** (ஆழ்வார்திருநகரி) **ஆதிநாதன் – ஆதிநாதவல்லி**
ராமபிரானின் சாபத்தால் தம்பி லட்சுமணன்
புளியமர மானதலம். இந்தப் புனிதப் "புளி"
யின் மடியில்தான் 16 ஆண்டு நம்மாழ்வார்
யோகம் புரிந்தது. கோவிந்த விமான நின்ற
திருக்கோல ஸ்ரீ ஆதிநாதப்பெருமாள்
சுயம்புவாகத் தோன்றியவர். "நவதிருப்பதி"
களிலே முதல்பதி, இந்தத் திருக் குருகூர்.

Koviloor Digital Library

50. தொலைவில்லிமங்கலம் தேவபிரான் – கருந்தடங்கண்ணி

எப்பேற்பட்ட சாபமும் தோஷமும் தேவபிரான் திருவருளால் தீருகிறது. ''இரட்டைத் திருப்பதி'' என ஒரே இடத்திலே இரு, திருமால் சன்னிதிகள். ஒன்றிலே நிற்பதும் மற்றதில் இருப்பதுமான திருக்கோலங்கள். ஆழ்வார்திருநகரியிலிருந்து மூன்று கி.மீ. தொலைவிலே வில்லிமங்கலம்.

51. ஸ்ரீவரமங்கை தோத்தாத்ரி – ஸ்ரீதேவி

இருந்த திருக்கோல மூலவருக்கு தினசரி எண்ணெய் அபிஷேகம் வைணவ 8 சுயம்புத்தலங்களிலே பிணிதீர்க்கும் எண்ணெக் கிணறு. ஆதி நாளிலே, நான்கு ஏரி நடுவே கோயில் அதனால் 'நாங்குனேரி'' வானமாமலை ஜீயர்திருத்தலமான இது திருநெல்வேலி to 35 கி.மீ.

52. புளிங்குடி காசினிவேந்தர் – மலர் மகள்

பஞ்சமா பாதக 'யக்ஞசர்மா'வையே பவித்திரனாக்கிய திருத்தலம் புஜங்கசயன கிடந்தகோல திருமாலின் உந்திக் கொடி விந்தையானது எதிர்நின்றால் ஏகபாததரிசனம், பின் ஜன்னலிலே இருபாத தரிசனம் ஸ்ரீ வைகுண்டத்திலிருந்து 4 – கி.மீ. தொலைவில் ''புளியங்குடி''

53. தென்திருப்பேரை முகில்வண்ணன் – குழைக்காதள்

பூமாதேவியும் மகாலட்சுமியும் போட்டியிட்டு அருள் தரும் கோயில் பங்குனிப் பௌர்ணமிகளில் வருண தேவனின் ஏகாந்த ஆராதனை சங்குதீர்த்த பத்திரவிமானம். நம்மாழ்வார் 11 – பாசுர சாசனம் ஆழ்வார் திருநகரியிலிருந்து 5 கி.மீ. இந்தத் தென்திருப்பேரை.

54. ஸ்ரீ வைகுண்டம் கள்ளபிரான் – பூமாதேவி

நீதிமறந்த மன்னனை, கள்ளனாகவந்து நிலைப்படுத்திய பிரான் இங்குள்ள யோகநரசிம்மர், பில்லி சூனியம் பெரும்பகை தீர்ப்பவர் பெருமாள் கள்ளனாக, தேவியர் திருடிகளாக நாடகமாடிய க்ஷேத்ரம் நவதிருப்பதியில் ஆறாவதானஇது, ஆழ்வார் திருநகரி to 5 கி.மீ.

Koviloor Digital Library

55. **வரகுணமங்கை** **விஜயாசனன் – வரகுணவல்லி**
சத்யவான்சாவித்ரி, ஸ்ரீராமசீதையர் வரலாற்றுத் தொடர்புடையது
அக்னிதேவர், ரோமசமுனிவர்களுக்கு பெருமாள் பிரத்யக்ஷம்
அக்னி தீர்த்த தேவபுஷ்கரணியோடு விஜயகோடி விமானாலயம்
ஸ்ரீவைகுண்டத்திலிருந்து 3கி.மீ.தொலைவிலே இந்த வரகுணமங்கை.

56. **திருக்குளந்தை** **மாயக்கூத்தன் – பாலவல்லி**
தேவகுருவுக்கு, கூத்தாடி தர்மம் காத்த கோலம் காட்டிய ஸ்ரீஹரி.
மாநுடப்பெண் கமலாதேவி மாதவனை தவம் செய்து வென்ற தலம்
"வேதங்களைப் படித்தால் மட்டும் போதாது" – படிப்பினை இங்கே.
ஸ்ரீ வைகுண்டத்திலிருந்து 11 கி.மீ. "பெருங்குளம்" எனும் குளந்தை

57. **குறுங்குடி** **வடுகநம்பி – குறுங்குடிவல்லி**
நந்தனார்க்கு நந்தி விலகியது போல, பலிபீடம் விலகியவிந்தை.
வேதம் தமிழ் செய்த மாறனான நம்மாழ்வார் அவதாரத் தலமிது
பெருமாள் சன்னிதி அருகில் சிவனையும் இங்கே தரிசிக்கலாம்
ராமானுஜர் தரிசனம் பெற்ற நம்பியூர், நாங்குனேரி To 38 கி.மீ.

58. **திருக்கோளூர்** **வைத்தமாநிதி – குமுதவல்லி**
சாபத்தால் குபேரன் "சஸ்பெண்ட்" ஆனபோது நவநிதி காத்த ஸ்ரீஹரி.
"செல்வத்தைச் சேர்த்தால் மட்டும் போதுமா?" விடைதரும் கோயிலிது.
மதுரகவியாழ்வார் அவதாரத் திருத்தலம் இதிலே, குபேர தீர்த்தம்.
புஜங்கசயன "மாநிதியின்" கோளூர், ஆழ்வார் திருநகர் to 4 கி.மீ.

மலைநாட்டுத் திருப்பதிகம் (59 - 72)

59. **திருவனந்தபுரம்** **பத்மநாபன் – ஹரிலட்சுமி**
கேரள மாநிலத் தலைநகர் திருவனந்த புரத்திலே, புஜங்க சயனபெ...ரி..ய பெருமாள். சிவநேயச் சேரமான் பெருமாள் நாயனார் (1050) திருப்பணிசெய்தது. மலையாள ராஜாக்களின்தீபாலங்கார தேஜோமய திவ்ய தேசம். பொங்கல், புளியோதறை என்றில்லா மல், பூ, சந்தனம் தரும் புனிதலாயம்.

Koviloor Digital Library

60. திருவண்பரிசாரம்

குறளப்பன் – கமலவல்லி

மலையாள ராஜாவாக இருந்து, ஆழ்வாரான குலசேகரரின் அபிமான திவ்விய தேசம். நம்மாழ்வார் பாசுரமும் அகத்தியர் ராமாயணமும் கொண்ட கோயில். சர்வரோக நிவாரன மூலிகைக் கலவைகளால் ஆன மூலவர், தாயாருடன் தரிசனம். நாகர் கோயிலிருந்து 4 கி.மீ.

61. காட்கரை காட்கரை அப்பன் – செல்வநாயகி

வாமன அம்ச காட்கரையப்பனுக்கு ஓணத்தில் பெருந்திருவிழா பக்தியால் ஆலயம் சென்று, இன்றும் சத்தியம் காக்கும் பக்தர்கள் 'நேந்திரம்'' எனும் கேரள வாழையின் (அ) பூர்வ வரலாற்றுக்ஷேத்ரம் ஏர்ணா குளத்திருந்து 11 கி.மீ. (கொச்சி பல்கலை கழகம் அருகே)

62. மூழிக்களம் மூழிக்களத்தான் – மதுர வேணி

இந்த ஆலயத் தல வரலாற்றிலே, ராமலெட்சுமணர்க்கும் இடம்'' "களத்தான் திருவருள் தீராத வியாதி தீரும்'' ஆழ்வாரின் பாசுரம் தெய்விகப் பொலிவுடன், தியான ஆராதனை காணும் திருத்தலம். "கருக்குட்டி'' ரயில் நிலையத்திலிருந்து 6 கி.மீ. மூழிக்களம்.

63. குட்டநாடு மாயப்பிரான் – பொற்கொடி

மா – பலசாலி பீமன் அமைத்துக் கும்பிட்ட சேரநாட்டு கோயிலிது ஸப்த ரிஷிகளுக்கு தேவியருடன் பெருமாள் தரிசனம் தந்த தலம். நாரதரைக் காரணமாக வைத்து பகுத்தறிவைச் சாடிய ஸ்ரீ கிருஷ்ணன் செங்கணுரரிலிருந்து 5 கி.மீ. "புலியூர்'' எனும் இந்த குட்ட நாடு.

64. செங்குன்னூர் இமையவரப்பன் – கமலவல்லி

உண்மையை மாற்றிச் சொன்ன தருமர் பிராயச்சித்தம் கண்ட க்ஷேத்ரம் திருமாலின் மோஹினி அவதார, காரண காரிய விளக்கத்தலம் ஆலயப்பிராகாரத்திலே பல நூறு தீபங்கள் சுடர்விடும் அற்புதம் செங்கனூர் to கோட்டயம் நகரிலிருந்து 36– வது கி.மீ. செங்கனூர் ரயிலடி

Koviloor Digital Library

65. திரு நாவாய் முகுந்தன் – மலர்மங்கை

இருந்தகோலம், காலத்தால் மறைந்து காட்சிதரும் பெருமாள் மூதாதையர் நினைவு வழிபாட்டிற்கு (சிரார்தம்) ஆதாரத்தலம் ஆக்கும் காக்கும் அழிக்கும் மும்மூர்த்திகட்கும் இங்கே சன்னிதி கள்ளிக்கோட்டை ரயில் தடம் "எடக்குளம்" இறங்கி 1 – கி.மீ.

66. திருவல்லவாழ் கோலப்பிரான் – செல்வக்கொழுந்து

நரபோஜன கண்டாசுரனை நால்வேத உத்தமனாக்கிய திருத்தலம் அசுர குணம் மாற, அன்பு நிலை அருள்வான் "திருவாழ்மார்பன்" பிள்ளைக்காகக் கதகளி காணிக்கை தந்தால் கைமேல் பலன். கொல்லம் எர்ணாகுளம் ரயில்தட.." திருவல்லா" ரயிலடி TO 5 கி.மீ.

67. திருவண்வண்டூர் பாம்பணையப்பன் – கமலவல்லி

ஹரிஹரபக்த மார்க்கண்டேய மகரிஷிக்கு பெருமாள் பிரத்யக்ஷம் பாண்டவருள் ஒருவரான நகுலனால் ஏற்பட்ட திருமால்க்ஷேத்திரம் பம்பாநதி பாபவிநாச தீர்த்தமுடன், வேதாலய விமானாலயம் செங்கனூர் திருவல்லா இடையிலுள்ள எரிமேலிக்கரை அருகே.

68. திருவட்டாறு ஆதிகேசவன் – மரகதவல்லி

அனந்தபுரத்துக்கும் மூத்தது, சேரநாட்டு இந்த ஸ்ரீ ரங்க க்ஷேத்திரம் . ஏராளக் கேரளக் கோயில்களின் கர்த்தா ஸ்ரீ பரசுராமன் படைத்தது கங்கா நதியும் தாமிரபரணியும் சங்கமமாகும் ஸ்ரீ கேந்திர கடல்வாய் நாகர்கோயிலிலிருந்து 24கி.மீ. தொலைவில் உள்ளது திருவட்டாறு.

69. வித்துவக்கோடு உய்யவந்தார் – பத்மாஸனி

தில்லையம்பல திருச்சித்திர கூடம்போல, ராஜஅம்சத் திருத்தலம் இது "அமிர்தம் வேண்டாம் பெருமாள் போதும்" என்ற அம்பரீஷன் கண்டதிருமால். சக்கர விமான, காஞ்சனதீர்த்த, தென்திசை கண்டு நின்ற கோலம். குருவாயூரிலிருந்து 30 கி.மீ. தொலைவிலே இந்த வித்துவக்கோடு.

Koviloor Digital Library

70. திருக்கடித்தானம்

அற்புத நாரணன் – கற்பகவல்லி

பஞ்சபாண்டவருள் தீர்கதரிசியான சகாதேவன் அமைத்த ஆலையம். சூர்யகுல ருக்மாங்கதனை சக்ரவர்த்தியாக்கிய அற்புதப் பெருமாள். ஆலயவளாக தியானத்தின் பலனாக, கேட்டவரம் உடனே கிடைக்கும். ஷோரனூரிலிருந்து 16 கி.மீ. திருக்கடித்தானம்.

71. ஆரன்விளை (ஆரன்முலா) குறளப்பன் – பத்மாஸனி

காண்டீபனாகிய அர்ஜுனன் அமைத்து ஆராதித்தபேராலயம் குருவாயூர் துலாபார காணிக்கை, குறளப்பன் கோயிலிலும் உண்டு கிழக்கே நின்ற திருக்கோலம், வாமனவிமானம், வியாச தீர்த்தம். செங்கணூரிலிருந்து பத்தாவது கி.மீ. இந்த ஆரன்விளை.

நடு நாட்டுத் திருப்பதிகள் 72 – 73

72. வஹீந்திரபுரம் தேவநாதன் – வைகுண்டநாயகி

கருடநதிக்கரைக் கோயில், எதிரே ஔஷதகிரிமேல் ஹயக்கிரீவர் மகாவிஷ்ணு ஹயக்கிரீவர் (குதிரைமுகம்) ஆன வரலாற்றுத்தலம் நிகமாந்த மஹாதேசிகனுக்கு தேவ நாதப்பெருமாள், பிரத்யக்ஷம் கடலூரிலிருந்து 5 – கி.மீ. தொலைவிலே இந்த திருஅயிந்திபுரம்.

73. திருக்கோவலூர் திரிவிக்ரமன் – புஷ்பவல்லி

முதலாழ்வார் (பொய்கை, பூதம்,பேய்) மூவரும் திருமாலைக் கண்ட ஊர் மாபலி மன்னனின் ஆணவம் தீர மூவடி கேட்ட வாமன மாதவன் பழையநூர்நீலி, கடையேழுவள்ளல், வரலாற்றுத் திருக்கோவலூர் விழுப்புரத்திலிருந்து 34 கி.மீ. திருக்கோவலூர் ரயில் நிலையம்.

Koviloor Digital Library

தொண்டைநாட்டுத் திருப்பதி (74 - 96)

74. திருக்கச்சி **வரதராஜன் – பெருந்தேவி**

"பெருமாள் கோயில்" என்றால் திருக்கச்சி என்பதே வைணவத் தீர்ப்பு நாற்பது ஆண்டுகளுக்கு ஓர் தரம் வெளியே வரும் அத்திவரதர் கட்டுமலைக்கோயில் 10 – அடிஉயர ஸ்ரீ வரதராஜ மூலவர். ராமாநுஜர் ஞானம் பெற்ற காஞ்சி, சென்னையிலிருந்து 55 – கி.மீ.

75. அட்டபுயம் **ஆதிகேசவன் – புஷ்பகவல்லி**

பிரம்மனின் யாகம் காக்க வந்த அட்ட (எட்டுக்கை) வீரப்பெருமாள் காஞ்சிப் பதினான்கு கோயிலிலே இதில் மட்டுமே பரமபதவாசலுண்டு கஜேந்திர தீர்த்த இவ்வாலயத்தில், முதலில் தாயார், பிறகே பெருமாள் "ஆதிமூலமே" என்ற கஜேந்திரயானைக்கு அபயமளித்த கேசவன்

76. திருத்தண்கா **தீபப்பிரகாசர் – மரகதவல்லி**

அசுரர்களால் இருளான யாகசாலையிலே ஒளியாய் எழுந்தவர் கலைவாணிக்கும் தேவர்க்கும் "தீபப் பிரகாசர்" பிரத்யக்ஷம் ஆதிநாளில் புல்படர்ந்த இப்பகுதி "தூப்புல்" எனவும் வழங்கியது இங்குபிறந்த மஹாதேசிகனுக்கு ஆலயத்துள் சன்னிதியுண்டு.

77. வேளுக்கை **அழகியசிங்கர் – அமிர்தவல்லி**

ஆதியிலேஇங்கேநின்றகோலம், இப்போது அமர்ந்த கோல நரசிம்மர். எதிர்த்தஅசுரரை நரசிம்மவடிவிலேவென்ற யோக மூர்த்தி இவர். தீபப்பிரகாசர் கோயிலருகிலேயே இந்த வேளுக்கை திவ்ய தேசம் ஹேமசரஸ்தீர்த்தம், கனகவிமானம், மேற்குத் திருமுக மண்டலம்.

78. திருவெஃகா

சொன்னவண்ணர் - கோமளவல்லி

யாகம் கலைக்க வந்த நதியைத் தடுத்த ஜலசயனப்பெருமாள். சீடன் கணிகண்ண னுக்காக சுவாமிக்கே "ஆர்டர்" போட்ட ஆழ்வார். "மனிதனைப்பாடேன்" என்ற கணிகண்ணனின்பின் சென்ற திருமால் இவர். தொண்டைமான் கட்டிய கோயில் இது.

Koviloor Digital Library



79. பாடகம்

பாண்டவதூதர் – பாமா, ருக்மிணி.

பாண்டவர்குத் தூதுசென்ற ஸ்ரீ கிருஷ்ணரின் திருக்கோயில். வேறெங்குமே இல்லாத 25–அடி உயர விஸ்வரூப மூலவர். ஜனமே ஜய சக்ரவர்த்தி செய்த தவத்தால் ஏற்பட்டதிருத்தலம்இது. ஸ்ரீராமாநுஜரை எதிர்த்த யக்ஞமூர்த்தியின் அறியாமையை நீக்கிய பெருமாள் இவர்.

80. ஊரகம் உலகளந்தவர் – அமுதவல்லி

திசைக்கொருகை, வான்முட்டும்கால் இப்படியாக மிகப்பெரும்மூலவர் மாபலிக்குக்காட்சி தந்த திருவிக்ரம தேஜோமயத் திருக்கோலம். பாற்கடல் “மெத்தை”யான ஆதிசேடனுக்கும் இங்கே சன்னிதி உண்டு. நாகதீர்த்த ஸ்ரீகரவிமானம். மேற்கு நின்ற பெருமாளின் திவ்யதேசம்.

81. நீரகம் நீரகத்தான் – நிலமங்கை

ஆலிலைக் கண்ணனைப் பிரதிபலிக்கும் மூலவர் ஆலயம் மாதவ அக்ரூர மகரிஷிக்குப் பிரத்யக்ஷமான பெருமாள் இவர். ரூபமில்லா மூலவராதலால் ஆராதனை யனைத்தும் உத்ஸவற்கே. அனைத்துலகுக்கும் தண்ணீரே ஆதாரம், நீரகத்தானும் அப்படியே.

82. காரகம் கருணாகரன் – பத்மாமணி

திருமங்கையாழ்வாரின் பரவசப் பாசுரங்களைப் பெற்ற தலம் வடக்கு நோக்கி நிற்கும் பெருமாள், நிகேதன ரிஷிக்கு பிரத்யக்ஷம் ஊரகம், நீரகம், இந்தக் காரகம் மூன்றும் ஒரே வளாகம் அக்ராயதீர்த்த, வாமன – ரம்யவிமானங்களைக் கொண்டது காரகம்.

83. கார்வானம் வானப் பெருமாள் – தாமரையாள்.

ஞானதிருஷ்டியால் திருமங்கை, வைகுந்தம் கண்டு பாடிய தலம். புஷ்பகவிமானத்தே நின்ற கோல ஸ்ரீஹரியின் திவ்விய தரிசனம். “நீரும் அதைப்பொழியும் காரும் நானே” என்பது மூலவர்விளக்கம் உலகளந்த பெருமாளின் ஆலயத்தருகே உள்ளது இந்த கார்வானம்.

Koviloor Digital Library

84. நிலாத் திங்கள் **சந்திர சூடன் – நிகரிலாவல்லி**

பார்வதித்தங்கைக்கு உதவிய பெருமாள் என்பது பக்தரின் தீர்ப்பு
சிவகாஞ்சி ஏகாம்பரர் கோயிலுக்குள் குடிகொண்டபெருமாளிவர்
கிளைக்கொரு ருசிக்கனிதரும் புராதனமாமர வரலாற்றுத்திருமால்
சைவரால் ஆராதிக்கப்படும் வைணவ "நிலாத்திங்கள் துண்டம்"

85. கள்வனூர் **ஆதிவாரகர் – அஞ்சிலைவல்லி**

அர்ச்சாவதாரங்களிலேயே இந்த ஆதிவராகர் தான் தலையாயவர்
காஞ்சி கமாட்சியம்மன் ஆலயத்துள்ளே காட்சிதருபவர் ஆதிவராகர்
திருக்குளத்தின் வடகிழக்கு மூலையிலே மூன்றுவித திருமாலர்
நல்லோர் மனங்கவரும் கள்வனாகிறான் இந்த, நான்முகன் தந்தை.

86. பவளவண்ணம் **பவளவண்ணர் – பவளவல்லி**

காலத்திற்கேற்ற கோலவண்ணம் கொள்ளும் மாலவன் ஆலயமிது
பார்வதிக்கும் பிரம்ம தேவனுக்கும் பவளப் பெருமாள் பிரத்யக்ஷம்
நம்மாழ்வர், திருமங்கை, உடையவர்களுக்கு தனித்தனிச்சன்னிதிகள்
பவளவண்ணர் வீதியிலேயே, பச்சைவண்ணர் கோயிலும் உண்டு.

87. பலமேஸ்வர விண்ணகர் **பரமபதநாதன் – வைகுந்தவல்லி**

பல்லவமன்னரின் பிள்ளைக் கலிதீர்த்துவைத்த பெருமாள் இவர்
பல்லவர்கால மூன்றுதள ஆலயம், மூவகைக்கோல மூலவர்கள்.
கைலாயநாதர் கோயிலுக்கும், பரமேஸ்வர விண்ணகர்க்கும் சுரங்கம்.
அரசின் தொல்பொருள்துறையின் நிர்வாக சிற்ப அற்புதக் கோயிலிது.

88. திருப்புட்குழி **விஜயராகவன் – மரகதவல்லி**

நல்ல வாரிசை விரும்பும் தம்பதியர் செல்ல
வேண்டிய ஆலயம். "அத்துழாய்' எனும்
வைணவ இளம்பெண், தீண்டாமையைச் "சீ"
எனச் சாடிய திருத்தலம். மூதாதையர்களை
நினைத்து வழிபாடு நடத்த சிறந்த க்ஷேத்ரம்.
விஜயகோடிவிமானம், ஜடாயுதீர்த்தம். to
காஞ்சியிலிருந்து 12 கி.மீ திருப்புட்குழி

Koviloor Digital Library

89. திருநின்றஊர்

பத்தவத்ஸலன் – சுதாவல்லி,

திருவாகிய லட்சுமிவந்து இங்கே நின்றதால் இது "திருநின்ற ஊர்". வருண புஷ்கரணி, உத்பல விமானம், கிழக்குப்பார்த்த நின்றகோலம். உள்ளத்துள் கோயில்கட்டி மன்னரையே அதிரவைத்த பூசலாரின் ஊர். சென்னை மாநகரிலிருந்து 28.– வது கிமீ. திருநின்றவூர்

90. திருவள்ளூர் வீரராகவன் – வஸுமதிதேவி

தேகாரோக்யத்தையும் ஞானத்தையும் தருபவர் இந்தவீரராகவர் அதிதி (விருந்தினர்) பூஜையின் அவசியம் உணர்த்தும் திருத்தலம் "எவ்வுள்கிடக்க?" என பகவானே கேட்டுக்கிடக்கும்" ஊர் இது. புஜங்கசயனத் திருமாலின் திருவள்ளூர், சென்னையிலிருந்து 42. கி.மீ

91. திரு நீர்மலை நீர்வண்ணன் – அணிமாமலர்

மலையெல்லாம் தண்ணீர் ததும்பிநின்றதால் இது திருநீர்மலை அடிவாரத்தில் நீர்வண்ணன், அழகிய மலைமேல் நரசிம்ம மூர்த்தி யாத்திரை வந்த வால்மிகிக்கு சீதாராமராய் தரிசனம் தந்தவர். திருமங்கைப் பாசுர திருநீர்மலை, சென்னை பல்லாவரம் 42 கி.மீ

92. திருவிடந்தை நித்யகல்யாணர் – கோமளவல்லி

நல்லறமிக்க இல்லறத்தைவழங்கும் நித்யகல்யாண க்ஷேத்திரம் திரு வாகிய லெக்ஷ்மியுடனாய சேவையால் "திரு+இட+எந்தை" இவர் இத்தலம் சேவித்தால், கல்யாணத்தடைகள் காணாமல் போகும் சென்னை மாகாபலிபுரச் சாலையிலே.. மாமல்லைக்கு அருகே 9. கி.மீ

93. மாமல்லபுரம் தலசயனர் – நிலமங்கை

பாற்கடலைக் காணத்துடித்த ரிஷிக்கு கடற்கரைலே காட்சி தந்தவர் ஜலசயனபெருமாளும், ஆதிவராகர்கோயிலும் இங்கே உண்டு கல்லெல்லாம் கவிபாடும் பல்லவர்களின் சிற்ப அற்புதக் கடல்மல்லை பூதத்தாழ்வார் பிறந்த இவ்வூர், சென்னையிலிருந்து 65–வது கி.மீ.

Koviloor Digital Library

94. **திரு அல்லிக்கேணி** **பார்த்தசாரதி – வேதவல்லி**

பற்பல அவதார, ஐந்து அர்ச்சா – விக்ரஹ – மூர்த்திகள் உள்ளதலம் 5–மூர்த்திகளுமே மங்ளாசாசனம் பெற்ற "பஞ்சமூர்த்தித்தலம்" இது மயிலை கபாலி போல, இந்தப் பார்த்த சாரதியும் புராதனமானவர் ஐந்துவிமான கோபுரங்கள், "அல்லிகேணி"உட்பட ஐந்து தீர்த்தங்கள்.

95. **சோளிங்கர்** **யோகநரசிம்மர் – அமிர்தவல்லி**

இருமலைகள். பெரியமலை நரசிம்மர், சின்னமலை அநுமன் சப்த(7) ரிஷிகட்கும், விஸ்வாமித்திரர்க்கும் பெருமாள் பிரத்யக்ஷம் பில்லி சூன்யம் பேய்களெல்லாம் இல்லாமலாக்கும் "கடிகை"தலம் சென்னைக்கு வடக்கே 60. கி.மீ. இந்த "சோளசிம்மபுரம்"

வடநாட்டுத் திருப்பதிகள்
(96 - 108)

96. **திருவேங்கடம்** **ஸ்ரீநிவாசன் – அலர்மேல்மங்கை**

பத்து ஆழ்வார்கள் 203 பாசுரங்களால் ஆராதித்துள்ள பாலாஜி 66–கோடி தீர்த்த ஏழுமலைத்திருமலை, உலகப் புகழ் திவ்யதேசம் ஆண்டுக்கு 31–கோடி(1966), இன்று (2000) தினம் ஒரு கோடிவரவு குபேரக்ஷேத்திரமான திருப்பதி, சென்னையிலிருந்து 150. கி.மீ.

97. **அகோபிலம் (மலை)** **நரசிம்மர் – மகாலெட்சுமி**

அடிவாரக் கோயிலிலே, பிரகலாதவரதன் – செஞ்சு லட்சுமி தெரிசனம். பிரகலாத இரண்ய கசிபு. வரலாற்றுத் தொடர்பான ஒன்பது நரசிம்மர்கள் இங்கே. படைத்தல் காத்தல் அழித்தல், ஆகிய முத்தொழில் புரிகின்றவர் இத்தலத் திருமால். சென்னை மும்மை (பம்பாய்) ரயில் தடம் ஆந்திரமாநில நந்தியால் To 60. கி.மீ

Koviloor Digital Library



98. அயோத்தி

ஸ்ரீ ராமன் – சீதாதேவி.

ஸ்ரீராமர் பிறந்து வளர்ந்து அரசோச்சி வாழ்ந்து மறைந்த திருத்தலம். சரயு நதிக்கரையிலுள்ள அயோத்தியெங்கிலுமே சீதாராம,அநுமன்களின் சின்னங்களே. சாதனைப்பணிகள் நூறிருக்க, சோதனைக்காவல் ஏன் எதற்கு? காசியிலிருந்து 190–கி.மீ. லக்னோ To அயோத்தி 130– கி.மீ.

99. நைமிசாரண்யம் ஸ்ரீ ஹரி – ஹரிலக்ஷ்மி

ஆரண்ய (காடு)மே ஸ்ரீஹரியாக இங்கே ஆராதிக்கப்படுகிறது. கோமதி நதியோர திவ்யதேசத்திலே சமீபகால சில சன்னிதிகள் வியாசரும், சுகரும் இங்கிருந்து, பாகவத புராணம் பாடியுள்ளனர் லக்னோ–பாலமு ரயில்தடத்திலே, நைமிசாரண்ய ரயில்நிலையம்.

100. சாளக்ராமம். ஸ்ரீ மூர்த்தி – ஸ்ரீ தேவி

கண்டகி நதியிலே பரமாத்மஜீவ ஒளிக்கற்களே மூர்த்திகள் தானாகத் தோன்றிய 8. க்ஷேத்திரங்களிலே இதுவே பிரதானம் சமீபகாலச்சிறுகோயிலில், நின்றகோலத் திருமால் தரிசனம் நேபாள் தலைநகர் "காட்மாண்டு" விலிருந்து 150–கி.மீ தொலைவில்

101. பத்திரி நாத் பத்ரிநாராயணன் – அரவிந்தநாயகி

குருவும் சீடனுமாக வந்த (நர–நாரணன்) திருமாலின் வதரியாசிரமம் முன்னோர் வழிபாடுகளை இங்கு முடிப்பது முழுப்பலன் தருவதாகும் பனிமலைமேல் கொதிநீர் தப்தகுண்டம்; வாசல்வரை பேருந்துவரும், டெல்லி To ஹரித்வார் ரிஷிகேஷ்வழி 500 கி.மீ, 10200, அடிஉயர மலை

102. கண்டம் கடிநகர் நீலமேகன் – புண்டரிகவல்லி

ஏகபத்னி விரத போதனைக்கே ஸ்ரீஹரி இங்கு புருஷோத்தமன் "தேவப்பிரயாகை" ஆகிய இங்குதான் கங்கை யமுனை சங்கமம் ஆதிசங்கரர் கட்டி வைத்த ரங்கநாதர் ஆலயம் இங்கு புராதனம் சித்தர்கள் உலவுகின்ற இத்தலம், ஹரித்துவாரிலிருந்து 85. கி.மீ.

Koviloor Digital Library

103. திருப்பிரிதி **பரமபுருஷன் – பரிமள வல்லி**

பனிமலை கருமுகிலாய் ஹரியைக் கண்டார் திருமங்கையாழ்வார். தொன்மையான திருப்பிரிதி, இப்போது "ஜோஷிமட்"ஆனது பத்ரிநாத் மூலவர்க்கு பனிக்கால ஒய்விடம் இந்த ஜோஷிமடம். ஹரித்வார் To பத்ரிநாத்வழியிலே ருத்ர, கர்ண, தேவப் பிரயாகைகள்.

104. துவாரகை **துவாரகாநாதன் – ருக்மிணிதேவி**

முக்திதரும் வைஷ்ணவத் திருத்தலம் ஏழிலே, முதல்தலம் இதுவாகும். எங்கோபிறந்து எங்கோவளந்த மாயக்கண்ணன் இங்கே மன்னன். கலிபிறந்து கிருஷ்ணன் மறைந்ததுமே துவாரகை கடலுள் மூழ்கியது. மும்பையிலிருந்து இப்போதய துவாரகைக்கு ரயில்வழி 825. கி.மீ.

105. வடமதுரை **கோவர்தனன் – சத்தியபாமா**

பூபாரம் தீர்க்கவந்த மாபாரதக் கண்ணன் புனிதஅவ தாரத்தலம் மதுரா கோகுலம் பிருந்தாவனம் மூன்றும் ஒரே மங்களாசாசனம் இதிகாச மதுரா மண்ணாகி, நாகரீக ஊரும் கோயில்களும் இப்போது. டெல்லி To ஆக்ராசெல்லும் வழியிலே (வட) மதுரா ரயில்நிலையம்.

106. ஆயர்பாடி **மோகனகிருஷ்ணன் – பாமா, ருக்மிணி**

பலராமன் பிறந்ததும் ஸ்ரீகிருஷ்ணன் வளர்ந்ததும் இந்த ஊர். கோபியர்கொஞ்சிய ஸ்ரீ கிருஷ்ணலீலையின் காவியக்கேந்திரமிது. பாமா ருக்மணிசமேத நின்ற திருக்கோல மோகன ஸ்ரீகிருஷ்ணர் மதுரா ரயிலடியிருந்து கிழக்கே 6.கி.மீ. யமுனா நதிதீர கோகுலம்.

107. திருப்பாற்கடல் **பாற்கடல்பரமன் – கடல்மகள்**

வடதுருவம் தாண்டிய கடல்வண்ணவடிவமே பெருமாளின் திருஉருவம். தேஜோமய புஜங்கசயன ஆழிமாயனை, மாதவ யோகியர் மட்டுமே காணமுடியும். அனைத்து உலக ஒளியாக, உந்திக்கமலத்திலே படைக் கும் பிரம்மனோடு ஒளிரும் பரப்பிரம்மம். பத்து ஆழ்வார்களின் ஐம்பத்தோரு பாசுரம் பெற்ற க்ஷீராப்தி நாதன் இவர்.

Koviloor Digital Library

108. பரமபதம் பரமபதநாதன் – பெரியபிராட்டி

“பரவாசுதேவனின் திருநாடு” எனவைணவம் போற்றும் ஸ்ரீவைகுந்தம். அனந்தன், கருடன், விஷ்வக்ஷேனர் முதலான, நித்யஸூரிகளின் பிரத்யக்ஷம். இருநான்கு ஆழ்வார்களின் மங்களாசாசனம் பெற்ற பரவாஸுதேவனின் "அப்ராகிருத" சத்திய நாத சாஸ்வத லோகம்.

மண்ணில் அரங்கமுதல் வைகுந்த நாடளவும்
எண்ணுதிருப் பதிநூற்று எட்டினையும் – நண்ணியே
கற்போர், துதிப்பார், கருதுவோர், கேட்டிருப்பர்
பொற்பாதம் என் தலைமேல் பூ. – 108 திருப்பதி அந்தாதி..

பாசுரம் பெறாத வைணவ பேராலயங்கள் சில...

அவந்தி, கயா, புஷ்கரம், பூரிஜகந்நாதம், பண்டரிபுரம், சோமநாதபுரம், குருக்ஷேத்திரம், பிரயாகை, பிருந்தாவனம், ஜனார்தனம், மிதிலை, ஹம்பி, சிம்மாசலம், பத்ராசலம், திருநாராயணபுரம், ஸ்ரீ கூர்மம், புஷ்பகிரி, மங்கள கிரி, கதிரி, யாதவகிரி, பாபநாசம், ஸ்ரீ முஷ்ணம், புதுவை, திருப்பரையார், குருவாயூர், அம்பலப்புழை, திருமழிசை, திருமயிலை, திருவஞ்சைக்களம், திருமண்டங்குடி, மழலைமங்கலம், திருக்குறையலூர், பூவிருந்தவல்லி, ஸ்ரீபெரும்பூதூர், கூரம், பச்சைப்பெருமாள்கோயில், ராஜமன்னார்கோயில், நாங்குநேரி, வானமாமலை, சிங்கபெருமாள் கோயில், மதுராந்தகம், திருமலை வையாவூர். இப்படியாக பலநூறு திருமால் கோயில்கள் பாரதத்திலே உள்ளன.

இந்திய வரலாற்று விலை என்ன?
இளைய தலைமுறையின் நிலை என்ன?

படியப்பா

இது ஒரு தேசிய “ஜாதக” நூல்!
இருப்பவர் தரலாம்இத் திருப்பணிக்கு

Vembattur Krishnan
SUDARMANI PATHIPPAGAM,
9, Pajanai Koil St., Choolaimedu,
CHENNAI -600 094

Koviloor Digital Library

"சுடர்மணிக்கவிஞர்", "ஆன்மிகரத்னா", "சேவாரத்னா"

வேம்பத்தூர் கிருஷ்ணன் எழுதி வெளிவந்தவை

1955 "சினிமாஜோதி"யில் முதல் கவிதை பிரசுரமாகி, பிரபல பத்திரிக்கைகளிலே கதை, கட்டுரை, கவிதைகள் இன்றும் தொடர்கின்றன.

1970 – முதல் ஆண்டுக்கு ஒன்று **"சுடர்மணிமாலை"** பக்திவழித் தொகுப்பு நூல். 25

1975 – **'ஹிந்துமித்திரன்'**, 1995 – **"சனாதன தர்ம பீடம்"** ஆகிய மாத இதழ்களின் ஆசிரியரின்.

பிரதான தொடர்களும், பிரசுரமான நூல்களும்.

திரையுலக நிறைகுறைகள்	– 1968
விலங்கொடித்த வீரர்கள்	– 1970
திருப்பதி தெய்வம்	– 1972
ஹிந்துமத யோக ஜாதகம்	– 1974
இடிந்தகரையில் தொடர்ந்த கதை	– 1975
ஜோதிடம் பொய்யல்ல!	– 1975
திருப்பராய்த்துறை (சித்பவானந்தர்)	– 1976
வேதமதப் பாதையிலே	– 1977
க்ஷேத்ராடான சித்ரவதை	– 1978
அந்நாள் முதல் இந்தநாள் வரை	– 1981
படம் தரும் படம்	– 1981
பன்னிரு சுடர்மணி சிறப்பு மலர்	– 1982
பலகண்டம் கடந்த ஜலகண்டேஸ்வர்	– 1982
சிந்திக்க மறந்த இந்துக்களே!	– 1984
ஆலயம் தொழுவது அவசியமா?	– 1985
அமுதம் கொடுத்த ஆழ்வார்கள்	– 1985
ஆனந்த விநாயகர் மலர்	– 1985
'கர்ஜனை' (தேசிய கவிதை நூல்)	– 1987
நவராத்திரி துர்கா தேவிமலர்	– 1988
இசைமணி மாலை	– 1989
பட உலக அடிமை ("பொம்மை")	– 1991
அருள் தரும் ஆலயம்	– 1991,

வாழ்வில் கோயில்	– 1991
கோயில் நாடு	– 1992
கணபதி மணிமாலை	– 1992
108 கோயில் நாடு (கவிதை)	– 1993
ஆச்சார்ய மணிமாலை	– 1993
ஐயனார் மணிமாலை	– 1993
முருக மணிமாலை	– 1993
பரமசார்ய மணிமாலை	– 1994
ஆலயமணிகள் (15 கோயில்கள்)	– 1996
திருமூலர் (திருமந்திர வரலாறும்)	– 1997
விநாயகர் துதிப் பாடல்கள்	– 1997
கடவுளும் நாமும் (நவகிரஹம்)	– 1997
சொன்னால் சுகம் (18–புராணமும்)	– 1998
சித்தர் மணிமாலை	– 1998
தமிழ்மகுடம் (சிங்கப்பூருக்காக)	– 1998
வாரியார் போற்றி மணிமாலை	– 1999
கோயிலும் நாமும்	– 1999
அன்பே சிவம் (சைவம்)	– 1999
ஆனந்த ஸ்ரீ ஹரி, (வைணவம்)	– 2000
குரு க்ஷேத்ரமுருகன் கோயில்	– 2000
சத்தியச்சித்தர்கள் (50 சித்தர்கள்)	– 2000
நூறாண்டு சினிமா படஉலக அடிமை	– 2000

1990 – முதல்,"**D.D**" யில் ஒளிபரப்பான "காவிரியின்கதை" "அறுபத்துமூவர் உலா" ரமணர், சாயிபாபா .தொடர்களோடு "ராஜாதேசிங்கு", "தமிழிசைச் செல்வர்" முதலான பல TV தொடர்களும், நுற்றுக்கணக்கில் பக்திப்பாடல்கள் (Casstes) எழுதியது – எழுதிக் கொண்டிருப்பது.

1954–முதல் சினிமா துணைடைரக்டர் & பாடலாசிரியர், சுமார் 80 திரைப்படங்கள்

வேம்பத்தூர் கிருஷ்ணன் 9 – பஜனைக் கோயில் தெரு, சூளைமேடு, சென்னை – 94

Koviloor Digital Library

ஸ்ரீ வைஷ்ணவ இரண்டு ஆகமங்களிலே

வைகானசம்

திருமாலின் திருவுருவ அமைப்புகள், வழிபாடு, மற்றம் திருவிழாக்களோடு, ஆலய சம்ரோக்ஷணம் (கும்பாபிஷேகம்) திருமஞ்சனம், நைவேத்யம், பிரசாதம் முதலான அனைத்துவிபரங்களையும் கொண்ட வைணவத்தின் இரு ஆகமங்களிலே "வைகானஸம்" எனப்படுவது இந்த ஆகமம்,

திருமாலின் மார்பிலே தோன்றிய "விகனஸர்" எனும் முனிவரால், அவரது சீடர்களான மரீசி, அத்திரி, பிருகு, கச்சியபர், ஆகிய நால்வருக்கும், நான்கு லட்சம் பாடல்களால் உபதேசிக்கப்பட்டது. 11–விகனஸ சூத்ரங்கள், 8 – மந்திர பிரச்னம், ஆலய நிர்மாணம், பிராயச்சித்தம் முதலான பல அபூர்வ விபரங்களைக் கொண்டது வைகானஸம்.

விகனஸ ரிஷிமூலமாக நான்கு ரிஷிகளுக்குவந்து, அவர்களால் வைணவ பரமாசார்யர்களுக்கும் கிடைத்து, வழிவழியாக வந்து, இன்றும் பொலிவோடு விளங்குவதாகும்.

நாள் ஒன்றுக்கு ஒரு கோடி ரூபாய் இன்று வருவாய் குவிகின்ற திருப்பதி – திருமலை ஆனந்த விமான ஸ்ரீ வேங்கடாசலபதிக்கு, "வைகானஸ ஆகமமுறை" ஆராதனைதான் தொன்று தொட்டு. . . இன்றுவரை இருந்து வருகின்றது.

வைகானஸ சம்ப்ரதாயப்படி வாழும் பட்டாச்சார்யப் பெருமக்களின் சிரத்தா பக்தியுடன் கூடிய பெருமாள் சேவையைக் காணும் நாமெல்லாம் பூர்வ புண்ணியர்களே.

Donated By : *Vidwan V. Lakshmanan* BALAJOSIYAR

BALAJOTHIDAM - ENNGAL

NO. 1/5, REDDYKUPPAM ROAD, WEST MAMBALAM,
CHENNAI - 600 033. PH : 4850043

Koviloor Digital Library

ஸ்ரீ வைஷ்ணவத்தின் இரண்டு ஆகமங்களிலே

பாஞ்சராத்ரம்

இந்த பாஞ்சராத்ர ஆகமத்தை, பரவாஸுதேவ னான ஸ்ரீ மந்நாராயணனே பெரிய பிராட்டியான மகாலட்சுமிக்கு நேரடியாக உபதேசித்ததாகும்.

சர்வலோக சஞ்சாரியான நாரதமகரிஷிக்கு, பத்திரி நாதத்திலே நர – நராயண பிரத்யக்ஷத்தின் போது, திருமாலே பாஞ்சராத்ர ஆகமத்தை உபதேசித்தார்.

பகவானே தந்தருளிய இந்த ஆகமத்தை "வேதசாரம்" என்றே பாஞ்சராத்திரியர் போற்றுவர்.

பாத்மம் முதல், பிராசேதஸம்" எனப்படும் 108 வகை கொண்டது இது. "பகவத் சாஸ்திரம்" என்றும் இதற்குச் சிறப்புத் திருப்பெயருண்டு.

யோகம், சாங்கியம் முதலான ஐந்து சாஸ்திர ஆதாரமிது. நாள் தோறும் வைணவர்கள் செய்ய வேண்டிய ஐந்து கடமைகளின் பெருமைகளை ஆதாரபூர்வமாக விளக்குவது.

"பரம், வியூகம். . ." எனத் தொடரும் திருமாலின் ஐந்து நிலைகளின் சிறப்பு இலக்கண விளக்கம் இது. வைணவ சமய இலச்சினை விளக்கத்தோடு, ஸ்ரீ வைஷ்ணவத்தின் அறநெறிச் சாரமாகவும் விளங்குவது இந்தப் பாஞ்சராத்ர ஆகமம்.

ஐச்வர்யம், வீரம், புகழ், ஞானம், வைராக்யம், புருஷார்த்தம் ஆகிய ஆறு குணங்களுமுள்ள, ஸ்ரீமத் நாராயணனே முழுமுதற் கடவுள் எனும் அசையாத கோட்பாடு கொண்டவர்கள் பாஞ்சராத்திரர்கள்.

Donated By : VADAPALANI SIDDHAR, GURUJI
Dr. A.R. VARADHARAJAN
MURUGA SIDDHAR VAZIPATTU MAIYAM
"Murugan Illam" 23, Vellalar Street, Kodambakkam,
Chennai - 600 024. PH : 4844201

Koviloor Digital Library

ஹயக்ரீவர் அவதாரம்

ஸ்ரீ மந்நாராயணன் 'மச்ச – கூர்ம,. . வராக. .. வாமன. . ராம. .. கிருஷ்ண. . . ஹயக்ரீவர்களாக வந்தது. அற்புதம் என்றும், பரசுராம, பலராம, வேத வியாசர், நம்மாழ்வார் முதலான மஹான்கள். "அம்சாவதாரம்" என்றும் பூர்வாசார்யர்கள் கூறுவர்.

மது, கைடபர் என்கிற இரு அரக்கர்களும் படைப்புக்கு ஆதாரமான வேதங்களைக் கவர்ந்து நீருக்குள் ஒளித்து விடுகின்றனர். பிரம்மா ஓடிவந்து முறையிட்டதும், திருமால் மாநுட உடலும் குதிரைத்தலையும் கொண்ட "ஹயக்ரீவ" வடிவம் கொண்டு நீருள் பாய்ந்து, சீறிய மது – கைடபர்களை வதைத்து, ஆதார வேதங்களை மீட்டு. .. வந்து, நவயுகப் படைப்புக்கு வழிவகுத்தார்.

அரக்கர் பிடியிலே ஆட்பட்ட வேதங்களின் புனிதத்திற்காக, ஹயக்ரீவப் பெருமாளே கரங்களில் வேதங்களை ஏந்தியபடி, மகாலட்சுமி சமேதராய் காட்சி தந்தார். ஞான முத்திரையுடன் ஏடுதாங்கிய ஹயக்ரீவரை. . வழிபட்டால் கல்வி சிறக்கும், நல்ல வாரிசு பிறக்கும், அல்லல் தொலையும், செல்வம் நிறையும். செயலிலே புயலின் வேகம், சிந்தனையில் உயர்ந்த ஞானம் மற்றும் இயல்பான வாழ்வுக்குத் தேவையான யாவற்றையும் ஸ்ரீ லட்சுமி ஹயக்ரீவர் ஆராதனையால் பெற்றுவிடலாம்.

"ஞானாநந்த மயம்தேவம், நிர்மல ஸ்படிகாக்ருதிம்
ஆதாரம் சர்வவித்யானாம், ஹயக்ரீவம் உபாஸ்மஹே".

Donated By : "PARAMACHARYA DASHAN"
"CHENNI" RADHAKRISHNAN
NO. 1, ARUMUGAM STREET, NANGANALLUR,
CHENNAI - 600 114.

Koviloor Digital Library

நர – நாராயண பத்ரிநாத்

பரவாஸுதேவனாகிய ஆனந்த ஸ்ரீ ஹரி, நரனாகவும், நாரணனாகவும் வந்திருந்து, பக்தருக்காக வாழ்ந்து காட்டிய திருத்தலமலை பத்திரிநாதம்.. வைணவப்பெருமக்கள் இத்தலத்தை ''பத்ரிகாச்ரமம்'' எனப்போற்றுவர், ஞானியரும், ரிஷிகளும் இந்த ஆச்ரம நிழலிலேதான் வேத உபநிடதங்களில் தெளிவு கண்டு பாரத சமுதாயத்திற்கு வழங்கினர்.

பத்திரிநாதனின் ஆலயத்திற்கு வடக்கே மூன்றுகல் தொலைவிலே உள்ள ''மானா'' கிராமத்தை ஒட்டிய மலைப்பகுதியில் ஏடுகளை அடுக்கியது போன்ற அமைப்பிலே, ''வியாசர்குகை'' உள்ளது.

ஸ்ரீ விநாயகப் பெருமானின் துணையோடு, மகாபாரதத்தை வியாசர் இங்கேதான் பாடினார் என்பது வரலாறு. அலகநந்தா நதியின் ''ஐஸ்'' தண்ணீரும், ''தப்தகுண்ட''த்துக் கொதிநீரும், ''நீரும் நெருப்பும் நானே'' எனத் திருமால் இங்கே கூறாமல் கூறும் அற்புதங்கள். ஆதி சங்கரர் இந்த ஆலயத்திற்கு வந்து சென்ற வரலாற்றுச் சுவடும் உண்டு.

கேரளத்து ''ராவல்ஜீ''க்கள்தான் தொன்று தொட்டு இங்கே பூசாரிகள். 10 – ஆயிர அடி உயர பத்ரி நாத்திலே 12– ஆயிர அடிஉயர' நீலகண்ட சிகர'' த்திலே காலை 4½ மணிக்கே மின்னும் சூர்ய ஒளியை ஸ்ரீமந் நாராயணனாகவே தரிசிக்கலாம். இங்குள்ள ''பிரம்மகபால'' த்திலே ஒருமுறை பிண்டதானம் செய்தால், நமது பித்ருக்கள் நிரந்தர சாந்தி பெறுவர். ஜுன், முதல் செப்டம்பர் வரை யாவரும் சுகமாகப் போய்வரலாம். ஆலய வளாகம்வரை இப்போது பேருந்து வசதி உண்டு.

பத்திரி நாதன் தரிசனம், சர்வ பாப, துன்ப விமோசனம்.

Donated By : TRAVEL TIMES (INDIA) PVT. LTD.
THE COMPLETE TOUR COMPANY
H.O.: #11, CLUB HOUSE ROAD, (OPP. SPENCER PLAZA), ANNA SALAI, CHENNAI - 600 002.
PAGER: 9610 - 114229 8587213, 8585579, 8530081, 8510097, 8515141, 8515113
NO. 50, (OLD NO. 182) NORTH USMAN ROAD, T.NAGAR, CHENNAI - 17. PHONE: 8251061, FAX: 8544195

Koviloor Digital Library



வைணவத்திலே "படி" யென்றால்?

வைணவ பக்தி இலக்கியங்களின் ஆதார இலக்கணமாக விளங்குவது, ஆழ்வார்களின் நாலாயிர திவ்யப் பிரபந்தமாகும். தேவாரத்திருமுறைகளை நம்பியாண்டார் நம்பிகள் தேடித் தொகுத்தது போல, ஒரே ஒரு திவ்யப் பிரபந்தப் பாடலைக்கேட்டே, நாலாயிரத்தையும் தேடிப்பிடித்துத் தொகுத்துக்கொடுத்தவர் ஸ்ரீ நாதமுனிகள்

ஆழ்வார்களின் பிரபந்தங்களுக்கு ஆச்சார்யர் பலர் எழுதியுள்ள உரைக்குப் பெயரிடும் போது "படி" என்கிற சொல்லைக் கையாளுவர். "படி" என்றால், ஒற்று எழுத்துக்களைத்தவிர்த்த 32 – உயிர்மெய் எழுத்துக்களைக் கொண்ட சொற்றொடர் ஆகும்.

வடமொழியின் – சமஸ்கிருத – யாப்பிலக்கணத்திலே, அமைந்த "அனுஷ்டுப்" எனும் செய்யுளில் 32. உயிர்மெய் எழுத்துகள் அமைய வேண்டியது சம்ப்ரதாயம். அந்த வகையிலே ஒரு "படி" என்றால், ஒரு அனுஷ்டுப் செய்யுளிலே வரும் 32 உயிர்மெய் எழுத்துக்களைக் கொண்ட தொகுப்பு ஆகும்.

"மூவாயிரப்படி, ஆறாயிரப்படி. . ." என்றால் 3– ஆயிரம், 6– ஆயிரம் அனுஷ்டுப் செய்யுள்களின் அளவுள்ள நூல்கள் எனப்பொருள்பெறும். "24 – ஆயிரப்படி" என்றால்... 24 x 32 = உயிர்மெய் எழுத்துக்கள் கொண்ட நூல் எனப்பொருள் ஆகும்.

படிப் படியாய் நன்நூல்கள்படித்துயர்ந்தால். . .
பைந்நாகப் பாயனருள் காணலாமே.

Donated By : S. Chandrasekar
JEKATHA ELECTRO INDUSTRIES
IMPORTERS & MANUFACTURERS OF AUDIO & VIDEO SYSTEMS
21/3, NARASINGAPURAM STREET,
FIRST FLOOR, MOUNT ROAD, CHENNAI - 2.

Koviloor Digital Library

"விசிஷ்டாத் வைத" விளக்கம்

இரண்டாக இருப்பதை "த்விதா" என்பர் அதாவது பேதம் எனப்படும் பிரிவு காண்பது, அதுவே **துவைதம்.** "இரண்டல்ல இரண்டும் ஒன்றேதான், அனைத்தையும் கடவுளாகப் பார்ப்பதே சாஸ்வதம்" என்பது **அத்வைதம்.**

இரண்டும் தனித்தனியே இருப்பதானாலும், "சித்" எனப்படும் ஜீவாத்மாவும்", "அசித்" எனப்படும் ஜடமான உடம்பும் உண்மை. உடம்பிலே துடிக்கும் உயிராக நிலைத்து அனைத்துமாக இருக்கிறான் பகவான் என்பது **விசிஷ்டாத்வைதம்.**

"இல்லாதபொருள் தோன்றுவதில்லை, தோன்றும்பொருள் இல்லாமலாவதில்லை, பொருள், தோற்றம், அவற்றின் மாற்றம் எல்லாமே சத்தியம். உடல், உயிர், இறை. . இம்மூன்றும் பிரிக்க முடியாத தத்துவம்" எனக்கூறும் வைணவ விசிஷ்ட்டாத்வைதத்தின் மேற்கோளாக் நம்மாழ்வார்பாசுரம் திகழ்கிறது.

"திடவிசும்பு ஏரிவளி நீர்நிலம் இவைமிசை
படர்பொருள் முழுதுமாய், அவையவை தொறும்
உடல்மிசை உயிர்எனக் கரந்து எங்கும் பரந்துளன்–
சுடர்மிகு சுருதியுள் இவையுண்ட சுரனே".

காணும் உலகமும், காணமுடியாத உயிரும் உண்மையிலும் உண்மை" சரீர – சரீரிபாவம்" எனச் சொல்லப்படும் உறுதியான கருத்தானது, ஸ்ரீ வைஷ்ண வத்தின் தனிச்சிறப்பு, ஸ்ரீஆளவந்தார் முதலான முது பெரும் வைணவஆசார்யர்களது ஏகோபித்த தீர்ப்பாகும்.

Donated By :

P. SANKARAN
SARATHI SERVICE STATION
MANTHAI VELI, CHENNAI - 600 028.

Koviloor Digital Library

ஹரி—ஹரத்வார் மகத்துவம்

வேத இதிகாசங்களிலே "மாயாபுரி" எனப்போற்றப்படும் ஹரித்துவாரிலே, "ம்ருத்யக்ஞர்" எனும் பெயரோடு ஹரனாகிய சிவனுக்கும் மாபெரும் ஆலயம் உள்ளதால் "ஹரத்வார்" என்றும் கொண்டாடப்படுகிறது.

கங்கோத்ரியிலிருந்து இமயமலை முகடுகளிலே சீறிப்பாய்ந்து தாறுமாறாக ஓடிவரும் "பாலகங்கா", இங்குதான் சமதரையிலே சாந்தமாகித்தவழும் "மாதா கங்கை" ஆகிறாள். பத்ரிநாத், கேதார்நாத், அமர்நாத், கங்கோத்ரி, கோமுகி முதலான பல க்ஷேத்ர ஆலயங்களுக்கும் கடந்து செல்ல வேண்டிய தோரணவாயிலாக இருப்பது இந்த ஹரித்வார்.

"ஹரிகிபைரி," ஹரிகாட்" என அழைக்கப்படும் இங்குள்ள அகண்ட கங்கைக் கரையிலேதான், பன்னிரண்டு ஆண்டுக்கு ஒன்று **கும்பமேளா திருவிழா**. இங்குள்ள "சிவலிக்" மலையின்மேல் "மானஸாதேவி" கோயில் மகா சக்தி வாய்ந்தது. கரையோரப் புராதன ஹரியின் ஆலயங்களோடு, பாரத்மாதாமந்திர், "பவன்தாம்" இப்படியாக பற்பல நவீன – அலங்கார – சிவ, வைணவ கதம்பக் கோயில்களும், மக்களின் கவனத்தை ஈர்ப்பதாகும். ஹரித்துவாருக்கு மேலே 15 – மைல் தொலைவிலே. .. மகரிஷிகளின் தபோவனமாகிய ரிஷிகேசம் உள்ளது. இங்குள்ள "ராம்ஜூலா "லக்ஷ்மண்ஜூலா" ஆகிய இரு தொங்குபாலங்கள்... கருத்துக்கு விருந்தாகும் விஞ்ஞான அற்புதங்களாகும். தமிழகத்துச் சிவானந்தரின் "சிவானந்த ஆஸ்ரமம்" ஞானானந்த பல்கலைகழகமாக இங்கே திகழ்கிறது.

Donated By : ARUL GNANI KALPAKKAM ADIGALAR

ARUL MURUGA SOUNDARARAJ MAHARAJA SWAMIGAL

SANTHI NILAYAM

A.P. 936, 66TH STREET, 11TH SECTOR, K.K. NAGAR, CHENNAI - 600 078.

A. No. 18271

Koviloor Digital Library

ஏழுமலைகள், என்னென்ன?

புத்தாயிரமாண்டு – மே – ஜூலை – திருப்பதிக்கு வருவோர்தொகை 50– லட்சத்தை எட்டும் என்பது பத்திரிகை (10–4–2000) செய்தி. 15.4.2000 ஒரே நாளில் ஏழுமலையானை 60 – ஆயிரம் பக்தர் தரிசனம் – சன் (TV) செய்தி. யந்திரத்தால் லட்டு செய்து மாளாமல், இனி மந்திரத்தால் உருட்டிக் குவிக்க வேண்டிய நிலைக்கு வந்துவிட்ட "ஸப்தகிரி" க்ஷேத்திர திருப்பதி ஏழுமலைகளின் வரலாறுகள். . .

பூமியை மீட்பதற்காக ஸ்ரீஆதிவராகப் பெருமானாகத் திருமால் இங்கே தோன்றியதால் **வராககிரி**. சாதுக்களை வதைத்த விருஷபாசுரனை சம்ஹாரம் செய்து பெருமாள் அசுரனை ஆட்கொண்ட திருமலை, **விருஷபாத்திரி.**

ராமாவதாரச் சிரஞ்சீவியான வீராஞ்சநேயனைப்பெற்ற அஞ்சனாதேவி வாழ்ந்ததால் இப்பகுதி, **அஞ்சனாத்திரி**. ஆதிசேஷனே மாமலையாகித் திருமாலைத் தாங்குவதால் **சேஷாத்திரி.**

"வேம் – பாவம், கடம் – எரித்தல் பாவங்கள் அனைத்தையும் எரித்துவிடும் வேங் – கடம் ஆதலால் **வேங்கடாத்திரி.**

தானுகந்ததிருமலையாக ஏழுமலைகளின் மேலே ஸ்ரீமந் நாராயணனே, வேங்கடாசலபதியாக வந்து நின்றதால் **நாராயணகிரி**. வாயுவும், அனந்தனும் போட்டியிட்டு மேருமலைச் சிகரங்களைக் கொண்டு வந்து போட்டதால் **ஆனந்தகிரி**. கிருஷ்ணாவதாரத்தின் பூர்த்தியிலே ஏழுமலைகளும் பாலாஜியும் நிலைபெற்றதாக ஐதிகம்.

Donated By :

DEVARAJ & CO., (REGD)

PH : OFF : 397780
RESI : 391422

"MYSORE REGULAR LORRY SERVICE"
APPROVED "COFFEE BOARD" TRANSPORT CONTRACTORS
18/22, UNION HIGH SCHOOL ROAD, COIMBATORE - 641 001.

Koviloor Digital Library

வேம்பத்தூர் கிருஷ்ணன் பெற்ற விருதுகள்

மகரிஷி சுத்தானந்த பாரதி தந்தது 1981
“சுடர்மணிக் கவிஞர்”





Koviloor Digital Library